

# ஆசிரியம் வெற்றிபெற.....

க. ஞானரெத்தினம்



குமரன் புத்தக இல்லம்



ஆசிரியம் வெற்றிபெற.....

# ஆசிரியம் வெற்றிபெற.....

– கட்டுரைத்தொகுப்பு –

க. ஞானரெத்தினம்
விரிவுரையாளர், கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு · சென்னை
2013

ஆசிரியம் வெற்றிபெற.....
க. ஞானரெத்தினம் எழுதியது

இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 2013

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Asiriyam Vettipera.......
by K. Gnanaretnam

Second edition: October 2013

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo - 06, Tel.: 011 2364550, E-mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -10

வெளியீட்டு எண்: 590

ISBN 978-955-659-404-1

சமர்ப்பணம்

உயர் பண்புகளை ஊட்டி வளர்த்து
சிறந்த மனிதனாக வாழ வேண்டுமென வழிகாட்டிய
என் அன்புத் தந்தை
**உயர்திரு. பொன். கணபதிப்பிள்ளை**
அவர்களுக்கு . . . .

# அணிந்துரை

இந்நூல் ஆசிரியர் க. ஞானரெத்தினம் அவர்கள் இத்தகைய நூல் ஒன்றினை எழுதுவதற்கான சகல கல்வித் தகைமைகளையும், கல்வித் துறை சார்ந்த அனுபவங்களையும் பெற்றவர். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பயின்று 1993 ஆண்டு உயர்தரமான சித்தியைப் பெற்றவர். என்னிடம் கல்வி பயின்று சிறந்து விளங்கும் ஒரு சில மாணவருள் இவரும் ஒருவராவார். பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் கல்வியியல் விரிவுரையாளராக உள்வாங்கப்பட்டவர் அவர்.

விஞ்ஞானத்துறைசார் அறிவுடனும் அணுகுமுறையுடனும் கல்வியியல் துறையில் எழுதுபவர்களின் தேவை இன்று அதிகரித்துள்ளது. இத் துறையில் ஒரு சிறு பற்றாக்குறையும் உண்டு. கணிதக்கல்வி, விஞ்ஞானக் கல்வி. சுற்றாடல்கல்வி, புள்ளிவிபரவியல் போன்ற துறைகளில் இவரைப் போன்றவர்கள் பலவற்றை சாதிக்கமுடியும் என நான் கருதுகின்றேன். நூலின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை சொல்ல வேண்டியன ஏராளம். அவ் உள்ளடக்கத்தில் அவருடைய விஞ்ஞானத்துறைசார் அறிவு நன்கு பிரதிபலிக்கின்றது. Z புள்ளி பற்றிய கட்டுரை இப்புள்ளி பற்றிய அவரது தெளிந்த சிந்தனையைக் காட்டுகின்றது. எப்போதும் ஆசிரியர்களின் கற்பித்தல் உளப்பாங்கு பற்றி குறைபாடுகள் சொல்லப்படுவதால், அதற் கான உடன்பாடான உளப்பாங்குகளை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயும் நோக்குடனேயே இந்நூலை எழுத முற்பட்டதாக நூலாசிரியர் தெரிவிக்கின்றார். இவ்விடயம் பற்றிய முக்கிய கட்டுரை ஒன்றும் நூலில் உண்டு. அத்துடன் மாணவர்களுக்கு சுயகற்றல் திறன்களை வழங்குவதற்கான வழிமுறைகள் பற்றியும் நூலில் ஆராயப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் பணியாற்றும் சகலருக்கும் உதவக்கூடிய ஏராள மான கருத்துக்களை உள்ளடக்கிய இந்நூலுக்கு தமிழ்பேசும் கல்விச் சமூகம் தனது மேலான ஆதரவை வழங்கி நூலாசிரியரை ஊக்குவிக்க வேண்டும் என்பதே எமது பேரவா ஆகும்.

01-03-2013 பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

# முன்னுரை

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு, மனிதவளம் மிகவும் மதிப்புள்ள சொத்தாகும். இந்த மனித வளமே முதலீட்டையும், சாதனங்களையும் விட அதிகமதிப்புள்ளது. நிறுவனத்தின் பங்காளிகளிடம் நல்ல மனப் பாங்கு அமையும்போது அவர்கள் ஒற்றுமையுடனும், குழு உணர்வுடனும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் வேலை செய்வார்கள். பாடசாலை என்கின்ற நிறுவனத்தின் உயர்பங்குதாரராகிய அதிபர், ஆசிரியர்களிடம் நல்ல மனப்பாங்கு இருத்தல் வேண்டும். அதுவே அப்பாடசாலையின் வெற்றிக்கு நல்ல அத்திவாரமாகிவிடுகின்றது.

இத்தகைய பெறுமதிமிக்கவர்களிடையே நல்லவித மனப்பாங்கை ஏற்படுத்துவதற்காக இந்நூல் மலர்கின்றது. எனது 25 வருட ஆசிரியர் பணியில் நான் கண்ட அனுபவங்கள், தேடிய வளங்கள் என்பன இந்நூலை அலங்கரிக்கின்றன. பொதுவாக ஆசிரியர் சமூகம் அறிந்திருக்க வேண்டிய பல அவசிய விடயங்கள் இங்கு கட்டுரையாக இடம்பெற்றுள்ளன. இதற்கு முன்னர் அகவிழியிலும் ஏனைய பாடசாலை சஞ்சிகைகளிலும் என்னால் எழுதப்பட்ட சில கட்டுரைகளும் இற்றைப்படுத்தப்பட்டு இம் மலரை அலங்கரிக்கின்றன. கல்விப்புலத்தில் எனது முதற்குரு பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் இம்மலருக்கு அணிந்துரை வழங்கி யிருப்பது இம்மலருக்கு மேலும் சிறப்பைத் தருகின்றது.

கல்விச் சமூகம் இந்நூலை பெருமனதோடு வரவேற்கும் என நம்புகின்றேன். கணிதம், கல்வி ஆகிய புலங்களில் சேவகனாக இருக்கும் நான் வெளியிடும் முதலாவது மலர் இதுவாகும். இவ்வாறான முயற் சிக்கு உரம் ஊட்டிய பெருந்தகைகள் அனைவரையும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன். மிகவும் சிறப்பான முறையில் கணனி வடிவமைப்பு செய்து உதவிய திருமதி. பி. வரதகுமார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இதனை வெளியிட்டு உதவிய, சமகாலத்தில் முதன்மை வெளியீட்டாளராக திகழ்கின்ற குமரன் அச்சகத்தாருக்கும் எனது மன மார்ந்த நன்றிகள்.

**க. ஞானரெத்தினம்**
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

2013

# உள்ளடக்கம்


அணிந்துரை vii

முன்னுரை viii

1. ஆசிரியம் வெற்றி பெற மனப்பாங்கு மாற்றம் அவசியம் 1
2. ஆசிரிய வாண்மையின் புதிய தோற்றம் 9
3. 'ஆசிரியம்': ஒரு பன்முகப் பார்வை 17
4. கலைத்திட்ட மறுசீரமைப்பு - 2007 எனும் 5E செயற்பாட்டுத்திட்டம் - விமர்சன நோக்கும் பின்னணியும் 27
5. வகுப்பறை முரண்பாடுகளும் முகாமைத்துவ உத்திகளும் 40
6. பல்கலைக்கழக அனுமதி முறையில் Z Score 50
7. உயர்தர வகுப்பிற்கான செயற்றிட்டம் ஆய்வுக்கான அடித்தளம் 61
8. தேசிய பரீட்சை அடைவுகளும் சுய கற்றல் உத்திகளும் 71
9. கணித வழுக்களும் அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளும் 78
10. க.பொ.த. (உ/த) பரீட்சையின் சமகாலப் போக்கு.... 85
11. சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் 94
12. சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கல்விப் பணி 103

உசாத்துணை 108

1

# ஆசிரியம் வெற்றி பெற மனப்பாங்கு மாற்றம் அவசியம்

''மனிதன் தனது மனநிலைகளை மாற்றிக்கொள்வதன் மூலமாக தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்ளலாம் என்பதே எனது தலைமுறையின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும்.''

- வில்லியம் ஜேம்ஸ்

## மனப்பாங்கு

கற்றல் என்பது நிரந்தரமான நடத்தை மாற்றம் என்பதனை நாம் அறிவோம். இத்தகைய தொடர்ச்சியான மாற்றத்திற்கு மனப்பாங்குமாற்றம் அவசிய மானதாகும். மனப்பாங்கு என்பது ஒருவர் தனது சூழலிலுள்ள ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அவருடைய புலக்காட்சிகள், மனவெழுச்சி கள், உந்தல் விசைகள் ஆகியவற்றின் விளைவாக எழுந்து நீண்டகாலம் நிலைநிற்கும் எழுச்சிசார் ஓர் உளத்தொழிற்பாடாகும்.

மனப்பாங்கு ஒருவருடன் பிறந்ததொன்றல்ல. அவர் வளரும் காலத்தில் மனப்பான்மைகளை பெற்றுவருகின்றார். ஒருவரது நடத்தையில் அவரது மனப்பாங்கு மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றது. ஒரு தனி மனிதனது அல்லது நிறுவனத்தினது வெற்றிக்கு சம்பந்தப்பட்டவர்களின் நல்ல மனப்பாங்கே மிக முக்கிய காரணமாகின்றது. நல்ல குணம், நாணயம், நல்ல பண்புகள் மற்றும் நல்ல மனப்பாங்கு என்பன உடைய வர்களே முழுமையான தரமுள்ள மக்கள் ஆவார்கள்.

ஒருவரது மனப்பாங்கில் பின்வரும் '3E'கள் செல்வாக்கு செலுத்துகின்றன:

| | | |
|---|---|---|
| Environment | - | சூழல் |
| Experience | - | அனுபவம் |
| Education | - | கல்வி |

ஒருவர் வாழும் சூழல், அவர் பெற்ற அனுபவம், அவரது கல்வித் தகைமை என்பன அவரின் மனப்பாங்கிற்கு காரணமாக அமைகின்றன. இதற்கேற்பவே அவரது நடத்தையும் அமைந்து விடுகின்றது.

நேர்மனப்பாங்கு, எதிர்மனப்பாங்கு என இருவகையான மனப் பாங்குகள் உள்ளன. நேர்மனப்பாங்கு உள்ள மக்களுக்கென சில தனித் துவமான பண்புகள் இருக்கும். இவர்கள் அன்பாகவும், நம்பிக்கை யுடனும், பொறுமையுடனும், தன்னடக்கத்துடனும் கடமையுணர்வுடனும் எப்பொழுதும் இருப்பார்கள். இவர்களுக்கு எப்பொழுதும் மனமகிழ்வும் சுகமான வாழ்வும் தன்நிறைவும் கிடைத்துக்கொண்டே இருக்கும். இவர்களை எல்லோரும் விரும்புவார்கள். பொதுவாக நல்ல மனப் பாங்குள்ளவர்கள் எல்லாப் பருவகாலங்களிலும் கிடைக்கின்ற பழம் போன்றவர்கள்.

மாறாக எதிர்மனப்பாங்கு கொண்டிருப்பவர்கள் தாமே தமக்கு தடையாகிவிடுவார்கள். இவர்கள் நட்பிலும் வேலையிலும் திருமண வாழ்விலும் உறவைத் தக்கவைத்துக் கொள்வதில் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குவர். இவர்கள் எதிர்மனச்சூழலை வீட்டிலும் வேலைத்தளத் திலும் ஏற்படுத்திவருவர். இவர்கள் தமது தோல்விக்கு அல்லது தவறுக்கு மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டேயிருப்பர். இதனால் இவர் களும் இவர்களைச் சார்ந்தவர்களும் மன அழுத்தத்திற்கும் உடல்நலச் சீர்கேட்டிற்கும் உள்ளாகிவிடுவார்கள்.

ஒரு நிறுவனமாகிய பாடசாலையின் வெற்றிக்கு அதிபர், ஆசிரியர், பெற்றார் ஆகியோரின் நேர் மனப்பாங்கு முக்கியமானதாகும். அப்பொழுது தான் அப்பாடசாலையில் பயிலும் மாணவர்களிடமும் நேர்மனப்பாங்கு வளரமுடியும். இன்று நாட்டில் சுமார் இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் அரச பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தமது தொழில், கடமை நேரம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, இணைப் பாடவிதான நடவடிக்கைகள், மாணவர்களின் விருப்பு - வெறுப்பு, தமது பாடப்புலமை, தொழிற்தகைமை, பயிற்சிகள் என்பன தொடர்பாக பல ஆசிரியர்களிடம் எதிர்மனப்பாங்குகளே அதிகமாக காணப்படுகின்றன.

The black board in the Jungle - 1998 எனும் ஆய்வறிக்கையில்

'இலங்கைப் பாடசாலைகளில் பண்புசார் மாற்றத்தினை ஏற்படுத்து வதில் வளங்கள் அல்லது அமைப்பைப் பொறுத்த மட்டில் பிரச்சினைகள் தென்படுவதில்லை. ஆசிரியர்களின் மனப்பாங்குகளை பொறுத்தவரை யிலே பிரச்சினைகள் காணப்படுகின்றன' என விக்ரோரியா பேக்கர் என்பவர் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர் சமூகம் தமது தொழிலின் மகிமை உணர்ந்தும், மாணவர் சமூகத்தின் எதிர்காலம் கருதியும் நேர் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளவேண்டும். இது பற்றிய விழிப்புணர்வும், நல்ல மனப்பாங்கை பெறுவதற்கான விருப்பமும் கொள்ளவேண்டும்.

## நேர் மனப்பாங்கை வளர்த்துக் கொள்வதற்கான படிநிலைகள்

> ''அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அறிந்து கொள்ள விருப்பமில்லாமை அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.''
>
> - பெஞ்ஜமின் / பிரான்க்லின்

### 1. எல்லாவற்றிலும் உள்ள நல்லதையே பார்த்தல்

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் உள்ள நல்லவற்றின் மேல் கவனம் செலுத்தவேண்டும். ஒரு மனிதனிடத்திலோ அல்லது சூழலிலோ உள்ள தவறானவற்றைப் பார்ப்பதற்குப் பதிலாக எது சரியானது என்று பார்க்கத் தொடங்கவேண்டும்.

வகுப்பறைக்குச் செல்கின்ற ஓர் ஆசிரியர், பல்வேறு குடும்ப பின்னணி, கல்விமட்டம், விருப்பு வெறுப்புள்ள பல மாணவர்களை சந்திக்க வேண்டி வரும். ஒவ்வொரு மாணவரிலும் பல்வேறு திறமைகள் காணப்படும். இவற்றை இனங்கண்டு, மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். வெறுமனே பாடவிடயத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு 'இம்மாணவனுக்கு படிப்பு சரிவராது' என்று கூறிவிடக் கூடாது. இன்று அதிகமான ஆசிரியர்கள் 'நான் படிப்பிப்பது எதுவும் இந்த மாணவர்களுக்கு புரிவதில்லை' என்று கூறக் கேட்டிருக்கின்றோம். இது எதிரான எண்ணமாகும். மாணவரின் தேவையை அறிந்து 'மாண வருக்கு புரியும் விதமாக தன் கற்பித்தல் பாணியை மாற்றியமைத்து கற்பிக்கவேண்டியது சமகால ஆசிரியரின் கடமையாகும். இறைவனின் படைப்பாகிய மாணவர்களிடம் வியத்தகு ஆற்றல்கள் மறைந்துபோய் இருக்கும். அவற்றை வெளிக்கொணர்வது முக்கியமானதாகும். உலகப்

புகழ்பெற்ற ஒரு விஞ்ஞானியின் பாடசாலை காலத்தில் நடந்த ஓர் சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

'ஒரு நாள் காது சற்றுக்கேளாத நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது ஆசிரியர் எழுதிக் கொடுத்த குறிப்புடன் வீடு திரும்பினான். அவனது தாய்க்காக எழுதப்பட்ட அந்தக் குறிப்பில் 'உங்களது மகன் படிப்பதற்கு லாயக்கற்றவன் அவனை பாடசாலையில் இருந்து விலக்கிக் கொள்ளுங்கள்' என எழுதப்பட்டிருந்தது. அதைப்பார்த்த அவனது தாய் 'எனது மகன் ஒன்றும் முட்டாளில்லை. அவனுக்கு நானே கற்பிக்கின்றேன்' என்று பதிலளித்தாள். அந்த மாணவன் தான் பின் நாளில் உலகப் புகழ் பெற்ற தோமஸ் அல்வா எடிசன், மின்குமிழைக் கண்டுபிடித்தவர்.

இதன் மூலம் ஆசிரியர் குறித்த மாணவனின் திறமையை இனங் கண்டு கொள்ளவில்லை என்பது புரிகின்றது. தாயாரும் கவனயீனமாக இருந்திருந்தால் உலகம் ஒரு வியத்தகு விஞ்ஞானியை இழந்திருக்கு மல்லவா.

மேலும் ஆசிரியர் ஒருவர் பாடசாலையிலோ அல்லது வகுப்பறை யிலோ 'அது இல்லை, இது இல்லை, வசதி போதாது' என்ற எதிர் எண்ணங்களை தவிர்த்து உள்ளவற்றை பயன்படுத்தி உச்சப்பயன்பாட்டை அடைவதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளவேண்டும். எதிலும் குற்றம் காணும் மனப்பாங்கு ஆசிரியரிடம் இருக்கக்கூடாது.

அத்துடன் தற்போதைய யுகத்தில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கமைய, கலைத்திட்டம், நிர்வாகம் என்பனவற்றில் பலமாற்றங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. பெரும்பாலும் அவை காலத்திற்கேற்றவையாகவே இருக்கும். இதனை ஆசிரியர்கள் விருப் போடு நடைமுறைப்படுத்த முயற்சி செய்யவேண்டும். உதாரணமாக 'கலைத்திட்டமாற்றமான 5E மாதிரி' இன்று பாடசாலையில் நடைமுறையில் உள்ளது. இது அமுல்படுத்தப்பட்டு பல வருடங்கள் சென்ற நிலையிலும் பல ஆசிரியர்கள் 'இது நடைமுறைச் சாத்தியமற்றது, நேரம் போதாது, முக்கியமானதல்ல, இந்த வகுப்புக்குப் பொருந்தாது' போன்ற எதிர் எண்ணங்களுடனே இருக்கின்றனர். இதனை தவிர்த்து, நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகளுடன் இதனை நடைமுறைப்படுத்த விருப்புக்கொள்ள வேண்டும்.

''எது அவசியமோ அதைச் செய்யத்தொடங்குங்கள்,
பிறகு எது முடியுமோ அதைச் செய்யுங்கள்,
திடீரென முடியாததையும் நீங்கள் செய்து கொண்டிருப்பீர்கள்.''
- செயின்ட் பிரான்ஸிஸ்

### 2. எதனையும், உடனே செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்

நல்லதொரு மனப்பாங்கை உருவாக்கிக் கட்டிக் காத்துக் கொள்ள வேண்டு மென்றால், நிகழ்காலத்திலே வாழ்ந்து எமது வேலைகளை உடனுக்குடன் அப்போதே செய்து முடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இன்றைய நாளே நிட்சயமானது, எல்லாவற்றிற்கும் உகந்த திருநாள். இந்நாளிலே நம் இன்றைய கடமைகள் அனைத்தையும் முடித்து விட வேண்டும். பாடசாலை கடமைகள், வகுப்பறைக் கடமைகள், பாடக்குறிப்பு எழுதுதல் எதுவாக இருந்தாலும் நாளை என்று பின்போடாமல் அன்றே செய்துவரவேண்டும். தள்ளிப்போடுவது என்பது எதிர்மனப்பாங்கிற்கு இட்டுச் செல்லக்கூடியது.

வெற்றிபெற்றவர்கள் எல்லோருமே தம் வேலைகளை தினசரி செய்து முடித்தவர்களே. இன்று நாள் சரியில்லை, நான் விரைவாக செய்து முடிப்பேன், செய்வதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கின்றேன், போன்ற வார்த்தைகளை சிலர் பயன்படுத்துவதை நாம் கண்டிருக்கின் றோம். இவர்கள் எப்போதுமே இத்தகைய வார்த்தைகளைக் கூறிக் கொண்டே காலத்தைக் கழித்து விடுவர்.

''பின்பு என்ற பாதையில் சென்றால்
இல்லை என்ற ஊர் தான் வரும்''

### 3. நன்றி மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளல்

எமது வாழ்வில் நமக்கு எத்தனையோ நன்மைகள் கிடைத்திருக்கின்றன. மானிடப் பிறவி எடுத்ததும், கூன், குருடு, செவிடு நீக்கிப் பிறந்ததும், சிறந்த தொழில் கிடைத்ததும் எமக்குள்ள பெரும் புதையல்களாகும். இதை நினைந்து நாம் நன்றியுணர்வுடன் வாழவேண்டும். மாறாக நமக்குள்ள பிரச்சினைகளையும், குறைகளையும், நினைந்தும் கூறியும் வாழ்ந்தோ மானால் நாம் மகிழ்ச்சியாகவே இருக்கமாட்டோம்.

பாடசாலைக்கு மாணவர்கள் யாருமே வராவிட்டால் ஆசிரியத் தொழில் அவசியமற்றதாகிவிடும். அதேபோல் ஆசிரியர்கள் யாருமே

இல்லையென்றால் அதிபருக்கும், கல்வி நிர்வாகிகளுக்கும் வேலை இல்லாமல் போய்விடுமல்லவா. அவ்வாறாயின் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு நன்றி கூறவேண்டியது அவசியமாகின்றது.

**4. உண்மையான கல்வியைப்பெறுதல்.**

எது மூளைக்கும் இதயத்திற்கும் பயிற்சி அளிக்கிறதோ அதுவே உண்மை யான கல்வியாகும். அறிவு சார்ந்த கல்வியானது நமது மூளையில் தாக்கத்தை ஏற்படுத்தும், பண்புசார்ந்த கல்வியானது இதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். எமது நிறுவனத்தில், வீடுகளில் மதிப்பை உருவாக்க விரும் பினால் நீதி நெறிகளில் நாம் குறைந்த பட்ச கல்வி அறிவையாவது அடைந்திருக்க வேண்டும். நேர்மை, இரக்கம், அன்பு, பொறுமை, வாய்மை, சகிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற விழுமியங்களை உருவாக்கும் கல்வி மிக அவசியமானதாகும்.

ஆசிரியர் ஒருவர் தமது பாடத்தில் புலமை பெற்றிருக்க வேண்டும் என்பது உண்மைதான். அதனைவிட விழுமியக் கல்வி, சமாதானக்கல்வி என்பனவற்றையும் அறிந்திருக்க வேண்டும். மாணவர்களை பண்பாளனாக மாற்றுவதற்கு இது அவசிய மாகின்றது. இதனால்தான் 'ஒருபாடசாலை திறக்கப்படும்போது பத்து சிறைச்சாலைகள் மூடப்படும்' என்ற கருத்தை கல்வியாளர்கள் முன்வைத்தார்கள்.

மாணவர்களை சகல வழிகளிலும் மேம்படசெய்வதற்கான கல்வியை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டியது கட்டாயமானதாகும். இதற்காகவே 'தொழில்த் தகைமை' முக்கியத்துவம் பெறுகின்றது. இன்று அதிக பாட சாலைகளில் காலைக் கூட்டங்களில் நேரம் வீணடிக்கப்படுகின்றது. திட்டமிட்ட முறையிலே பிரார்த்தனைகள், நற்சிந்தனைகள் அதிகமான பாடசாலையில் நடைபெறுவதில்லை. இதற்கு முக்கியமான காரணம் ஆசிரியர் இது தொடர்பாக எதிர்மனப்பாங்கு கொண்டிருப்பதேயாகும். காலைக்கூட்டத்தில் நற்சிந்தனை ஆற்றும்படி கேட்டால் 'இது எமக்கு சரிபட்டுவராது' என்று கூறும் ஆசிரியர்கள் தான் அதிகமாகவுள்ளனர்.

ஆசிரியர்கள் தங்கள் பட்டங்களையும், பெருமைகளையும் புதுப் பித்துக் கொள்வதைப் பற்றி சிந்திக்கதொடங்க வேண்டும். பல வருடங் களுக்கு முன்னர் பெற்ற எமது பட்டங்களும் விடயங்களும், தற்கால மாணவர்களுக்கு எந்தளவு பொருத்தமானது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதனூடாக புதியதும் அவசியமானதுமானவற்றை தேடி

அறிந்து கொள்ளவேண்டும். உண்மையான கல்வி நேர் எண்ணத்தையும் தன்னம்பிக்கையையும் தரவல்லது.

5. உயர்ந்த சுயமதிப்பை வளர்த்துக் கொள்ளுதல்

''நீ எதை நினைக்கின்றாயோ,
அதுவாகவே நீ ஆகிவிடுவாய்''

- சுவாமி விவேகானந்தர்

சுயமதிப்பு என்பது நம்மைப் பற்றி நாம் எப்படி உணர்கிறோம் என்பதே யாகும். நாம் நன்றாக இருக்கின்றோம் என்று எண்ணினால் நமது செயல் களும் உயர்வாகவே இருக்கும். நமது வீட்டிலும் நிறுவனத்திலும் உறவு முறை சீராகவே இருக்கும். எமது உணர்வுக்கும் நடத்தைக்கும் நேரடியான தொடர்புண்டு.

இந்த உலகில் பெறுபவர், கொடுப்பவர் என்று இரு வகையான மக்கள் இருக்கிறார்கள். கொடுப்பவர்களுக்கு மிக உயர்ந்த சுயமதிப்பும், நல்ல மனப்பாங்கும் இருக்கும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவை யும் ஆற்றலையும் அன்பையும் பண்பையும் கொடுப்பவர்கள். இதனால் சமூகத்தில் ஆசிரியருக்கு உயர்ந்த கௌரவம் உண்டு. இதனாலே ''மாதா, பிதா, குரு, தெய்வம்'' என்றனர் நம் முன்னோர். இதனை உணர்ந்து ஆசிரியர்களும் பெருமைக்குரிய பண்பாளராக தம்மை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

6. நல்ல எண்ணங்களுடன் நாளைத் தொடங்குதல்

''நீ இறைவனை காண வேண்டுமாயின்
அதிகாலையில் துயில் எழவேண்டும்''

அதிகாலை வேளையில் துயில் எழுவதும், நல்லவற்றைப் படிப்பதும் அல்லது கேட்பதும் மனதுக்கு அமைதியைத் தரக்கூடியது. இதன் மூலம் அன்றைய கடமைகளை சிறப்பாகச் செய்வதற்கு வழி ஏற்படும்.

காலையில் துயில் எழும்போது மீண்டும் ஒரு பெறுமதி மிக்க நாள் ஒன்று கிடைத்த ஆனந்தத்துடன் துயில் எழ வேண்டும். அன்றைய தினத்தில் செய்யக்கூடிய விடயத்தை திட்டமிடுவதற்கு அதிகாலை நேரம் மிகவும் பொருத்தமானதாகும். வெற்றியாளர்களின் வாழ்க்கை முறைகளை பின்நோக்கிப் பார்க்கும் போது அவர்கள் அனைவரும் அதிகாலையில் துயில் எழும்பியவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். இன்று

பரவலாக அனைவராலும் பேசப்படுகின்ற 'நேரமில்லை' என்ற வார்த்தைக்கு அவர்கள் அதிகாலையில் துயில் எழும்பாததும் ஓர் காரணமாகும்.

ஆசிரியப் பெரியோர்களே, உங்கள் சேவை மகத்தானது. நீங்கள் மனம் வைத்தால் மாணவர்களின் எதிர்காலம் சிறப்புப்பெறமுடியும். இதற்காக நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டும். உங்களிடம் ஒப்படைக்கப்படும் பிஞ்சு உள்ளங்களான, கள்ளம் கபடமற்ற குழந்தை களின் வாழ்வுக்காக நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். அந்த மாற்றத்தின் அடித்தளமாக இருப்பதே ''உங்களது மனப்பாங்கு மாற்ற மாகும்''.

''மனம் உயர செயல் உயரும்
செயல் உயர தனம் உயரும்
தனம் உயர குடி உயரும்
குடி உயர கோ உயரும்''

# 2

# ஆசிரிய வாண்மையின் புதிய தோற்றம்

## அறிமுகம்

குழந்தைகளிடம் முடங்கிக் கிடக்கும் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் செயன்முறையாக 'கல்வி' விளங்குகின்றது. 'உடல், உளம், மெய்ப்பாடு, ஒழுக்கம் என்பன ஒன்றிணைந்த முழுமனிதனை ஆக்குதலே கல்வியின் அடிப்படைக் குறிக்கோளாகும்'. ''கல்வியானது பொதுவானதொரு பண்பாட்டையும் தனியான பகுத்துணர்வையும் ஒழுக்க, சமூக பொறுப்புரிமை உணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும்'' என ஐ.நா. சாசனம் வலியுறுத்துகின்றது.

பெறுமதிமிக்க இக் கல்வியை பாடசாலைகள் அளித்து வருகின்றன. இங்கு நடைபெறும் செயற்பாடுகள் யாவும் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டு மிகப்பெரிய ஆளணியினரால் வழங்கப்படுகின்றன. பாடசாலை முறைமையில் 6 வயது தொடக்கம் 18 வயது வரையான பல வயதுக்குழுவினர் பங்கு கொண்டுள்ளனர். 'மாணவர் மையம்' என்கின்ற கற்பித்தல் முறையினூடாக பாடசாலையின் எஜமானர்களாக மாணவர்களே கருதப்படுகின்றர். இம்மாணவர் தமது தேவை, உரிமை காரணமாக பாடசாலையை நோக்கி படை எடுக்கின்றனர். கல்வியை ஜனநாயகப்படுத்தல், எல்லோருக்கும் கல்வி, கல்வி அடிப்படை உரிமை போன்ற வாதங்களின் விளைவாக பாடசாலைகளில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இன்று எமது நாட்டில் சுமார் 10,000 பாடசாலைகளில் 41 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இம்மாணவர் 13 வருடங்கள் பாடசாலையில் காலத்தை கழிக்கின்றனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு அடுத்த படியாக மிகமுக்கிய மனிதவளத் தொகுதியாக ஆசிரியர்கள் உள்ளனர். இன்று எமது நாட்டில்

224000 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அதுமட்டுமல்லாது ஆசிரியர்களே மிகப் பெரிய தொகையுடைய அரச ஊழியராவர். மொத்த பாடசாலை செலவினங்களில் 80% இற்கு மேலான தொகை ஆசிரியர்களின் ஊதியமாக வழங்கப்படுகின்றது. வகுப்பறை ஒரு பாடசாலையின் இதயப்பகுதியாகும். இங்கு மாணவர்களும் ஆசிரியர்களுமே முதன்மைப் பங்காளிகளாவர். மாணவ - ஆசிரிய இடைத்தாக்கமே கற்றல் - கற்பித்தலின் விளைவுகளில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றது. ஒரு 'வகுப்பறையின் வினைத்திறமை' ஆசிரியர்களைப் பற்றிய புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ளது என்பதை பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. மாணவர்கள் ஆசிரியர்களை எந்த அளவிற்கு உயர்வாக மதிக்கின்றார்களோ அந்தளவிற்கே விளைவுகள் பயனுள்ளவையாகவும் நிலை நிற்பனவாகவும் இருக்கும். மாணவர்கள் தாம் தொடர்பு கொள்ளும் நபர்களில் அவர்களின் மனதைக் கவர்ந்த நபர் ஆசிரியரேயாவார். இவர் மாணவர்களது பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் புரிந்து கொள்ளவும், அவற்றைத் தீர்த்துக் கொள்ளவும், ஆலோசனை வழங்கும் ஒரு வழிகாட்டியாகச் செயற்பட வேண்டியவராகின்றார். இதனால் ஆசிரியர் பணி மகத்தானதும் கடினமானதுமாகும். இப்பணி உடற்களைப்பையும் உளக் களைப்பையும் தோற்றுவிக்கவல்லது. இவற்றின் காரணமாக ஆசிரியர் தொழிலுக்கு பட்டங்கள் நிறைந்த கடதாசித் தகைமை மட்டும் போதுமானதல்ல. வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துவதற்கு ஓர் ஆசிரியரின் தகைமை, அந்தஸ்து, பயிற்சி, மனப்பாங்கு என்பன வெல்லாம் முக்கியமானதாகும். இதனூடாகவே வாழ்க்கையின் இலட்சியத்தை அல்லது பாடசாலையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

## ஆசிரியர் கல்வி

ஆசிரியர் கல்வி என்பது ஓர் தொடர் செயன்முறையாகும். தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு பொருத்தமான அறிவு, பயிற்சி, திறன் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள இச்செயன்முறை உதவுகின்றது. இருப்பினும் ஆசிரியர் கல்வி தொடர்பாக காலந்தோறும் முன்வைக்கப்பட்ட விதந்துரைகள் பெரிதாக வெற்றியளிக்கவில்லை. அண்மைக்கால பல ஆய்வுகள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ் ஆய்வுகளினூடாக சமகால கல்விச் சீர்திருத்தங்கள் 'கல்விசார் ஆளணியை வாண்மைப் படுத்துவதன் மூலம் கல்வி முறைமையின் வினைத்திறனை மேம்படுத்தமுடியும்' என அழுத்தி உரைக்கின்றன. இத்தகைய தொழில்

சார் வாண்மைத்துவத்தை ஆசிரியர் கல்வி மூலமே ஆசிரியர் பெற்றுக் கொள்ளமுடிகின்றது.

## ஆசிரியர் கல்வியில் இரு கூறுகள்

1. **ஆசிரியர்களின் தொடக்கநிலை வாண்மைத்துவக் கல்வி:** இது தொழில் கிடைத்தவுடன் முதன் முதலில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். வகுப்பறைக்கு செல்வதற்கு முன்பாக கற்பித்தல் அனுபவம் எதுவுமின்றி இக்கல்வியை ஆசிரியர் பெற்றுக்கொள்வதாகும். ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியருக்கான முன்சேவை பயிற்சியை இது குறித்து நிற்கும்.

2. **ஆசிரியர்களின் தொடருறு வாண்மைத்துவக்கல்வி:** ஆசிரியர்களின் சேவைக்காலத்தில் கிரமமாக வழங்கப்படுகின்ற வாண்மைத்துவ கல்வியை இது குறிக்கின்றது. இதனூடாக மீளக்கற்றல், புதியன புகுதல், இற்றைப்படுத்தல் என்பன நடைபெறும். மாற்றமுறுகின்ற சீர்திருத்தங்கள், தகவல் தொழில் நுட்பங்கள், ஆராய்ச்சி முடிவுகள் என்பனவற்றை இவற்றினூடாக ஆசிரியர் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ் ஆசிரியர் கல்வியினூடாக மாணவர் பற்றிய உளவியல் விளக்கம், சாதகமான மனப்பாங்கு, நவீன கற்பித்தல் முறைமைகள், கல்வித் தத்துவங்கள், தகவல் நுட்பத்திறன், சமநிலை ஆளுமை, தமது தொழில் பற்றிய தெளிவான பார்வை, மதிப்பீட்டு உத்திகள் என்பன பற்றியெல்லாம் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது.

## ஆசிரியரின் தொழில்வாண்மை

ஒருவர் தம் பணியில் அல்லது தொழிலில் நிபுணத்துவத்தை அடைவதற்கு அவர் பெற்றுக்கொள்ளும் அறிவு, திறன், செயற்பாடுகள் யாவும் தொழில் வாண்மை எனப்படும்.

தொழில்வாண்மை என்பது தகமை, அந்தஸ்து என்பனவற்றை விருத்தி செய்தலாகும் என கார்கிறிவ்ஸ் (2000) கூறுகின்றார்.

இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டக முன் மொழிவுகளில், ஆசிரியரின் தொழில் வாண்மையானது தேர்ச்சி, செயலாற்றுகை, நடத்தை ஆகிய மூன்று பண்புக் கூறுகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இங்கு 'தேர்ச்சி' என்பது அறிவு, மனப்பாங்குகள்,

திறன், ஆளிடைத் தொடர்பு என்பனவற்றின் சேர்க்கையால் உருவாகும் வாழ்க்கைப் பழக்கமாகும். இதனுடாக ஆசிரியர் ஒருவர் பல்வேறு பிரச் சினைகளுக்கு முகங்கொடுக்கும் தயார்நிலை, பாடரீதியான முழுமையான அறிவு, வினைத்திறன் மிக்க கற்பித்தல் நுட்பங்களை பிரயோகித்தல் ஆகிய மூன்று விடயங்களையும் அடைந்து கொள்ள முடிகின்றது. மேலும் பர்க் (1983) என்பவர் குறிப்பிட்ட ஒரு தொழிலுக்காக பின்வரும் தேர்ச்சிகள் அவசியமாகின்றன என்கிறார்:

1. தம் பணியில் விசேடத்துவம்.
2. தம் பொறுப்பான பணிக்கு பொருத்தமான நுட்ப முறைகளையும், தொழில்நுட்பத்தையும் அறிந்திருத்தல்.
3. ஒழுக்கக் கோவைக்கான ஒரு நடத்தைசார் அமைப்பு காணப்படல்.
4. சேவையைப் பெறுவோரின் நம்பிக்கை சிதையாதவாறு செயற்படல்.
5. தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப்புடன் செயற்படல்.

இவ் ஐந்து தேர்ச்சிகளை ஆராய்ந்து நோக்கும் பொழுது, ஆசிரியர் தொழிலுக்கு நியமிக்கப்படும் ஒருவர் அதற்காக அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதற்கு தன்னை தயாராக்கிக் கொள்ள வேண்டும். பாட அறிவுக்கு மேலதிகமாக கல்வி உளவியல், தத்துவம், கற்பித்தல் நுட்பம், மதிப்பீட்டு உத்திகள் என்பனவற்றை தேடி அறிந்து கொள்ளவேண்டும். பல வருடங் களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட தமது பட்டத்தை சமகால தேவைக்கு ஏற்ப இற்றைப்படுத்திக் கொள்வது கட்டாயதேவையாகும். இவற்றை பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகிய பாட நெறிகளி னூடாகவும் அவ்வப்போது நடைபெறுகின்ற தொடருறு வாண்மைத்துவ கல்வியினூடாகவும் பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் உலகம் போற்றும் விஞ் ஞானியுமான டாக்டர் அப்துல்கலாம் 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்கள் 'மாணவர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான கருவி' களாக எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பதோடு இதற்கான புலங்களாக ஆராய்ச்சி, புத்தாக்கம், உயர்தொழில்நுட்ப பயன்பாடு, தலைமைத்துவம் என்பன வற்றை அடையாளங் கண்டுள்ளார்.

மேலும் தொழில்மகத்துவத்தை தருகின்ற ஒழுக்கக் கோவைக்கு கட்டுப்பட்டவராக ஆசிரியர் இருக்கவேண்டும். முன்மாதிரி, நேரம் தவறாமை, சமநிலை ஆளுமை, இனியவை கூறல், உண்மைபேசுதல்,

விட்டுக்கொடுத்தல் என்பனவெல்லாம் ஆசிரியர் ஒருவரை பெருமைப் படுத்தும் அணிகலன்களாகும். இவற்றினூடாக தம்மிடம் சேவை பெறு கின்ற மாணவர்களின் நம்பிக்கை, மரியாதை, அன்பு என்பனவற்றை இலகுவாக பெற்றுக் கொள்ள முடிகின்றது. அத்துடன் தொழில்சார் குழுக்களான சக ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், பிரதி அதிபர், அதிபர், கல்வி நிர்வாகிகள் போன்ற ஆளணியினருடன் சுமுகமான உறவைப் பேணுவதனூடாக அவர்களின் உச்சநிலை ஒத்துழைப்பைப் பெற்று அதியுயர் சேவையை வழங்கமுடியும்.

வாண்மைத்துவத்தின் மற்றைய பண்புக்கூறு 'உயர்மட்ட செயலாற் றுகை' என்பதாகும். இது கலைத்திட்டத்திலுள்ள எண்ணக்கருக்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியரின் ஆற்றலில் வெளிப்படுத்தப்படுகின்றது. வகுப்பறையில் பாடவிடயம் தொடர்பான எண்ணக்கருவாக்கமே கற்றலின் வெற்றிக்கு இன்றியமை யாததாகும். பொருத்தமான கற்றல் வளங்களை பயன்படுத்தி, சிறந்த கற்பித்தல் முறையினூடாக சிறந்த எண்ணக்கரு வாக்கத்தை ஏற்படுத்த முடியும். மேல் கருதப்பட்ட இறுதியான பண்புக்கூறு 'நடத்தை' ஆகும். ஆசிரியரின் ஆளுமை பண்புடன் இது தொடர்புபட்டது. இதனூடாக தோற்றம், உடை, குரல்வளம், தொனி, கற்பித்தல் பாணி என்பன எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய மூன்று பண்புக்கூறு களுக்கும் மேலதிகமாக தொழில்வாண்மையில் செல்வாக்கு செலுத்தும் மற்றுமொரு காரணி 'ஆசிரியர் வகிபங்கு' ஆகும்.

## ஆசிரியர் வகிபங்கு

ஒருவர் தனது தொழிலை சிறப்பிக்கவும் மேம்பாட்டை அடைவதற்காகவும் சேவையாளரின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காகவும் தான் ஏற்றுக்கொள்ளும் நடிபங்கே வகிபங்கு அல்லது வகிபாகம் எனப்படுகின்றது. தனது வயது, அந்தஸ்து, கௌரவம் என்பனவற்றை கருத்தில் கொள்ளாது சேவை யாளரின் தேவை, கவர்ச்சி விருப்பிற்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளவேண்டும். ஆசிரியர் வகிபாகம் குரு - சிஷ்ய முறையில் ஆரம்பித்து காலத்திற்கு காலம் மாறிக்கொண்டே வருகின்றது. இது புதியதோர் உலகு, விரைவாக மாறிவரும் விஞ்ஞான உலகு. தகவல் தொழில்நுட்பம் கோளமயமாதல் போன்ற காரணிகளால் புதிய எதிர் பார்ப்புகளும், பிரச்சினைகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய புதிய அறைகூவலுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு மாணவர்

சமூகத்தை உருமாற்றம் செய்யக்கூடிய 'மாற்ற முகவர்' எனும் புதிய வகிபாகத்தை இன்றைய ஆசிரியர் ஏற்க வேண்டியுள்ளார்.

21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியரின் 'வகிபாகம்' தொடர்பாக யுனெஸ்கோவின் அறிக்கையானது பின்வரும் விடயங்களை எதிர்பார்க்கின்றது:

1. **பாடப்புலமை:** ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்க விளையும் பாடத்தில் போதிய புலமையுள்ளவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு எண்ணக் கருக்கள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை பெற்றிருக்க வேண்டும். இதற்காக ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக தேடல் மிகுந்தவராகவும், கற்றலில் வாழ்நாள் மாணவராகவும் இருத்தல் வேண்டும். தமது பாடம் தொடர்பான சகல நூல்களையும் தான் வைத்திருப்பது சிறந்தது. வகுப்பறைக்கு செல்லுமுன் பாடஆயத்தம் செய்து தைரியத்துடன் செல்வது ஆரோக்கியமானது.

2. **உயர் தொழிற்றகைமை:** இதனூடாக கற்பித்தல் உத்திகள், உபகரணப் பயன்பாடு, புதிய தகவல் தொழினுட்பம் மாணவரின் உளவியல் தேவைகள், மதிப்பீட்டு முறைகள் என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.

3. **தொடர்பாடலின் பிரத்தியேக திறன்:** தான் நினைப்பதை, தான் எதிர் பார்ப்பதை மாணவர் புரியும் படியாக சொல்லக்கூடிய திறனை ஆசிரியர் ஒருவர் பெற்றிருக்க வேண்டும். சிறந்த குரல்வளம், தொனி, சைகைகள், முகபாவம் எல்லாம் இதற்கு அவசியமாகும். அத்துடன் தனது சுயபாஷைக்கு மேலதிகமாக சர்வதேச மொழியாகிய ஆங்கிலத் திலும் தேர்ச்சி பெற்றிருப்பது சமகாலத்தின் தேவையாகும்.

4. **கற்பித்தலில் மாணவர்களை பங்காளிகளாக பயன்படுத்தும் ஆற்றல்:** மாணவர்கள் அமைதியாக செவிமடுப்பவர்களாகவன்றி கற்றலில் பங்காளிகளாக மாற்றும் அக்கறை கொண்டவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். அப்போது தான் வகுப்பறையில் 'மாணவர் துலங்கல்' ஏற்பட இடமுண்டு. தற்போது பயன்படுத்தப்படுகின்ற '5E கலைத் திட்டம்' இச்செயற்பாட்டை மேலும் வள முள்ளதாக்கும்.

5. **படைப்பாற்றல் - புத்தாக்கங்களை ஊக்குவித்தலும் வரவேற்றலும்:** தற்கால மாணவரின் ஆற்றல் அபாரமானது என்பது பலராலும் பேசப் படுகின்ற ஒரு விடயம். அவர்களிடம் முடங்கிக் கிடக்கின்ற ஆற்றல் களை இனங்கண்டு, அதனை வெளிக் கொணர்வது முக்கிய கடமை

யாகும். பொருத்தமான ஊக்குவிப்புக்கள் வழிகாட்டல் மூலம் இதனை இலகுவாக சாதிக்கமுடியும். இன்று பிரபல்யம் பெற்றிருக்கின்ற அதிகமான விஞ்ஞானிகள் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டு, முன்கொண்டு வரப்பட்டவராவர். ஏதாவது ஒரு சிறிய படைப்பைக்கூட மாணவர் செய்யும்போது அதனை தட்டிக்கொடுத்து மேல் நிலைக்குக் கொண்டு வருவது அவசியமானதாகும்.

6. **பிரச்சினைகளை இனங்காணலும் தீர்த்தலும்:** பிரச்சினை நிறைந்தது தான் வாழ்க்கை. பாடசாலையும் சிக்கல் நிறைந்த ஒரு நிறுவனம். அங்கு பல்வேறு விதமான பிரச்சினைகள் மாணவருக்கு இருக்கும். உளவியல், நடத்தை, கற்றல், சமூகமயமாதல் போன்ற பலபிரச்சினைகளை மாணவர் கொண்டுள்ளனர். ஆசிரியர் தமது அனுபவம் மூலம் இவற்றை இனங்கண்டு, பொருத்தமான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக சிரேஷ்ட ஆசிரியர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

7. **சமூக நீதிக்கு முக்கியத்துவம்:** ஆசிரியர் ஒருவர் தான் உயர் விழுமியங்களை பேணும் ஒருவராக இருத்தல் வேண்டும். அப்போது தான் மாணவரிடமும் இதனை ஏற்படுத்தலாம். பாடசாலை சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய உடை, நடத்தை, தோற்றம் கொண்டவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். அத்தோடு பாடசாலை பாரம்பரியத்தை மதிப்பவராகவும் போற்றுபவராகவும் அமைவது சிறப்பானது. தீர்மானங்களை மேற்கொள்ளும்போது நீதிதவறாமல், நேர்மையானவராக எந்தவொரு மாணவர்களும் பாதிக்காதவண்ணம் செயற்படுவது ஆசிரியரின் உயர் தகைமையாகும்.

    கனிவாக பேசுதல், மாணவர்களை ஏற்றுக்கொள்ளல், வாக்கு நாணயம் என்பனவெல்லாம் ஆசிரியர் மாணவர் உறவை வளமாக்கக் கூடியவை. மாணவர்கள் தமது எதிர்பார்ப்புக்கு மாறாக நடக்கும் போது சகிப்புத்தன்மையுடன் நிதானமாக அதனை அணுகுவதன் மூலம் தமக்கு சாதமாக்கிக் கொள்ளமுடியும். கடந்த காலங்களில் பல மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியமைக்கான முக்கிய காரணியாக ஆசிரியரின் நடவடிக்கைகள் அமைந்திருந்ததாக ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

8. **தொழில் மகத்துவம் பேணல்:** தமது தொழிலை நேசிப்பவராகவும், அது தொடர்பாக நேர்மனப்பாங்கு கொண்டவராகவும் ஆசிரியர்

இருத்தல் வேண்டும். இத்தொழிலுக்கு விரும்பியோ அல்லது விருப்ப மின்றியோ வந்திருக்கலாம். ஆனால் தொழிலை ஏற்றுக்கொண்டபின் அதனை மதித்து, அதற்காக தன்னை ஆயத்தம் செய்பவராக ஆசிரியர் மாற்றம் பெறவேண்டும். விரக்தி, விரும்பமின்மை, சலனம் இவற்றுடன் ஆசிரியர் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்த முடியாது. யாரோ ஒரு ஆசிரியரின் முயற்சியும், அர்ப்பணிப்பும், வழிகாட்டலும் தான் நம்மை உருவாக்கியது என்பதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## முடிவுரை

ஆசிரியரே பாடசாலையின் திறவுகோல், எத்தகைய மாற்றங்கள், சீர்திருத் தங்கள் அவ்வப்போது வந்தாலும் கூட, ஆசிரியர் ஒருவர் அதில் நாட்ட முள்ளவராக இருந்தால் மாத்திரமே அது வகுப்பறைக்குச் செல்ல முடியும். கடந்தகால ஆய்வுகள் ஆசிரியர் தொடர்பாக சாதகமான நிலையை தெரிவிக்கவில்லை. ஆசிரியர்களின் பாடப்புலமை, தொழிற்றகைமை, மனப்பாங்கு, நடத்தை எல்லாம் உரிய உயர் மட்டத்தில் இல்லை என்றே கருதப்படுகின்றது. தேசிய ரீதியான விளைவுகள் இதற்கு உதாரணம் காட்டுகின்றன. 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 11.8% ஆனோர் மாத்திரமே வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று வருவதும், க.பொ.த. (சா/த) பரீட்சையில் உ/த இற்கு தகைமை பெறும் மாணவர்களின் சதவீதம் 58.83% ஆக இருப்பதும், க.பொ.த.(உ/த) பரீட்சையில் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவது 61.8% ஆனோராக இருப்பதும் எமது இலக்கு உரிய மட்டத்திற்கு அடையப்பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய புள்ளிவிபரங்களை உச்சநிலைக்கு கொண்டு வருவது ஆசிரியர் சமூகத்தின் கரங்களில்தான் உள்ளது. ஆசிரியரின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும், நேரான மனப்பாங்கும் இதற்கு உறுதுணை யாக இருக்க கூடியவை. நாட்டின் எதிர்கால எஜமானர்கள் இன்று பாட சாலையில் ஆசிரியரின் முன்னால் மாணவர்களாக இருக்கின்றனர். இம்மாணவர் ஒவ்வொருவரும் நாட்டின் முதலீடுகள். இந்த முதலீட்டி னூடாக நாட்டை உச்சநிலைக்கு கொண்டுவருவது ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும். இதற்காக ஆசிரியர் சமூகம் புதிய வகிபாகத்தை ஏற்றுக் கொள்வது காலத்தின் தேவையாகும்.

3

# ‘ஆசிரியம்’: ஒரு பன்முகப் பார்வை

## அறிமுகம்

குழந்தைகளிடம், முடங்கிக்கிடக்கும் திறன்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் செயல்முறையாக கல்வி விளங்குகின்றது. 'கல்வி' எனப்படுவதனுள் அறிவுப் பெருக்கத்துக்கு உதவும் அனுபவங்கள் மட்டு மன்றி மாணவர்களது உடல்வளர்ச்சி, மனவெழுச்சி, முதிர்ச்சி, சமூக வளர்ச்சி போன்றவற்றிற்குத் துணை செய்யும் அனுபவங்களும் அடங்கும்.

கல்விச் செயல்முறைகள் திட்டமிடப்படாமலும், முறைப்பட்டதாக இல்லாமலும் இருக்கக்கூடும் அல்லது இது முறைப்பட்டதாகவும் இருக்கக்கூடும். இவற்றுள் திட்டமிட்டு, முறைப்படி செயல்படுத்தும் கல்வி இன்றியமையாததாகின்றது. இத்தகைய கல்வியினை இளந்தலை முறையினருக்கு அளிப்பதில், சமூகம் மிகுந்த அக்கறை கொண்டு இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. முறைப்பட்ட கல்வியனு பவங்களின் துணையின்றி எவர் ஒருவராலும் தனது திறன்கள், ஆற்றல்கள் ஆகியவற்றினின்றும் முழுப்பயனைப் பெறமுடியாது. இத்தகைய கல்வியை பாடசாலைகள் அளித்து வருகின்றது. பாடசாலைகள், சமூக நிலையங்களுள் முக்கியமான மையப்பகுதியை வகிப்பனவாகும். குழந்தைகளது இளமைப்பருவத்திலே, அவர்களது இளகிய உள்ளத்தில் பயனுள்ள பல அனுபவங்களைப் பதியவைக்கும் மிகமுக்கிய பொறுப் பினைப் பாடசாலைகள் நிறைவேற்றுகின்றன. இப்பொறுப்பினை நிறை வேற்றும் கதாநாயகர்கள் 'ஆசிரியர்' ஆவர். இவர்கள் சமுதாயத்தில் சிறப்புமிக்க உறுப்பினராவர். ஓர் ஆசிரியரது பிரதான பணி குறிப்பாக அறிவையும், நம்பிக்கையையும் இளைய தலைமுறையினருக்கு கையளித்

தலாகும். சூழ்நிலையின் இயல்புகளை உணர்ந்து அதனுடன் முற்போக்கான உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினை குழந்தை அடைவதற்கு ஆசிரியர் உதவுகின்றார்.

வரலாற்று அடிப்படையில் ஓர் ஆசிரியர் அறிவைக் கையளிப்பவர் என்ற பாத்திரத்தையும், விழுமியங்களைப் பாதுகாப்பவர் என்ற பணியையும் வகிப்பார். இவை பின்வரும் மூன்று முக்கிய அம்சங்களுடன் தொடர்புடை யனவாகக் காணப்பட்டன:

1. மாணவர்களின் வயதுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற அறிவை வழங்குதல்.
2. சமூகத்தில் சில விழுமியங்களைப் பேணுதல்.
3. முன்னேற்றமடையாத கலாசார வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்கு அறிவையும், விழுமியங்களையும் எடுத்துச் செல்லல்.

இவ்வாறான 'சிறப்புமிக்க' பணியை ஆற்றுவதற்கு ஆசிரியரிடம் பல செம்மையான இன்றியமையாத பண்புகள் இருத்தல் வேண்டும். இப் பண்புகள் இயற்கையாகவோ அல்லது பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின் விளைவாகவோ ஓர் சிறந்த ஆசிரியரிடம் காணப்படல் வேண்டும்.

இத்தகைய மகிமை பொருந்திய 'ஆசிரியர்' பற்றி பல கோணங்களில் ஆராய்வதே இங்கு கட்டுரையாளரின் நோக்கமாக அமைகின்றது.

**ஆசிரியர் தொழில்**

ஆசிரியர் தொழில் உலகிலுள்ள தொழில்களில் மிக உன்னதமான தொழில் எனப்படுகின்றது. இது சமூகத்தால் கௌரவிக்கப்பட வேண்டிய ஒரு தொழிலாகும். புதிய சமூக விழுமியங்களைத் தோற்றுவிக்க உதவ வேண்டிய ஆசிரியர் அதன் பொருட்டு அறிவினாலும், தொழில் சார்ந்த பயிற்சியினாலும் சிறந்த ஆளுமை பொருந்தியவராதல் வேண்டும். சமூக ஒழுக்கவியல், கலாசாரம் என்பவற்றின் உள்ளடக்கத்தை அறிமுகஞ் செய்து மெருகூட்டும் சமூகச் சீர்திருத்தவாதியாக ஆசிரியர் செயற்பட வேண்டும். பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தி பற்றிய அடைவு மட்டங்களைத் தீர்மானிப்பவர் அவரேயாவார்.

ஆசிரியர் குழந்தைகளின், விருப்பு வெறுப்புகளை உணர்ந்து அவரவர் ஆற்றலுக்கு ஏற்பவும், வளர்ச்சிக்கு ஏற்பவும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்பவும் வழிகாட்டி குழந்தைகளின் அறிவாற்றல், திறன், மனப்பாங்கு ஆகியவைகளை உருவாக்குதல் வேண்டும்.

கற்பித்தல் எளிய செயலன்று. இது உடற்களைப்பை மட்டுமன்றி, உளக்களைப்பையும் தோற்றுவிக்கவல்லது. பிறதொழிலில் ஓரளவு எளிதில், பெயரையும் புகழையும் பெற்றுவிடமுடியும். ஆனால்ஆசிரியர் தொழிலில் இதனை இலகுவாகப் பெற்றுவிட முடியாது. இதனை அமெரிக்க கல்வியாளரான Henry Vendyke இன் 'புகழறியா ஆசிரியர்' பற்றிய சிறந்த கூற்று தெளிவுபடுத்துகின்றது.

மாணவர்கள் தாம், தொடர்பு கொள்ளும் நபர்களில் அவர்களது மனதைக் கவர்ந்த நபர், ஆசிரியரேயாவார். இவர் மாணவர்களது பல்வேறு பிரச்சனைகளை அவர்கள் புரிந்து கொள்ளவும், அவற்றைத் தீர்த்து கொள்ளவும், ஆலோசனை வழங்கும் ஒரு வழிகாட்டியாகச் செயற்பட வேண்டியவராகின்றார்.

சமூகத்தில் வேறு எந்தவொரு தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரைவிட ஓர் ஆசிரியரது தனிப்பட்ட சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவரது நடத்தைக் கோலங்கள் மீது மாணவர் அக்கறை செலுத்துவார்கள். ஏனைய ஆசிரியர், பெற்றார், பழைய மாணவர், பாடசாலைச் சூழல் அனைவரும் ஆசிரியர் மீது கரிசனை காட்டிவருவர்.

'தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை' ஆசிரியர் தொழில்பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

''பாடசாலை முறைமையில், மாணவர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்கள் மிகமுக்கியமான மனித வளத்தொகுதியாகக் காணப்படுகின் றனர். வகுப்பறை ஒரு பாடசாலையில் 'மைய நிலைமை' வகிக்கின்றது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களுமே முதன்மையான பங்காளிகளாவர். மாணவ - ஆசிரிய இடைத்தாக்கமே கற்றல், கற்பித்தலில் கூடிய செல்வாக்கு செலுத்துகின்றன. ஒரு வகுப்பறையின் வினைத்திறமை ஆசிரியர் களைப் பற்றிய புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ள தென்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களை எந்தளவிற்கு உயர்வாக மதிக்கின்றார்களோ அந்த அளவிற்கே விளைவுகள் பயனுள்ள வையாயும் நிலை நிற்பனவாகவும் இருக்கும். இந்த அம்சமானது வகுப்பறையில் இத்தகைய நன்மதிப்பை ஒருவர் காப்பாற்றியிருத்தலை எந்தவொரு மேற்பார்வையினாலும் உறுதிசெய்வதை அவசியமாக்குகின்றது. இதன் இலட்சியநோக்கு 'சுயமேற்பார்வை' என்பதாகும்.''

எமது நாட்டிலே 70% முதல் 80% வரையிலான 'ஆசிரியர்' பொறுப் புணர்ச்சியுடன் செயலாற்றுபவர்களாகவும் பல சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைக்கு சமூகமளிப்பவர்களாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட

பணிகளை, தம்மால் முடிந்தளவுக்கு நிறைவேற்றுபவர்களாகவும் உள்ளனர் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.'

எமது நாட்டிலே இன்று உள்ள ஆசிரியர் தொகை 1,96,022 ஆகும். நாட்டிலுள்ள 10458 பாடசாலைகளிலும் இவர்கள் கடமையாற்றுகின்றனர். இந்தத் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2004 தெரிவிக்கின்றது.

இத்தகைய முடிவுகளிலிருந்து ஆசிரிய தொழிலுக்கு விசேட தகமைகள் உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடிகின்றது. ஆயினும் இது ஒரு சேவையா அல்லது தொழிலா? என்கின்ற வாதமும் நடைமுறை யிலுள்ளது. இது தொடர்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கல்வியாளர் Dr. Sidney Hook என்பவர் 'கற்பித்தல் ஒரு தொழிலாகும்' என்று கூறுகின்றார். மேலும் இவர் ஒரு சேவையை ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்வதாயின் அதற்கு பின்வரும் ஐந்து பண்புகள் இருக்கவேண்டு மென்கின்றார்:

1. குறிக்கப்பட்ட சேவையில் ஈடுபட்டுள்ளோர்கள் தங்களின் விருப்பு வெறுப்புகளைக் கருத்தில் கொள்ளாது பொதுமக்களின் நலனை நிறைவேற்றுவதற்கான சேவையைச் செய்வதற்கு அவாக்கொண்ட வர்களாக இருத்தல்.
2. தொழில் பற்றிய முறையான அறிவைப் பெற்றிருந்து அதற்குரிய அறிவாற்றல், மனப்பாங்கு, திறன்கள் போன்றவற்றில் ஆழமான விளக்கம் பெற்று, அதைத் தேவையான சந்தர்ப்பங்களில் கையாள் வதற்கேற்ற திறமைகளை விருத்தி செய்தல்.
3. தொழிலில் சேரும் பொழுதும், அதற்கான ஆயத்தங்களை மேற் கொள்ளும் பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களைக் காணல்.
4. தொழில் சம்பந்தமாக, முறையாக அமைக்கப்பட்டுள்ள நிறுவன மொன்றில், செயற்பாடுடைய அங்கத்தவராக இருத்தல்.
5. தொழிற்றுறைசார் சம்பந்தப்பட்ட கடமைகளை நடைமுறைப்படுத்தும் போது சுயமாகவும், சரியாகவும் தீர்மானங்கள் எடுக்கும் திறனைப் பெற்றிருத்தல்.

இத்தகைய ஐந்து பண்புகளை கருத்தில் எடுக்கும் போது ஆசிரியருக்கு இவை பொருந்துவதால் 'கற்பித்தல் ஒரு தொழில்' என்ற முடிவை நாம் ஏற்றுக் கொள்ளமுடிகின்றது.

## ஆசிரியர் தகுதி

கல்விக் கொள்கை, கல்வி நிர்வாகம் போன்றவை உயர் மட்டத்தில் உருவாக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்தான். இதனால் அவர்கள் அச்சாணி போன்று முக்கியத்துவம் பெறுகின்றார்கள். பிள்ளைகளின் கல்வியில் நேரடியாகவும், உடனடியாகவும் தாக்கத்தை ஏற்படுத்துபவர்கள் அவர்களே, இதனால் அவர்களது 'தகுதி' வலியுறுத்தப்படுகின்றது.

ஆசிரியர்கள் சமூகத்தின் தலைவர்களாக கருதப்படுகின்றார்கள். இதனால் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையக்கூடிய நடத்தைகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. N. Graves என்பவர் பின்வரும் ஐந்து பரிமாணங்கள் ஆசிரியர் தகுதியை நிர்ணயிக்கின்றன என்கிறார்:

1. தொழில் நுட்பவாரியானது (சிறந்த முறையில் அறிவு வழங்கல்)
2. முனைப்பு வாரியானது (பிள்ளைகள் அறிவு பெறுவதே முனைப்பு)
3. உணர்வு பூர்வமானது (பிள்ளைகளின் பிரச்சனைகளில் அக்கறை)
4. ஒழுங்கமைப்பு ரீதியானது
5. சமூக ரீதியானது (சமூகத் தொடர்பு)

'ஆசிரியர் தேர்ச்சி' பற்றிய கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. M. R. Price என்பவர் 'ஆசிரியர் ஆட்சேர்ப்பு மிக முக்கியம். இது ஓர் உயர்திறன் வாய்ந்த தொகுதி, மேலும் இது கையாலாகாதவர்களுக்கான குப்பை மடுவம் அல்ல. ஆசிரியர்களின் பண்பை நிர்ணயிக்கும் காரணிகளுள் அவர்களை தெரிவு செய்யும் முறை மிக முக்கியமானதாகும்' என்று எடுத்துக் காட்டுகின்றார்.

எமது நாட்டில் கூட 'ஆசிரியர் தகுதி' பற்றி பல பரவலான விமர்சனங்கள் காணப்படுகின்றன. எமது நாட்டில் 1990களின் முற்பகுதிகளில் நடைபெற்ற ஆசிரியர் நியமனங்கள் தொழிலின்மைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் மார்க்கமாகவே அமைந்திருந்தன. இத்தகைய நியமனங்களால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படுமென்பது அப்போது கவனத்திற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பான கருத்துக்கள் 'கல்வி வெள்ளை அறிக்கை 1981' இல் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

சேவைக்கு சேர்த்துக் கொள்ள முன்னர் உரிய பயிற்சியைக் கொடுக்காது கடதாசிக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து வரையறுக்கப்பட்ட சான்றிதழை மட்டும் கவனித்து ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை..... என்று தொடங்குகின்றது'.

இதனைத் தொடர்ந்து, தேசிய கல்வி ஆணைக்குழு 1992ம் ஆண்டு அறிக்கை அத்தியாயம் 6 இவ்வாறு தெரிவிக்கின்றது.

''கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட தெரிவும் நியமனமும் தொடர்பான முறைகள் அதிகளவு அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன... எனத் தொடங்கி குறிப்பாக ஆசிரியர் நியமனங்களைப் பொறுத்தவரை தெரிவு செய்தலானது மிக முக்கிய சமூக அரசியல் பொருளாதார முக்கியத்துவம் உடையது'' என முடிகின்றது.

1977 பொதுக்கல்வி சீர்திருத்த பிரரேரணையில் 17ம் அத்தியாயம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

'எங்கள் நாட்டின் கல்வித் தரமானது வேறு தராதரத்திலே தங்கியுள்ளது' என்ற முன்மொழிவோடு 17.13ம் வசனத்தில் 'ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை மட்டுமே இனிமேல் கல்வி உயர்கல்வி அமைச்சு ஆசிரியர் சேவையில் அமர்த்தும்' என்கிறது.

இவைகளில் இருந்து பொதுவாக 'ஆசிரியர் தகுதி' முக்கியத்துவம் பெறுவதை நாம் அறிய முடியும்.

**ஆசிரியர் அந்தஸ்து**

'ஆசிரியர் அந்தஸ்து' என்ற பதம் காலத்திற்கு காலம் வெவ்வேறு கருத்துப்பட்டதாக அமைகின்றது.

'ஆசிரியர் அந்தஸ்து' என்பதற்கு UNESCOவின் பரீஸ் பிரகடனம் 1966ம் ஆண்டு பின்வருமாறு பொருள் கொண்டுள்ளது:

1. ஆசிரியர் ஆற்றும் பணியின் முக்கியத்துவம் காரணமாக சேவைக்குரிய மரியாதை என்ற அளவு கோலினால் வழங்கப்பட்ட கணிப்பும் அதனைச் செய்யும்போது அவர்களிடம் உள்ள தகுதியும்.
2. தொழிலுக்குரிய வேலை நிபந்தனைகள், வேதனம், பௌதீக நலன்கள் ஆகும்.

ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்வதற்கும், அதற்கு அடிப்படையாக அவர்களின் உரிமைகள், சலுகைகள் சேவை நிபந்தனைகள் என்பன

வற்றிற்கு உத்தரவாதமளிப்பதற்கும் சர்வதேச ரீதியில் பல ஸ்தாபனங்கள் முன்வந்தன. சர்வதேச தொழில் ஸ்தாபனமும் (I.L.O) UNESCO வும் இணைந்து பரீஸ் இல் 1996.10.05 இல் நடாத்திய மகாநாட்டின் இறுதியில் வெளியிட்ட பிரகடனம் 'ஆசிரியர் அந்தஸ்து பற்றிய விதந்துரைகள்' என அழைக்கப்படுகின்றது. இப்பிரகடனம் ஆசிரியர்களின் தொழிற் சங்கப் போராட்டங்களைக் கருத்திற் கொண்டு அவர்களின் அந்தஸ்தினை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் வழிகாட்டலாகக் கொள்ளவேண்டிய கருத்துக்களை இப்பிரகடனம் கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மனிதவள அணுகுமுறை யானது இன்று ஆசிரியரின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தி யுள்ளது. ஆசிரியர்கள் அபிவிருத்திக்கான முதலீடாகவும் கணிக்கப் படுகின்றனர்.

உலகில் பல்வேறு தொழில் துறையினர் உயர்தொழில் வகுப்பினர் என அழைக்கப்படுகின்றனர். எடுத்துக் காட்டாக வழக்கறிஞர், மருத்துவர் களைக் குறிப்பிடலாம். சில தொழில் துறையினர் உயர்தரமான அந்தஸ்தை பெற சில விசேட காரணங்கள் அமைகின்றன.

R. Lewis, H. Monde என்பவர்கள் 1952 இல் செய்த ஆய்வில் உயர் தொழில் புரிபவர்களில், உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது

1901 - 1.12%

1951 - 3.36%

1971 - 4.44%

உயர் தொழில் புரிகின்றனர் என்பதைக் கண்டார்கள். 1951 இற்கு பிறகு ஆசிரியர்களும் இதில் சேர்க்கப்பட்டனர்.

T.H. Marsal என்பவரின் கருத்துப்படி 'உயர்தொழில் அந்தஸ்து' எனக் கூறும்போது தொழில் புரிபவருக்கும், தொழிலை பெறுபவருக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார்.

பாடசாலைகளில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கொண்டு 'ஆசிரியர் தொழில் உயர் அந்தஸ்து' உடையது எனலாம்.

H.L. Wilsnesby என்பவர் 18 உயர் தொழில்களை ஆராய்ந்து, இத்தகைய தொழில்களில் பின்வரும் நான்குக்கு தனிப்பட்ட பண்புகள் உண்டு என்கின்றார்:

1. முழுநேர வேலையாக இருத்தல் வேண்டும்.
2. தனிப்பட்ட அறிவுத் தொகுதி, அதில் சேர்க்கப்படவேண்டும். இதற்கு தொடர்ச்சியான ஒரு பயிற்சி தேவை.
3. உயர்தொழில் என சட்ட அங்கீகாரம்.
4. ஒழுக்கக்கோவை.

வளர்முக நாடுகளில் இந்த நான்கு அம்சங்களும் ஆசிரியர்களுக்கு உண்டு.

ஆகவே 'ஆசிரியர் தொழில் உயர் அந்தஸ்து' உடையது.

**ஆசிரியர் ஒரு முகாமையாளர்**

முகாமைத்துவக் கல்வியும், பயிற்சியும் தற்போது எல்லா நாடுகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. (பேர்கன் 1988)

பின்வரும் காரணங்களினால், வர்த்தகக் கைத்தொழில் முகாமைத்து வங்களிலிருந்து, கல்வி முகாமைத்துவமானது பல அம்சங்களில் வேறுபட்டது.

1. ஆசிரியர் பாடசாலையில் இலாப நோக்கடிப்படையில் செயலாற்ற முடியாது.
2. கல்வியின் விளைவுகளை அளவிடுவது சிரமம்.
3. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் கூட ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடக்கூடியது.

இவ்வாறு 1985 இல் றஸ்ற் என்பவர் கருதுகின்றார்.

இத்தகைய பல காரணங்களை முன்னிட்டு கல்வி விளைவுகளை அதிகரிப்பதற்கு அதன் முகாமைத்துவம் தொடர்பாக அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகின்றது என்பதனை 'சிங்கால் (1989)' தெரிவித்தார்.

ஹண்டி என்பவர் 1986 இல் 'உண்மையில் ஒவ்வொரு ஆசிரியரும் குறிப்பிட்ட மாணவர் தொகையினருக்கு ஒரு முகாமையாளரே, வகுப் பறையானது, ஒரு குழு நடத்தையின் சகல சட்டதிட்டங்களும், ஊக்கு வித்தல் நுட்பங்களும், தலைமைத்துவமும் தொடர்பாடலும் பிரயோகிக்கப் படவேண்டிய பாடசாலை எனும் தாபனத்தின் சிறுகூறாகும்' என்கின்றார்.

இதனால் 'ஆசிரியர் ஒரு முகாமையாளர்' என்ற வாதம் உண்மை பெறுகின்றது.

பொதுவாக முகாமைத்துவமானது ஏழு செயற்பாட்டின் தொடர்பினை உள்ளடக்கியது.

1. பகுத்தாய்தல்
2. திட்டமிடல்
3. ஒழுங்கமைத்தல்
4. நெறிப்படுத்தல்
5. கட்டுப்படுத்தல்
6. இயைபுபடுத்தல்
7. மதிப்பிடல்

ஆகிய ஏழு தொழிற்பாடுகளும் கல்வி விளைவுகளை மேம்படுத்து வதற்காகப் பாடசாலைகளில் கையாளப்படுகின்றன.

இதற்கு ஆதாரமாகப் பின்வரும் ஆய்வாளர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளமுடியும்.

டேவிட் (1984) என்பார். 'ஆசிரியர்கள் தலைவர்களாகவும், அபிவிருத்தியாளர்களாகவும் முதல் நிரை முகாமையாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் மட்டுமன்றி ஆளணி முகாமையாளர்களாக வேண்டும்' என்பதனை அறியமுடிகிறது.

'ஹாகிறீவ்ஸ்' இன் கருத்துப்படி 'சுய அபிவிருத்தியை ஏற்படுத்த, ஆசிரியர்கள் தங்களைத் திட்டமிடுவோராகக் கருத வேண்டும். அத்துடன் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனப்பான்மையும் கொண்டிருக்க வேண்டும்' என்கிறார்.

பொதுவாகப் பாடசாலைகளில் திருப்தியற்ற செயற்பாடுகளுக்கு பல காரணங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அவை ஆசிரியர் ஒருவர்

1. தமது பாடப்பரப்பில் போதிய அறிவின்றியிருத்தல்.
2. தமது தொடர்பாடலில் குறைபாடு
3. தமது கருமத்தை முடிக்க இலக்கு இல்லாதிருத்தல்.
4. தமது செயற்பாட்டில் திட்டமிடல் இல்லாதிருத்தல்.
5. நல்லொழுக்கத்தை நிலை நாட்டத்திறமையின்மை
6. கல்வி அடைவினை ஏற்படுத்தத் தேவையான தகுதி குறைவாக இருத்தல்.

7. வளப்பற்றாக்குறைக்கு ஏற்ப தம்மை இணக்கப்படுத்திக் கொள்ளாதநிலை.

என்பவற்றை உள்ளவராக இருத்தலாகும். இத்தகைய நிலைகளில் இருந்து மீட்சி பெறுவதற்கு 'ஆசிரியர் ஒரு முகாமையாளர்' என்ற கருத்திற் கமைய முகாமைத்துவக் கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

**முடிவுரை**

ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் பின்வரும் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றார்:

அதிபர்
↑
மாணவர் ← ஆசிரியர் → சமூகம்
↓
ஆசிரியர்

இத்தொடர்புகளின் மூலம் நிறைவான செயற்பாடுகளை செய்யவேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

ஒரு மாணவரை தான் நினைத்த வடிவில் மாற்றும் திறமை உள்ள இந்த ஆசிரியர் பெருமைக்குரியவர். இதனால்தான் முன்னோர்கள் 'எழுத்தறிவித்தவன் இறைவன்' எனக் கண்டார்கள்.

பெற்றோரைக் காட்டிலும் பல பாத்திரங்களை எடுக்க வேண்டிய ஒரு ஆசிரியர், தமது கடமையை நன்கு உணர்ந்து, தமது அந்தஸ்துகளுக்கு ஏற்ப, நல்ல முகாமையாளராக இருந்தால் மாணவர் சமூகம் உயர்வு பெறும். அதன் மூலம் நாடு நிறைவு காணும்.

# 4

# கலைத்திட்ட மறுசீரமைப்பு - 2007 எனும் 5E செயற்பாட்டுத்திட்டம்: விமர்சன நோக்கும் பின்னணியும்

எமது நாட்டின் கல்வித்துறையானது பொதுக்கல்வி, உயர்கல்வி என இரு பிரதான பெருங்கூறுகளைக் கொண்டுள்ளது. உயர்கல்வி வாய்ப்பினை அதிகரிப்பதற்கு அடிப்படையாக பொதுக்கல்வி அமைகின்றது. பொதுக் கல்வியில் ஏற்படுகின்ற குறைபாடு, பலவீனம் என்பன உயர்கல்வி வாய்ப்பினையே இல்லாமல் செய்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. இதன் காரணமாக பொதுக்கல்வியின் மிக முக்கியத்துவம் உணரப்பட்டு அவ்வப்போது,பொதுக்கல்வியில் மாற்றங்கள் செய்யப்பட்டு வந்தன. தேசிய கல்வி ஆணைக்குழுவின் 1992ம் ஆண்டிலான அறிக்கைக்கு ஏற்ப 1998ல் பொதுக்கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் முன்வைக்கப் பட்டன. ஆரம்பப்பிரிவு முதல் பல்கலைக்கழகம் வரை பல விடயங்கள் இச்சீர்திருத்தத்திற்கு உள்ளாகின. ஒன்பது தேசிய கல்வி இலக்குகள், ஐந்து தேவையான தேர்ச்சிகள் என்பவற்றிற் கேற்ப இம் மாற்றங்கள் நடைபெற்றன. இச்சீர்திருத்தத்தின் அவசியத்திற்கு பின்வரும் விடயங் களின் குறைபாடுகளே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. தேசிய மட்டச் சாதனை குறைவு, வன்செயல் அதிகரிப்பு, தற்கொலையில் முன்னணி, சர்வதேச சமூகத்தின் விசனம், கல்வியில் வீண்விரயம், தொழில் வேண்டிய போராட்டம் - சத்தியாக்கிரகம் என்பன அவற்றுள் சில.

குறிப்பாக இடைவிலகல் தொடர்பான அப்போதைய ஆய்வில், பாடசாலை செல்லவேண்டிய வயதை அடைந்த பிள்ளைகளில் 97%

ஆனோர் தரம் 1 இற்கு அனுமதி செய்யப்படுவதாகவும் இவர்களில் தரம் 5ஐ பூர்த்தி செய்பவர்கள் 95% எனவும் அறியமுடிகின்றது. மேலும் 70% ஆனோர் க.பொ.த. சா/த இற்கு உள்வாங்கப்படுவதாகவும் இவர்களில் 36% ஆனோர் க.பொ.த. (உ/த) இற்கு அனுமதி பெறுவதாகவும் இவ் ஆய்வு தெரிவிக்கின்றது. மேலும் இவர்களில் 2% ஆனோர் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதாகவும் இவ் ஆய்வு மேலும் கூறுகின்றது. தரம் 1 இல் அனுமதிக்கப்பட்ட இம் மாணவர்கள் சுமார் 13 வருட காலம் பாடசாலை முறைக் கல்வியில் ஈடுபட்டபோதிலும் 98% ஆனோருக்கு நடந்த பரிதாபமான கதிதான் என்ன? நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைகளும் அந்நாட்டின் 'பெரு வளம்' என்பதால் மிக மோசமான வளவிரயம் இங்கு ஏற்பட்டுவருவது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஆராயும்போது 2007 ஆவணியில் உயர்தரப் பரீட்சைக்கு 1, 98, 183 பேர் தோற்றியுள்ளனர். இவர்களில் 20,069 பேர் மாத்திரமே இலங்கையிலுள்ள 14 தேசிய பல்கலைக் கழகங்களுக்கும், 4 உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பரீட்சைக்கு தோற்றியவர்களில் 10.1% ஆனோர் மாத்திரம் உயர் கல்விக்கு அனுமதிக்கப்படுவது மற்றுமொரு வள விரயமாகவே கருதப்படவேண்டும். அனுமதி பெறத்தவறிய சுமார் 90% ஆனோர் தமது கட்டிளைமைப்பருவத்தில் திசை தெரியாமல் திண்டாடுவது எமது நாட்டில் வருடாந்தம் காணக்கூடிய விடயமாகும்.

தொழிற் சந்தைக்குத் தேவையான ஆளணிகளை உருவாக்குவதற்கு தற்கால கல்விமுறை தவறிவிட்டதாக மற்றுமொரு குற்றச்சாட்டுமுள்ளது. வெறுமனே கடதாசித் தகைமைகளை மட்டுமே பட்டதாரிகள் கொண்டுள்ளதாக தனியார் தொழில் அதிபர்கள் நகைக்கின்றனர். இலவசமாக பொதுக் கல்வி, உயர்கல்வி என்பவற்றை வழங்கிய அரசாங்கமே ஏதோ ஒரு தொழிலை அவர்களுக்கு வழங்கவேண்டிய பரிதாபகரமான நிலையிலுள்ளது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என எத்தனை வருடங்களுக்கு முதல் நாம் கூறத்தொடங்கினோம்? ஆனாலும் இன்றும் பாடசாலைகள் இதனைத்தானே செய்து கொண்டிருக்கின்றன. இத்தகைய அவலங்களுக்கெல்லாம் மூலகாரணம் எமது முறைசார் பாடசாலைக் கல்விமுறையில் உள்ள குறைபாடு எனலாம். இந்த கல்விமுறை ஆக்கத்திறன் அற்ற வெறும் அறிவை மட்டுமே வழங்கிவருகின்றது.

நமது நடைமுறைக்கல்வி முறையினூடாக நாம்

- ♦ அறிந்தவற்றைக் கற்றல்
- ♦ முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டவற்றை கற்றல்
- ♦ ஏற்கனவே காணப்படுபவற்றை கட்டியெழுப்புதல்

ஆகிய பணிகளையே மீண்டும் மீண்டும் செய்து வருகின்றோம். புதிய 'சகத்திரம்' எதிர்பார்ப்பது போன்று எமது கல்வி முறையில் பாரிய மாற்றம் ஒன்று அவசியமாகின்றது. இம் மாற்றமானது

- ♦ அறிந்தவற்றைமாற்றியமைத்தல்
- ♦ இதுவரை தீர்மானிக்கப்படாதவற்றை தேடல்
- ♦ எதிர்காலத்திற்கு தேவையானவற்றை கட்டியெழுப்புதல்.

போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்துவதாக அமைதல் வேண்டும். அத்தகைய கல்வி முறைக்கு ஏற்ப 2007ல் அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்ட மறுசீரமைப்பே '5E செயற்பாட்டுத் திட்டம்' ஆகும்.

'ஒன்றிணைந்த பூரணமான ஆளுமை கொண்ட நற்பிரஜைகளை நாட்டிற்கு வழங்குவதே பாடசாலையின் பெரும் பணி' என்ற உயர்ந்த சிந்தனைக்கு '5E செயற்பாட்டுத்திட்டம்' நிட்சயம் வழிவகுக்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

## **ஆசிரியர் வகிபாகம்** (3T Model)

கல்வி மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர் வகிபாகமும் மாறவேண்டியது அவசியமாகும். இத்தகைய மாற்றமானது, 3T மாதிரி வடிவில் விளக்கப் பட்டுள்ளது.

ஆரம்பக்கால கல்வி முறையில் ஆசிரியர் எஜமானராகவும் மாணவன் அடிமையாகவும் இருந்து வந்துள்ளனர். ஆசிரியருக்கே அனைத்தும் தெரியும் மாணவர்களுக்கு எதுவுமே தெரியாது என்ற கோட்பாடும் அன்றிருந்தது. ஆசிரியர் கூறுவதை வேதவாக்காக மாணவர் கேட்டு, குறிப்பெடுத்துக்கொள்ளும் 'ஒரு வழித் தொடர்பாடல்' ஆக இது தொடர்ந்தது. இது கடத்தல் - Transmission வகிபாகம் என அழைக்கப் பட்டது. இங்கு ஆசிரியர் கடத்துபவர் Transmitter என விசேட பெயரைப் பெற்று வந்தார்.

கல்வி என்பது '3H களின் செயற்பாடு' என்ற காந்தியடிகள், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் சிந்தனைக்கு அமைவாக முதலாவது H - Head மாத்திரமே இங்கு செயற்பட வாய்ப்பிருக்கிறது. இங்கு மூளை மாத்திரமே அறிவு சுரங்கத்தைப் பெறும் ஒரு கருவியாக செயற்பட்டது.

இதன் பின்னர் இடைக்காலத்தில் கற்றல் செயற்பாடு இரு வழித் தொடர்பாடலாக மாற்றம் பெற்றது. ஆசிரியர் மாணவர் இருவரும் சமபங்காளிகளாக கடமையாற்றினர். இதனை 'பரிமாற்றம் - Transaction' வகிபாகம் என அழைத்தனர். இச்செயற்பாட்டின் போது ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவர் - Facilitator என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

சமகாலத்தில் மாணவனை எஜமானாகக் கொண்ட 'நிலைமாற்றம் - Transformation' வகிபாகம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இங்கு பல் வழித் தொடர்பாடல் ஏற்பட வாய்ப்பு அதிகமாகும். ஆசிரியர் வளவாளர் Resource person என இவ் வகிபாகத்தில் அழைக்கப்படுவார். காந்தியடிகள் குறிப்பிட்ட 3H களும் அதாவது Head, Hand, Heart அனைத்தும் இங்கு செயற்படுகின்றன. அதேவேளை மாணவர் 'தேர்ச்சி' பெற்றுவருவதை ஆசிரியர், நேரடியாக அவதானிக்க முடியும். தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத் தொடர்பு ஆகிய பல்வேறு கூறுகளின் சேர்க்கையாகும். இத்தனை சிறப்பு மிக்க 'நிலைமாற்றம்' வகிபாகத்திற்கு 5E செயற்பாட்டுத்திட்டம் மேலும் ஆக்கம் அளிக்கவல்லது.

## KASP மாதிரி

| | | | | |
|---|---|---|---|---|
| Knowledge | - | அறிவு | ← | Head |
| Attitude | - | மனப்பாங்கு | ← | Heart |
| Skill | - | திறன் | ← | Hand |
| Practice | - | தொடர்பயிற்சி | ← | H |

P1 — சமூகத்திறன்

P2 — ஆளுமைக் குணவியல்பு

ஆரம்ப காலங்களில் ஆசிரியர் தமது தொழில் தகைமையான பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை பயிலும் போது அவர்களின் உதடுகளில் முணுமுணுக்கும் ஒரே ஒரு வார்த்தை அறிவு, திறன், மனப்பாங்கு என்பதாகும். மாணவனுக்கு முதலில் அறிவை அளவுக்கு அதிகமாக

வழங்கி திறன், மனப்பாங்கு என்பனவற்றில் எவ்வித அபிவிருத்தியுமே ஏற்பட வாய்ப்பிருக்காத கல்வி முறையே ஆரம்பத்தில் இருந்தது. தற்போது சம காலத்திற்கு பொருந்தும் வகையில் KASP மாதிரி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவை ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாக வளர்ச்சியடைந்து செல்வதாகும். குறைவாக அறிவைப் பெற்ற ஒரு மாணவன் தனது விரிமனப்பாங்கு மாற்றத்தினூடாக பயிற்சி மூலம் திறனைப் பெற்று வாழ்நாள் முழுவதும் செம்மையாக வாழ்வதனை இது குறிக்கின்றது.

அறிவு என்பது மூளை (Head) யுடனும் மனப்பாங்கு என்பது இதயத்துடனும் (Heart) திறன் என்பது கை (Hand) உடனும் தொடர்புபட்டு செல்வதாகவும் இது அமைகின்றது. இந்த KASP மாதிரிக்கு ஏற்ப 5E செயற்பாட்டுத்திட்டம் உருவாக்கம் பெற்றுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

## 5E செயற்பாட்டுத்திட்டம்

எந்தவொரு வெற்றிகரமான செயற்பாட்டிற்கும் திட்டமிடல் அவசியமாகும். ''திட்டமிடத்தவறும் ஒருவர் பிழை விட திட்டமிடுகின்றார்'' என்ற கருத்திற்கு அமைவாக ஒரு ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழையும் பொழுது திட்டமிடலுடன் செல்லவில்லையாயின் கற்றல் செயற்பாடு பலவீனமடைந்துவிடும். மாணவர் துலங்கல் ஏற்பட வாய்ப்பே இருக்காது. ஒத்திகை இல்லாத நாடகம் போன்றே அது இருக்கும். இதனால் கடந்த காலங்களில் ஆசிரியர்கள் பாடக்குறிப்புடன் தன் கடமையை செய்வனே செய்து வந்தனர். இதற்கு பதிலாக 5E செயற்பாட்டுத்திட்டம் தற்போது உருமாற்றம் பெற்றுள்ளது. காலத்தின் தேவைக்கேற்பவும் உலகில் ஏனைய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிமயங்களுக்கு அமைவாகவும் ஆசிரியரின் 'நிலைமாற்றம்' வகிபாகத்திற்கு உறுதுணையாகவும் இதனை அர்ப்பணிப்புடன் செயற்படுத்த வேண்டியது வெற்றிகரமான ஆசிரியரின் கடமையாகும்.

இந்த 5E களும்

| | | | |
|---|---|---|---|
| E1 : | Engagement | - | இணைதல் |
| E2 : | Exploration | - | தேடல் |
| E3 : | Explanation | - | விளக்கல் |
| E4 : | Elaboration | - | விரித்தல் |
| E5 : | Evaluation | - | மதிப்பீடு ஆகும். |

இந்த நடைமுறை வகுப்பறைக்கு மட்டுமல்ல, எமது நடைமுறை வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒத்துப் போகக் கூடியதாகும். அதேவேளை ஒவ்வொரு Eகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தாகும்.

**E1 : Engagement - இணைதல்**

வகுப்பறை எஜமானர்களுக்கு வழிகாட்டுவதற்காக வளவாளர் என்ற நடிப்பங்குடன் வகுப்பறைக்குள் நுழையும் ஆசிரியர் ஒருவர் நடத்த வேண்டிய முதற்பணி இதுவாகும். பலதரப்பட்ட உடல், உள, சமூக பிரச்சினைகளால் நசுக்கப் பட்டுள்ள மாணவர்களை மீட்டு தன் வழியே இழுப்பதற்கு ஆசிரியர் கையாளும் உத்தியே 'இணைதல்' ஆகும். மன ஒருமைப்பாடு, பாடத்தில் நாட்டம், இதமான மனநிலை, முன்னறிவை மீட்டல், தேடலுக்கான ஆயத்தம் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு இது வழிவகுக்கும்.

மாணவன் முதலில் தன்னுடனும், அடுத்து ஆசிரியருடனும் இறுதி யாக பாடத்துடனும் பொருத்தப்பாடு அடைவதன் காரணமாக இதற்கு 'இணைதல்' என்ற பெயர் மிகப்பொருத்தமாகும். இணைதல் செயற்பாடு இல்லையேல் இலக்கு எட்டப்படுவது சாத்தியமற்றதாகும். ஒரு வகுப்பறை எத்தகைய உயிரோட்டமாக இருக்கப்போகின்றது என்பதனை 'இணைதல்' செயற்பாடு முன்கூட்டியே தெரிவித்து விடக்கூடியது.

கல்வி உளவியலில் பவ்லோவின் தூண்டி - துலங்கல் கொள்கையுடன் இது தொடர்புபட்டுள்ளது. இச்செயற்பாட்டினூடாக மாணவரிடையே பெரும் துலங்கலை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான தூண்டியை ஆசிரியர் கையாளவேண்டும். பாடம், பாடவிடயம், படிப்பு என்பன கசப்பான ஒரு மருந்து என்ற எண்ணங்களுடன் இருக்கும் அதிகமான மாணவர்களுக்கு இனிப்பான ரொனிக் கொடுப்பதற்கு ஒப்பமான நடவடிக்கையே இதுவாகும். ஒதுக்கப்பட்ட பாடவேளையில் 10 - 20% நேரத்தினை இதற்கு பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. ஆசிரியர் பின்வரும் உத்திகளை 'இணைதல்' செயற்பாட்டிற்காக கையாள முடியும்.

1. வினாக்களை முன்வைத்தல்.
2. படங்கள், செய்தித்தாள், கவிதை, கதைபோன்ற தூண்டிகளைப் பயன் படுத்தல்.

3. விடய ஆய்வை முன்வைத்தல்

4. சம்பாசணை, வகிபாகமேற்று நடித்தல்.

வளவாளரான ஆசிரியர் தான் நடத்தப்போகும் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு மாணவனை செயற்பாட்டுடன் இணைக்கும் நோக்கில் இதனை பொருத்தமான முறையில் 'பிரவேசப்பெட்டி' இல் ஆசிரியர் எழுதிவருவது அவசியமானதாகும்.

**E2 : Exploration - தேடல்**

இணைதல் செயற்பாட்டின் போது மாணவர்களுக்கு விருப்பமான இனிப்பான ரொனிக்கைக் கொடுத்த ஆசிரியர் ஒருவர் மாணவரை உற்சாகப்படுத்தி தைரியத்துடனும் ஆர்வத்துடனும் தேடலில் ஈடுபடுத்தி உரிய தீர்வை அறிந்து கொள்ள வழிகாட்டும் செயற்பாடே 'தேடல்' எனப்படுகிறது. இது கற்றல் செயற்பாட்டின் இதயப்பகுதியாகும். மாணவர்கள் எந்தளவுக்கு தேடலில் ஈடுபடுகின்றார்களோ அந்தளவிற்கு பாடவிடயத்தில் 'முழுமை' பெற்றவர்களாக மாறவும் இடமுண்டு மேலும் எதிர்காலத்தில் ஓர் சிறந்த ஆய்வாளனாக உருமாற்றம் பெறுவதற்கும் வாய்ப்பு அதிகமாகும். தேடல் நிகழ்வின் போது ஆசிரியர் பின்வரும் உத்திகளை கையாள முடியும்:

1. குழுக்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல்.
2. குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.
3. செயற்பாட்டுப் பத்திரம் விநியோகித்தல்.
4. முன்வைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

பொதுவாக குழுக்களின் எண்ணிக்கை நிரந்தரமானதாகவும், அதே உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருப்பது மாணவரிடையே தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்த வழிவகுக்கும். இதனால் குழுக்கள் திட்டமிடப்பட்ட முறையில் மாற்றம் செய்யப்படுவது உளவியல் சார் தேவையாகும். தங்கள் ஒவ்வொரு பணிகளையும் தாங்களாகவே தீர்மானிக்க ஆசிரியர் மாணவருக்கு வழிகாட்டுதல் வேண்டும். அதேவேளை அனைத்து மாணவர்களையும் ஏதோர் செயற்பாட்டில் ஈடுபடுத்த ஆசிரியர் முயல வேண்டும். நியமிக்கப்படும் தலைவர்களைவிட வெளிப்படு தலைவர்கள் வினைத்திறன் மிக்கவராக இருப்பார்கள்.

**E3 : Explanation - விளக்கல்**


ஆபிரகாம் மாஸ்லோ தேவைக்கொள்கையில் கூறியது போன்று ஒவ் வொரு மாணவரும் சுயதிறனில் நிறைவை அடைவதற்கும், கணிப்பை பெறுவதற்கும் இயல்பூக்கம் கொண்டவராக இருப்பார்கள். முதலில் விருப்போடு பாடத்துடன் இணைந்து, பின்னர் ஆர்வத்துடன் தேடியும் தாம் கண்டறிந்தவற்றை தமது சகபாடிகள், ஆசிரியர் முன்னிலையில் ஒப்புவித்து அதன் மூலம் கணிப்பை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் சந்தர்ப்பமே 'விளக்கல்' எனப்படும். 'சந்தர்ப்பம் கிடைக்கும் போது சாதனைகள் பிறக்கும்' என்ற நெப்போலியனின் கூற்றுக்கு இந்த விளக்கல் செயற்பாடு களம் அமைக்கின்றது. அதேவேளை மாணவர்களின் தேவை களை நிறைவு செய்து கொள்ளும் 'கவின் நிலை' கொண்டதாக வகுப்பறை மாறுபடுவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. இதனைவிட ஆளுமை விருத்தி, தொடர்பாடல் தேர்ச்சி என்பவற்றையும் 'விளக்கல்' செயற் பாட்டினூடாக மாணவர்கள் அடைந்து கொள்வர்.

மாணவர் சிறப்பான முறையில் தமது கருத்தினை முன்வைக்கும் போது ஆசிரியரும் ஏனைய மாணவர்களும் செவிமடுத்தல் அவசிய மானதாகும். இதற்கு ஏதுவாக மாணவர் குழுக்களாக தொடர்ந்தும் இருந்து தமது பணிகளை மேற்கொள்வதை விடுத்து 'முழுவகுப்பு' அமைவிட ரீதியாக, அனைத்து மாணவர்களையும் அமரச்செய்து ஆசிரியர் வழி காட்டல் வேண்டும். ஒவ்வொரு குழுக்களும் முன்வைப்பு செய்தபின் ஆசிரியர் மிக நன்று, நன்று, சராசரி, விருத்தியடைய வேண்டும் போன்ற பாராட்டுக்களை வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்துதல் முக்கியமான தாகும். இதன்மூலம் 'விளக்கல்' செயற்பாடு மேலும் விருத்தியடைவதற்கு வாய்ப்பு அதிகரிக்கும்.

**E4 : Elaboration - விரித்தல்**


பாடவிடயங்களை மேலும் விரிவுபடுத்தி 'சரியான எண்ணக்கருவாக்கம்' உருவாக நடைபெறும் செயற்பாடு 'விரித்தல்' ஆகும். ஒரு சிறந்த ஆசிரியரின் பாடப்புலமை, தூரசிந்தனை, தனித்துவம் என்பன வெளிப் படும் சந்தர்ப்பம் இதுவாகும். பாடவிடயம் தொடர்பாக பல சந்தேகங் களுடனும் குழப்பங்களுடனும் இருக்கும் மாணவர்களுக்கு அமிர்தம் கிடைக்கும் வேளையும் இதுவே தான். இங்கு மூன்று முக்கிய அம்சங் கள் ஒன்றின்பின் ஒன்றாக நடைபெறும்.

1. குறை நிரப்புதல்




ஒரு குழு முன்வைத்த கருத்து தொடர்பாக குழுவில் உள்ள ஏனையவர் தமது கருத்தை கூறி விடயங்களை மேலும் விரித்தல் 'குறை நிரப்புதல்' ஆகும்.

2. இற்றைவரை முற்றாக்கல்



ஒரு குழுவின் முன்வைப்பு தொடர்பாக வகுப்பிலுள்ள ஏனையகுழு உறுப்பினர்கள் தமது கருத்தை முன்வைத்தல் 'இற்றை வரை முற்றாக்கல்' எனப்படும். இச் செயற்பாடு மூலம் பாட விடயம் நன்கு அலசி ஆராயப்படும். அதே வேளை மாணவரிடையே போட்டி மனப்பான்மையை தேடலின் ஆர்வத்தையும் ஏற்படுத்தும். மேலும் மாணவர்கள் பல இடங்களிலும் பல விடயங்களை தேடி அறிந்து வருவதற்கும் பல புத்தகங்களை வாசிப்பதற்கும் இதன் மூலம் வழி அமைத்துக் கொடுக்கப்படும்.

3. மீளாய்வு



மாணவர் கூறத்தவறிய விடயங்களையும், தெளிவில்லாமல் கூறிய விடயங்களையும் ஆசிரியர் கூற நினைத்து வந்த அம்சங்களையும் ஆசிரியர் முன்வைத்து பூரண நிறைவை ஏற்படுத்தும் செயற்பாடு 'மீளாய்வு' எனப்படும்.

உதாரணமாக யானையின் உருவத்தை அறியாத ஒருவருக்கு படம் வரைந்து காட்டவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது என்போம். மாணவர்களை ஐந்து குழுக்களாக பிரித்து தும்பிக்கை, முகம், கால், உடம்பு, வால் ஆகிய ஒவ்வொரு பகுதிகளையும் வரையும்படி ஒவ்வொரு குழுவுக்கும் அறிவுரை வழங்கலாம். அவர்கள் வரைந்துள்ள உருவத்தை முன்வைப்பு செய்யும் பொழுது யானையின் உருவம் முழுமை பெறாததாக அமையும். ஆசிரியர் சரியான பரிமாணங்களுக்கு ஏற்ப யானையின் உருவத்தை உண்மைத்தன்மை கெடாதவாறு பொருத்துகின்ற செயற்பாடே 'மீளாய்வு' ஆகும். இங்கு பாட விடயம் தொடர்பாக சரியான எண்ணக் கருவாக்கம் உருவாக்கப்படும்.

இவ்வேளையில் ஆசிரியர் பாடப்பொருள் சுருக்கத்தை கரும்பலகையில் எழுதிக்காட்டுதல் வேண்டும். அப்போது மாணவர்கள் குறிப்பெடுக்க உதவியாக இருக்கும். இதன் மூலம் வீட்டில் மாணவரின் கொப்பிகளை பார்வையிடும் ஆர்வமுள்ள பெற்றோரையும் திருப்தி செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. இப்பாடப்பொருள் சுருக்கத்தை ஆசிரியர்

தெளிவாக திட்டமிட்டு 'மீளாய்வு பெட்டி' இல் எழுதிக் கொண்டு வருதல் வேண்டும். இம் மீளாய்வு செயற்பாட்டு வேளையில் ஆசிரியரின் பாடப் புலமை வெளிப்படுவதால் இது ஆசிரியர் தொடர்பான தெளிவான புலக் காட்சியை மாணவருக்கு ஏற்படுத்தும்.

வகுப்பறையில், விளக்கல், விரித்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் முழுவகுப்பு அமைவில் ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடை பெறும்.

**E5 : Evaluation - மதிப்பீடு**

எந்தவொரு செயற்பாட்டிலும் 'மதிப்பீடு' நடைபெறுவது அத்தியா வசியமாகும். பலம், பலவீனம், நலிவு, சுழிவுகள் என்பனவற்றை மதிப்பீடு காட்டித்தரும். மதிப்பீடு நடைபெறுவது 'அறுவடை' செய்யப்படுவதற்கும் ஒப்பானதாகும். மதிப்பீடு தரம் வாய்ந்தாக அமைவதற்கு கணிப்பீடு அவசியமானதாகும். இதனால் கணிப்பீடு, மதிப்பீடு என்பன ஒன்றுட னொன்று தொடர்புபட்ட இரு விடயங்களாகும்.




கணிப்பீடு: Assessment

அடையவேண்டிய இடத்தை நோக்கி மாணவரை உந்திவிடுதல் கணிப்பீடு ஆகும்.

மதிப்பீடு: Evaluation

மாணவனால்அடையப்பட்ட இடத்தின் மட்டத்தை தீர்மானித்தல் மதிப்பீடு ஆகும்.


உயரம் பாய்தல் போட்டியில் பங்குகொள்ளும் ஒருவர் முதல் தடவை யாக பாயும் போது தவறிவிடுகின்றார் எனக் கொள்வோம். அவர் மீண்டும் பாயவைப்பதற்காக சகபாடிகளும் ஆசிரியர்களும் தைரியமூட்டி, உற் சாகப்படுத்தி, நுணுக்கங்களை தெரியப்படுத்துவது வழமை. இச்செயற்பாடு

'கணிப்பீடு' ஆகும். இதன் காரணமாக போட்டியாளர் மீண்டும் அந்த இலக்கை பாய்ந்து விட்டார் எனின் நடுவர் அளவு நாடாமூலம் அந்த உயரத்தை அளந்து குறித்துக்கொள்வார். இந்தச்செயற்பாடு 'மதிப்பீடு' ஆகும். ஆகவே மதிப்பீட்டை பெறுமதியாக்க கணிப்பீடு அவசியம் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளலாம். பரிசோதனை மூலம் ஸ்கின்னர் முன்வைத்த நிரலித்த போதனைக்கான செயற்பாடே கணிப்பீடும் மதிப்பீடும் ஆகும்.

வகுப்பறையில் தேடல் (E2) செயற்பாட்டின் ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர் கணிப்பீட்டுப் பணியை தொடங்குதல் வேண்டும். ஒவ்வொரு மாணவர்களையும் ஆசிரியர் அவதானித்து, அவர்களுக்கு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைப்பதும் அவசியமானதாகும். மேலும் கணிப்பீடு நடைபெறும் வேளைகளில் இரு விடயங்களை ஆசிரியர் மேற்கொள்ளவேண்டும்.

1. **பின்னூட்டல் - Feed Back:** மாணவரின் இயலாமைகள், நலிவுகள் என்பன இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆசிரியரினால் நடாத்தப்படும் செயற்பாடு இதுவாகும். விசேடமாக மெல்லக்கற்போர் இங்கு கூடிய கவனம் செலுத்தப்படுவார்கள்.

2. **முன்முகவூட்டல் - Feed Forward:** மாணவரின் இயலுமைகள், வலிவுகள் இனங்காணப்பட்டு அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக ஆசிரியரினால் நடாத்தப்படும் செயற்பாடு இதுவாகும். இங்கு சராசரி மாணவர்களும் மீத்திறன் மாணவர்களும் கூடிய கவனம் செலுத்தப் படுவார்கள். கணிப்பீடு. மதிப்பீட்டின் போது ஆசிரியர் குறைந்தது ஐந்து நியதிகளை அமைத்துக் கொள்ளமுடியும். அவை




1. பாடவிடயம் சார்ந்த அறிவு (K)
2. பாடவிடயம் சார்ந்த மனப்பாங்கு (A)
3. பாடவிடயம் சார்ந்த திறன் (S)
4. அன்றாட வாழ்வுக்கு வேண்டிய ஓர் முக்கிய ஆற்றல் (P1)
5. மேலும் ஓர் ஆற்றல் (P2)

**முடிவுரை**

பல சிறப்பம்சங்களை கொண்டது இந்த 5E செயற்பாட்டுத் திட்டம். இது செம்மையாக நடைமுறைப்படுத்தப்படும் போது சுமார் 8 வருட காலம் ஒரு மாணவன் இந்த கலைத்திட்ட முறையினூடாக பயிற்றப்பட்டு பூரண புலமை பெற அதிக வாய்ப்புள்ளது. இதன் மூலம் எமது நாட்டு மாணவர் களின் கொள்ளளவு சர்வதேச அந்தஸ்தை எட்டிப்பிடிக்க வழிஏற்படும். இது தற்கால ஆசிரியர் சமூகத்தின் கைகளிலே தங்கியுள்ளது. ஏனெனில் அனைத்து செயற்பாட்டினதும் திறவுகோல் ஆசிரியர்களேதான்.

இன்று அனைத்து பாடசாலைகளிலும் மாணவர் குழுக்களாக பிரிக்கப்பட்டு வகுப்பறையில் காட்சிதருகின்றனர் ஆயினும் கற்றல் பாணி பழைய பாரம்பரிய முறையிலே நடைபெறுவதாகவும் குறை கூறப்படுகின்றது. இதற்காக

- நேரப் பற்றாக்குறை.
- அசிரியருக்கு போதிய விளக்கமின்மை.
- ஆசிரியரின் எதிரான மனப்பாங்கு.
- அதிபரின் உற்சாகமும் ஆலோசனையும் இன்மை.
- வளவாளர்களிடையே இது தொடர்பான ஒருமைப் பாடின்மை.
- வினைத்திறன் மிக்க மேற்பார்வை இன்மை.

போன்ற பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏதுவா யிருப்பினும் ஒரு ஆசிரியர் 'மாற்ற முகவர்' என்றஅடிப்படையில் வகுப்பறைக்குள் இதனை நிறைவேற்றவேண்டிய பெரும் பொறுப்பு மிக்கவராவார்.

## இணைப்பு

5E செயற்பாட்டுத்திட்டக் கட்டமைப்பு (மாதிரி)

தேர்ச்சி :

தேர்ச்சி மட்டம் :

செயற்பாடு :

நேரம் : .......... நிமிடம்

தரவிருத்தி உள்ளீடுகள் : ..........................................................
..........................................................
..........................................................

கற்றல்

கற்பித்தல் சென்முறை :

இணைதல் : ..........................................................

| பிரவேசப் பெட்டி |
|---|

(....நிமிடம்)

படிமுறை : ..........................................................

தேடல் : ..........................................................

கணிப்பீடு : ..........................................................

விளக்கல் : ..........................................................

விரித்தல் : ..........................................................

மதிப்பீடு : ..........................................................

| மீளாய்வுப் பெட்டி |
|---|

(.....நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பாடவிடயம் சார்ந்த அறிவுக்கூறு
- பாடம் சார்ந்த மனப்பாங்கு
- பாடம் சார்ந்த திறன்
- அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமான ஒரு ஆற்றல்
- அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமான மற்றுமோர் ஆற்றல்

5

# வகுப்பறை முரண்பாடுகளும் முகாமைத்துவ உத்திகளும்

''வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்வதில்லை அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்''

- Shiv Khera

**வகுப்பறை**

''நான்கு சுவர்களைக் கொண்ட அறையைக் கல்விக் கூடம் என்பதனை விட, ஆற்றலையும் அறிவையும் மழுங்கடிக்கச் செய்யும் ஒரு சிறைச்சாலை எனலாம்.''

- Ivan Illich

வகுப்பறையே பாடசாலையொன்றின் மையநிலைப்பகுதியாகும். நான்கு சுவர்களைக் கொண்ட 20 x 20 அளவான அறையினுள் சுமார் நாற்பது மாணவர்கள் அவர்களது தளபாடங்களுடன் பாடசாலை நாளொன்றில் சுமார் ஆறு மணித்தியாலங்கள் காலத்தைக் கழிக்கின்றனர். ஒரு வகுப்பறை பெரும்பாலும் ஒரே வயதுக் குழுவினரைக் கொண்டுள்ள போதிலும் அவர்களது விருப்பு, வெறுப்பு, தேவைகள், சிந்தனைகள், செயற்பாடுகள், தகைமை மட்டம், குடும்பப்பின்னணி, சூழல் அனைத்தும் மாறிகளாகவே உள்ளன. ஒரு பாடவேளைக்காக செல்லுகின்ற ஆசிரியர் ஒருவர் இத்தனை மாணவர்களையும் தன்பால் ஈர்த்து தனது நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்காக அரியமுயற்சி செய்ய வேண்டியுள்ளது. வகுப்

பறையின் 'முதல்நிலை முகாமையாளர்' என்ற பெருமைக்குரிய ஆசிரியரின் இவ்வரிய முயற்சிக்கு தமது பாடப்புலமையும் தொழில்தகைமையும் வழிகாட்டுகின்றன. வகுப்பறையில் காத்திருக்கின்ற அனைத்து மாணவர்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் நிறைவேற்றி வெற்றிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்த வேண்டியது ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும்.

> "ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியரின் செயற்பாட்டில்
> முக்கியமானது வகுப்பறையில் ஒரு கற்றல் சூழலை
> வருட ஆரம்பத்திலே ஏற்படுத்துவதாகும்."
>
> \- Mary Beth

சமகாலத்தில் கற்றல் சூழலை ஏற்படுத்துவதிலும் வகுப்பறையை மகிழ்ச்சிகரமாக பேணுவதிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் தோல்வியையே கண்டு வருகின்றனர்.

இந்த தோல்வியானது இலங்கை கல்வி வரலாற்றில் நான்கு தசாப்தமாகவே இருந்து வருகின்றது. இதற்கு ஆதாரமாக 1992 மே இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையின் சில வாசகங்களை இங்கு முன்வைக்க முடியும்.

இவ் அறிக்கையின் 5வது அத்தியாயத்தில் வகுப்பறை தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

1. வகுப்பறை தொழிற்பாடு மிகவும் ஒரே பாங்காய் ஒரே தொனியில் அமைந்திருந்தது.
2. வகுப்பறைகளில் 'சோம்பல் கதை அமர்வுகளே' அதிகமாக இருந்தன.
3. ஆசிரியர் முற்று முழுக்க பள்ளி மாணவரின் பாடப் புத்தகத்தையே நம்பியிருந்தார்.

இத்தகைய வாசகங்கள் இக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக இருப்பதாகவே அவதானங்கள் தெரிவிக்கின்றன. வகுப்பறை, கற்றல் - கற்பித்தல், கலைத்திட்டம் தொடர்பாக ஏராளமான மாற்றங்களையும் புதுமைகளையும் கல்விச் சமூகம் அவ்வப்போது புகுத்தி வந்துள்ளபோதிலும் வகுப்பறை தொடர்பாக, விசேடமாக குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் தென்படவில்லை என்றே அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

## முரண்பாடுகள்

''யுத்தம் ஏற்படுவது மனித மனங்களுக்குள்ளே ஆகும்.
ஆகையால் சமாதான வேலி கட்டவேண்டியது
மனித மனங்களுக்குள்ளேயே''

- யுனஸ்கோ

முரண்பாடு என்பது தனிமனிதனுக்குள்ளே அல்லது இருவருக்கிடையே அல்லது மேற்பட்டோரிற்கிடையே உருவாகும் கருத்து வேறுபாட்டால் அல்லது எதிர்ப்பின் பேறாக தோற்றம் பெறக்கூடியதாகும். இதனை 'எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், தேவைகள் என்பனவற்றிற்கிடையேயான இணக்கப்பாடின்மை' எனவும் கூறலாம். இது தனிமனிதனுக்குள்ளேயே மனச்சாட்சிக்கும் - கடமைக்கும் இடையிலோ அல்லது எதிர்பார்ப்பிற்கும் - விளைவிற்கும் இடையிலோ இலகுவாக உருப்பெறக்கூடியதாகும். ஒரு வார்த்தை அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு பொருள் அல்லது ஒரு மனிதன் என்பன முரண்பாட்டின் அடிப்படை காரணிகளாகின்றன. முரண்பாட்டின் விளைவாக மனஅழுத்தம் ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகின்றன.

முரண்பாடுகள் ஆரம்பத்தில் ஒரு சிறு ஏது காரணமாகத் தோன்றி, பெருந்தொகையானோரை உள்ளடக்கி உலக யுத்தத்திற்கே அத்திவார மிடக்கூடியதாகும்.

உதாரணமாக வகுப்பறையில் ஒரு மாணவனுக்கு தனது பாடத்தின் மீதோ அல்லது ஆசிரியர் மீதோ அல்லது வகுப்பறை மீதோ ஏற்படுகின்ற ஒரு சிறு முரண்பாடானது அவனை பாடசாலையை விட்டு வெளியேற்றி, வாழ்நாளில் கல்விக்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்துவிடக்கூடிய தாகும். இதனால் அம்மாணவனின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகின்றது.

## வகுப்பறையில் முரண்பாட்டிற்கான இடைத் தொடர்புகள்

''குழப்பநிலை என்பது வாழ்க்கையின் ஆற்றல்,
அது உண்மையில் மாற்றத்திற்காக எமக்கு
கிடைக்கும் வாய்ப்பு.''

- Ramsay Clark

வகுப்பறையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய பிரதானமான தனியாள் தொடர்புகள் பின்வருமாறு அமையலாம். அவை

மாணவர் - பாடம்

மாணவர் - மாணவர்

மாணவர் - ஆசிரியர்

மாணவர் - அதிபர் என்பனவாகும்.

குறிப்பாக, ஒரு பாட அலகு மாணவருக்கு சரியாக விளக்கம் பெறப்படவில்லையாயின் அம்மாணவன் அப்பாடத்தின் மீதும், கற்பிக்கும் ஆசிரியர் மீதும் முரண்பாடு அடைகின்றான்.

**முரண்பாட்டின் உடனடி விளைவுகள்**

> "நான் வெகுநாட்களுக்கு முன்பே பன்றியுடன் மோதக்கூடாது
> என்பதைக் கற்றுக் கொண்டுவிட்டேன். ஏனெனில்
> நான் அசுத்தமாகிவிடுவேன். அதோடு பன்றியும்
> அதையே விரும்புகின்றது."
>
> - சைரஸ் சிங்

வகுப்பறையில் சிறிதாக உருவாகும் முரண்பாட்டின்போது பின்வரும் விளைவுகளை உடனடியாக அவதானிக்க முடியும்.

- கண்கள் நேருக்கு நேர் நோக்காமை
- பேச்சுவார்த்தைகளைக் குறைத்துக் கொள்ளல் அல்லது தவிர்த்தல்
- குறை கூறுதல்.
- ஒதுங்கியிருத்தல்.
- தாழ்வுச்சிக்கல்.
- வெறுப்பை வெளியிடல்.
- கடமையை பற்றுணர்வுடன் செயற்படுத்தாமை.
- ஒவ்வாமை.
- வெளியேறுதல்.

வகுப்பறையின் 'முதல்நிலை முகாமையாளர்' ஆசிரியர் என்ற வகையில், முரண்பாடு தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருக்கக்கூடியவரும் ஆசிரியராகவே பெரும்பாலும் இருக்கின்றார். வகுப்பறையில் ஆசிரியரின் வார்த்தைப்பிரயோகம், கற்பித்தல் பாணி, அணுகுமுறை, நேர்மையற்ற

செயற்பாடு ஆகியன மாணவரின் பிஞ்சு உள்ளங்களின் முரண்பாட்டினை மிகவும் இலகுவாக ஏற்படுத்திவிடக்கூடியது. மாணவர்கள் பல்வேறு கோணங்களில் ஆசிரியரை எதிர்பார்த்திருப்பர். இவை நிறைவேறாத போது இலகுவாக முரண்பாடு உருவாகிவிடும்.

'ஒரு வகுப்பறையின் வினைத்திறமை ஆசிரியர்களைப் பற்றிய மாணவர்களின் புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ளது' என்பதனை தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக The black board in the Jungle - 1998 எனும் ஆய்வறிக்கையில்

'இலங்கைப் பாடசாலைகளில் பண்புசார் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் வளங்கள் அல்லது அமைப்பைப் பொறுத்தமட்டில் பிரச்சினைகள் தென்படுவதில்லை. ஆசிரியனின் மனப்பாங்குகளை பொறுத்தவரையிலே பிரச்சினைகள் காணப்படுகின்றன' என விக்ரோறியா பேக்கர் என்பவர் குறிப்பிடுகின்றார்.

### முரண்பாட்டுவகைகள்

தனி ஒரு மனிதனிடத்தே முரண்பாடு தோன்றுவதற்கு ஏதுவாக அமையும் காரணங்களை பொதுவாக ஐந்து பிரிவுகளாக வகுக்கலாம்.

1. தனியாள் தொடர்பு முரண்பாடு.
2. தகவல் முரண்பாடு.
3. அறநெறி முரண்பாடு.
4. அமைப்புசார் முரண்பாடு.
5. தேவைகள் சார் முரண்பாடு.

### 1. தனியாள் தொடர்பு முரண்பாடு

வகுப்பறையில் விளக்கமின்மை, தவறான புரிந்துணர்வு, தொடர்பாடல் குறைபாடு, பிழையான தீர்மானம், பரிவுடன் செயற்படாமை, செவி சாய்க்காமை, பக்கம் சாய்தல், தனது கருத்தை மட்டும் சரியென ஏற்றல் போன்ற காரணிகளால் தனியாள் தொடர்பு முரண்பாடு ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்களின் இத்தகைய முரண்பாடுகள் அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தி கல்வியில் பின்தங்கும் நிலையை உருவாக்குவதோடு உடல் - உள குறைபாடுகளையும் ஏற்படுத்திவிடும்.

### 2. தகவல் முரண்பாடு

பாடவிடயமாகிய தகவல்களில் உள்ள தவறுகள், குறைபாடுகள், நிறைவின்மை போன்றவற்றால் வகுப்பறையில் தகவல் முரண்பாடு ஏற்படுகின்றது.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது சரியான எண்ணக்கரு வாக்கம் உருவாகும் வண்ணம் ஆசிரியர் தமது கற்பித்தலை நடாத்துதல் வேண்டும். இல்லையேல் மாணவர் மத்தியில் தகவல் முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு. அதேவேளை மதிப்பீடு நடைபெறும் வேளையின் போது வினாக்களின் மயக்கம் காரணமாகவோ, பாடவிடயம் சரியாக தெரிந்திராததன் விளைவாகவோ அல்லது மாணவர் பிழையாக விடை யளிக்கும் போதோ இத்தகைய முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.

### 3. அறநெறி முரண்பாடு

சமகாலத்தில் ஒரு வகுப்பறையில் ஆசிரியர் - மாணவரிடையே அதிகள வாக ஏற்படுவது அறநெறிசார் முரண்பாடுகளாகும். பாடசாலை சட்ட திட்டங்களை மாணவர் மதிக்காதபோதும், அதிபர் - ஆசிரியர்களை மதிக்காதபோதும் ஏற்படுவது அறநெறி முரண்பாடாகும். மேலும் வகுப்பறையில் மாணவர் அமைதியாக இராமை, அறிவுறுத்தல்களை பின்பற்றாமை, சுத்தம் பேணாமை, வீட்டு வேலைகளை நிறைவேற்றாமை என்பனவும் மாணவரிடையே ஏற்படும் பிணக்குகள் என்பனவும் இத்தகைய முரண்பாட்டின் விளைவுகளே.

### 4. அமைப்புசார் முரண்பாடுகள்

யாதுமோர் நிறுவனத்துடன் ஒவ்வொரு நபரும் பெறும் இடம் ஒழுங் கமைக்கப்பட்டுள்ள விதமே 'அமைப்பு' என்பதால் கருதப்படுகின்றது.

குறிப்பாக வகுப்பறையில் மாணவர் சமமாக, நேர்மையாக நடாத் தப்படாதபோது இத்தகைய முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. வகுப்பு தலைவர், மாணவர் தலைவர் தெரிவு நடைபெறும் போது, போட்டிகளுக்கு மாணவர்களை தெரிவு செய்யும்போது அதிபரோ அல்லது ஆசிரியரோ பக்கச்சார்பாக நடந்து கொண்டால் மாணவர் மத்தியில் இத்தகைய முரண் பாடுகள் ஏற்படுகின்றன. அதேவேளை பாடவேளையின்போது ஆசிரியர் ஒருவர் குறித்த ஒரு மாணவன் மீது கூடிய அக்கறை காட்டும்போதும் ஏனைய மாணவர் முரண்படநேரிடும். மேலும் வருட ஆரம்பத்தில்

வகுப்பில் புதிதாக சேரும் மாணவர்கள், பழைய மாணவர்களால் புறக் கணிக்கப்படும் போதும் இத்தகைய முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு அதிகமாகும்.

### 5. தேவைகள் சார் முரண்பாடு

எந்த ஒரு உயிருக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை பல தேவைகள் அவசியமானவையாகும். இது இயற்கையான ஓர் இயல் பூக்கமாகும். இந்த தேவைகள் உடல் சார்ந்ததாகவோ அல்லது உளம் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

ஏற்கனவே இங்கு கருதப்பட்ட அனைத்து முரண்பாடு களுக்கும் அடிப்படையாக அமைவது தேவைகள் நிறைவேற்றப் படாமையேயாகும். இதனால் ஏனைய முரண்பாடுகள் யாவும் இதனுள் அடக்கப்படவும் கூடும். அமெரிக்க உளவியலாளரான ஆபிரகாம் மாஸ்லோ என்பவர் தேவைக் கொள்கையை முன்வைத்துள்ளார். அவை

1. உடலியற் தேவை.
2. காப்புத்தேவை.
3. அன்பு உறவுத்தேவை.
4. கணிப்புத் தேவை.
5. சுயதிறனில் நிறைவுதேவை.

என்பனவாகும்.

வகுப்பறையில் இத்தேவைகள் ஆசிரியரால் நிறைவேற்றப்பட வேண்டியது கட்டாயமானதாகும். மாணவர்கள் தங்கள் ஆசிரியரிடம் அன்பு, உறவு, பாதுகாப்பு, கணிப்பு, பாராட்டு, ஊக்குவிப்பு, வழிகாட்டல் அனைத்தையும் எதிர்பார்த்தே பாடசாலைக்கு வருகின்றனர். இவற்றை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

### முரண்பாட்டு முகாமை

"எம்மால் காற்றினை நிறுத்த முடியாது
ஆனால் காற்று வீசும் திசையை அறிந்து - எம்
வாழ்க்கை பயணத்தை மாற்றியமைக்க முடியும்"

- மகாத்மா காந்தி

முகாமைத்துவம் என்பது சரியானதை சரியான நேரத்தில் செய்தலாகும்.

Doing the right things right.

- Peter Drucker

தெரிந்தோ, தெரியாமலோ மாணவர் மத்தியில் பல முரண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதிகளவான முரண்பாடுகள் ஆசிரியரின் செயற்பாடுகளினாலே ஏற்பட இடமுண்டு என்பதனை நாம் இங்கு கண்டுள்ளோம். இத்தகைய முரண்பாட்டினை முகாமை செய்ய வேண்டிய பெரும் பொறுப்பும் ஆசிரியரிற்கே உரித்தானதாகும். இது சாத்தியமாகாத சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறான வேளைகளில் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரையோ அல்லது அதிபரையோ நாட முடியும்.

''முரண்பாடுகளுக்கு வெளியே ஒரு மூன்றாம் ஆள்
இருப்பது முரண்பாடுகளைச் சமாதானப்படுத்துவதற்கு
ஏதுவாகும் காரணியாகும்.''

- ரூபின், பிரவுண்

முரண்பாடு எளிதானதாக இருப்பின் அதற்கான காரணமும் தெளிவான தாகவே காணப்படும். சிக்கலான சில முரண்பாடுகள் தோற்றம் பெறும் போது அதற்கான தீர்வுகளை சரியாக இனங்கண்டுகொள்ள முடியாமலிருக்கும். இம்முரண்பாட்டிற்கான வெளிப்படைக் காரணங்கள், மறைமுகக் காரணங்கள் ஆகிய அனைத்தையும் அறிந்து கொள்ளாது அதற்கான தீர்வுகளை எவராலும் எட்டவும் முடியாது.

முரண்பாட்டிற்கான காரணங்களை கண்டறிவதற்கான எளிதான பகுப்பாய்வு முறை 'முரண்பாட்டுப்படம்' (Conflict map) என அழைக்கப் படுகின்றது. இது மூன்று படிமுறைகளைக் கொண்டது.

1. பிரச்சினையை பெயரிடல்.
2. முரண்பாட்டுடன் தொடர்பானவர்களை இனங்காணல்.
3. இத்தரப்பினர்களின் தேவைகளையும் ஐயப்பாடுகளையும் இனங் காணல்.

இத்தகைய படிமுறைகளினூடாக மென்மையாக கலந்துரையாடல், அவதானத்துடன் செவிமடுத்தல், விடயத்தை புரிந்துகொள்ளல் மூலம் தீர்வுகளை எட்டமுடியும். இத்தீர்வானது

வெற்றி - வெற்றி

வெற்றி - தோல்வி

தோல்வி - வெற்றி

தோல்வி - தோல்வி என்பனவற்றுள் ஒன்றாக இருக்கலாம். ஆயினும் இரு தரப்பினரையும் திருப்தி செய்யுமாறு வெற்றி - வெற்றி தீர்வே சிறந்த தீர்வாக அமையக்கூடியது. மென்மையான கலந்துரையாடல் ஊடாக, பிழையை ஏற்றுக்கொள்ளல் மூலமோ அல்லது ஒருவரை ஒருவர் மன்னிப்பதன் மூலமோ இத்தகைய சிறப்பான தீர்வுக்கு வரமுடியும்.

**மாற்றம் அவசியம்**

> ''எல்லோரும் நடந்த பாதையில் நீங்களும் நடவாதீர்கள்
> மாறாகப் பாதைகளே இல்லாத இடத்தில்
> நடக்கமுயலுங்கள். உங்கள் காலடித்தடம்
> மற்றவர்களுக்கு புதிய பாதையாக அமையும்.''
>
> \- R. Zaphiropoulos

மாணவர்களின் எதிர்காலமே ஆசிரியர்தான். எதிர்கால தலைவர்களை உருவாக்கும் பெரும் பொறுப்பும் ஆசிரியர்களிடமேயுள்ளது. ஆசிரியரின் அலட்சியம், கவலையீனம், கருத்து முரண்பாடு, விதண்டாவாதம் அனைத்தும் ஒரு மாணவர் சமூகத்தையே அழித்து விடக்கூடியது. மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, மாணவர் முரண்பாடு அதன் முகாமை அனைத்தையும் ஆசிரியர்கள், வினைத்திறனுடன் செயல்படுத்த வேண்டும். இதற்காக ஆசிரியர் தம்மை, தமது மனப்பாங்கை மாற்றிக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இதன் காரணமாக அனைத்திற்கும் தீர்வாகவும், இவ் ஆக்கத்தின் முடிவாகவும் The New Indian Express (2002) பத்திரிகையானது நடாத்திய ஆய்வொன்றின் பிரகாரம் 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய விடயங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

- பாடப்புலமை.
- தொடர்பாடலிலான பிரத்தியேக திறன்.
- மாணவர் அனுபவங்களுடன் கூடிய கற்பித்தல் திறன்.
- நவீன கற்பித்தல் உபகரணப் பயன்பாடு.
- மாணவர்களை பங்காளிகளாக மாற்றும் உத்தி.
- நேரந்தவறாமை, கட்டுப்பாடு, முன்மாதியான நடத்தை.
- ஆசிரியர் - மாணவர் உறவினைச் சீராகப் பேணல்.
- கற்றலில் வாழ்நாள் மாணவர்.

6

# பல்கலைக்கழக அனுமதி முறையில் Z Score

## அறிமுகம்

இலங்கை சிரேஷ்ட இடைநிலைக் கல்வியில் க.பொ.த. (உ/த) பரீட்சை மிக முக்கியமான பரீட்சையாகும். பல்கலைக்கழகங்களுக்கு தகுதியா னோரை தெரிவு செய்வதற்கு இப் பரீட்சை அடிப்படையாக இருப்பதே இதற்கு காரணமாகும். பாடசாலைக் கல்வியில் புகும் ஒவ்வொரு மாணவர்களும் பல்கலைக்கழக கல்வியை நோக்காகக் கொண்டே தரம் 1 இல் களம் இறங்குகின்றனர். 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியை தொடர்ச்சியாக பயில்கின்ற மாணவர்கள் பல அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் செய்கின்றனர். பெற்றோர்களும் தமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற பேரவாவில் கல்விக்காக அதிக பணத்தை செலவு செய்கின்றனர். இருந்தபோதிலும் எமது நாட்டில் மிகவும் குறைந்த எண்ணிக்கை யானவர்களுக்கே இந்த உன்னத வாய்ப்பு கிடைக்கின்றது. தரம் 1 இல் அனுமதிக்கப்படும் 100 மாணவர்களில் 2 மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகம் செல்வதாக புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றது 98 சதவீதமானோருக்கு இந்த வாய்ப்பு இல்லாமல் போவது கவலைதரும் விடயமாகும். சமகாலத்தில் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் 40 வீதமானோர் தகைமை பெற்றிருந்த போதிலும் 10 சதவீதமானோர் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை தருவதோடு, நாட்டின் பெரும் விரயமாகவும் கருதவேண்டியுள்ளது. பல்கலைக்கழகங்களின் பற்றாக்குறை, மூளை சாலிகளின் வெளியேற்றம், தேசிய உற்பத்தியில் கல்விக்கான மிகக்

குறைந்த செலவீனம், பல்கலைக்கழக அனுமதியில் குறைபாடு, மாணவர் களின் தகைமை இன்மை போன்றவை இதற்கான காரணங்களாக முன் வைக்கப்படுகின்றன.

**பழைய அனுமதிமுறை**

எமது நாட்டில் 1964ம் ஆண்டு முதல் உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாணவர்கள் நான்கு பாடங்களில் பரீட்சைக்கு தோற்றி பெறுகின்ற மொத்தப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வந்தனர். இது 2001ம் ஆண்டுவரையான சுமார் 40 வருடங்கள் நடைமுறையில் இருந்தது. இந்த அனுமதி முறையானது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வில்லை.

- பாடங்களின் கடின, இலகு தன்மை
- பாடங்களுக்குரிய பரீட்சை நேரம்
- மதிப்பீட்டில் ஏற்படும் வேறுபாடு

இதனால் மாணவர்கள் இலகுவான பாடங்களை தெரிவு செய்து அதிகூடிய மொத்தப்புள்ளியை பெற்று பல்கலைக்கழகங்களுக்கு இலகுவாக அனுமதி பெற்றுவந்தனர். கடினமான பாடங்களை தெரிவு செய்த மாணவர் களுக்கு அல்லது ஏதாவது ஒரு பாடத்தின் வினாத்தாள் சற்று கடினமாக அமைந்துவிட்டால் அப்பாடத்திற்கு தோற்றிய மாணவர்களுக்கு அவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. இந்த நிலமை அதிகமாக கலைத்துறை மாணவர் களுக்கே இருந்து வந்தது. பாடங்களுக்குரிய பரீட்சை நேரம் இதில் மற்ற முக்கியமான விடயமாகும். உதாரணமாக இந்து நாகரிக பாடத்திற்கான பரீட்சை நேரம் 6 மணித்தியாலமாகவும், புவியியல் பாடத்திற்கான பரீட்சை நேரம் 9 மணித்தியாலங்களாகவும் இருக்கும் போது இந்த வேறுபாட்டை கருத்தில் கொள்ளாமல் அனைத்து மாணவர்களையும் சமமாக கருதியே இந்த மொத்தப் புள்ளி அனுமதிமுறை மேற்கொள்ளப் பட்டு வந்தது. இங்கு சிந்திக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் இந்து நாகரிக பாடத்தில் 60 புள்ளி பெற்ற மாணவனும் புவியியல் பாடத்தில் 60 புள்ளி பெற்ற மாணவனும் திறமை மட்டத்தில் சமமாக கருதப்படுவதாகும். பாடங்களின் கொள்ளளவு, வினாப்பத்திரம், பரீட்சை

நேரம், மதிப்பீட்டுமுறை, மதிப்பீட்டாளர் அனைத்தும் வேறுபட்டதாக இருக்கும்போது இவ்விரு மாணவர்கள் தொடர்பாக எத்தகைய தீர்மானம் எம்மால் எடுக்கமுடியும். நீதியற்ற ஓர் தீர்மானத்தையே 'மொத்தப்புள்ளி தெரிவுமுறை' பல வருடங்களாக செய்து வந்தது. இதில் ஆச்சரியமான ஓர் விடயம் கடந்த 40 வருட காலப்பகுதியில் இத்தகைய மொத்தப்புள்ளி தெரிவுமுறையில் உள்ள குறைபாட்டைப் பற்றி கல்விச் சமூகம் சிந்திக்கத் தவறியமையாகும். இதனால் இதுவரை காலமும் பல்கலைக்கழகம் திறமையானவர்களை உள்வாங்கத் தவறிவிட்டது என்றே கூற வேண்டும். மேலும் 1998ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த பொதுக்கல்விச் சீர்திருத்தத் திற்கு அமைவாக மாணவர்கள் 2000 ஆண்டு முதல் 3 பாடங்களுக்கு தோற்றி வருகின்றனர்.

கீழ்வரும் உதாரணங்கள் மூலம் மொத்தப் புள்ளி அடிப்படையான தெரிவு முறையின் குறைபாட்டை மேலும் விளங்கிக் கொள்ள முடியும்.

**உதாரணம்1:**

கமல், ரவி என்பவர்கள் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கலைப் பிரிவில் பயிலும் இரு மாணவர்களாவர். பரீட்சையொன்றில் இவர்கள் பெற்ற புள்ளிகளும், பாடங்களின் நிலையும் (Rank) பின்வருமாறு அமைந்திருந்தன. இவர்கள் இருவரும் தமிழ் பாடத்தை பயின்றனர். மற்றைய இரு பாடங்களும் வேறுபட்ட பாடங்களாகும்.

| பாடங்கள் | கமல் | | ரவி | |
|---|---|---|---|---|
| | புள்ளி | நிலை | புள்ளி | நிலை |
| தமிழ் | 62 | 1 | 50 | 3 |
| அரசியல் | 58 | 1 | - | - |
| புவியியல் | 60 | 1 | - | - |
| இந்து நாகரிகம் | - | - | 75 | 2 |
| அளவையியல் | - | - | 80 | 2 |
| **மொத்தம்** | 180 | | 205 | |

மொத்தப்புள்ளி அடிப்படையில் தெரிவை மேற்கொள்ளும் போது ரவி என்ற மாணவனே முதன்மையானவனாக தெரிவு செய்யப்படுவார். இவர் தோற்றிய மூன்று பாடங்களிலும் முதல் நிலையை பெற்றிராத போதும் மொத்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பீடு செய்வதால் அவருக்கு முதன்மை

வாய்ப்பு கிடைக்கிறது. கமல் தான் தோற்றிய மூன்று பாடங்களிலும் முதல் நிலையைப் பெற்றுக் கொண்ட போதிலும் ஒப்பீட்டில் இரண்டாம் இடத்திற்கே செல்கின்றார். இருவரில் ஒருவரை மாத்திரம் பல்கலைக்கழகத் திற்கு அனுமதிக்க வாய்ப்பு இருந்தால் அது ரவி என்ற மாணவருக்கே கிடைக்கும்.

மேலும் ஒரே பாடங்களில் தோற்றும் மாணவர்களிடையேயும் இத் தகைய குறைபாட்டை காணமுடியும். இதற்காக மற்றுமொரு உதாரணத்தை கருதலாம்.

**உதாரணம் 2:**

சுரேஸ், கமால் ஆகிய இரு மாணவர்களும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில், ஒரே ஆசிரியர்களிடம் கணித பிரிவில் பாடங்களை கற்கின்றனர். பரீட்சையில் அவர்கள் பெற்ற புள்ளிகளும் பாடங்களின் நிலையும் பின்வருமாறு.

| பாடங்கள் | சுரேஸ் | | கமால் | |
|---|---|---|---|---|
| | புள்ளி | நிலை | புள்ளி | நிலை |
| இணைந்த கணிதம் | 75 | 2 | 90 | 1 |
| இரசாயனவியல் | 68 | 1 | 65 | 2 |
| பௌதிகவியல் | 70 | 1 | 68 | 2 |
| **மொத்தப்புள்ளி** | 213 | | 223 | |

இங்கு கமால் அதிகூடிய மொத்தப் புள்ளிகளை பெற்றுள்ளார். ஆயினும் இவர் இரண்டு பாடங்களில் சுரேஸ் என்ற மாணவனை விட பின்நிலையில் உள்ளவர். இரண்டு பாடங்களில் முதல் நிலை பெற்றுக் கொண்ட சுரேஸ் மொத்தப்புள்ளி காரணமாக பின் தள்ளப்பட்டுள்ளார். இவ்வாறு எல்லாப் பாடங்களிலும் பின்நிலை உள்ள மாணவன் ஒருவன் ஒரு பாடத்தில் மாத்திரம் அதிகூடிய புள்ளிகளை பெற்றுவிட்டாலே தனது மொத்தப் புள்ளியை அதிகரிக்கச்செய்து முதலாம் இடத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இது ஒரு நேர்மையான தீர்மானம் அல்ல. முதல்நிலை என்பது எல்லாப் பாடங்களிலும் முன்நிலையை தெரிவிப்பதாக அமைய வேண்டுமல்லவா.

## Z Score அனுமதி முறை

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக 2002ம் ஆண்டு முதல் பல்கலைக் கழக அனுமதி முறையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. Z Score என்கின்ற Z புள்ளித்திட்ட முறையில் பல்கலைக்கழக அனுமதி இடம் பெற்றமையே இந்த மாற்றமாகும். இம்முறையானது சிறந்ததும் நீதியானது மாகும். பழைய மொத்தப் புள்ளி முறையில் காணப்பட்ட எல்லா குறைபாட்டையும் இது நீக்கவல்லதாகும். இவ் ஆக்கத்தின் முக்கிய நோக்கம் Z Score பற்றி நடைமுறை ரீதியில் சிறப்பான ஓர் விளக்கத்தை ஆசிரிய சமூகத்திற்கு கொடுப்பதாகும். க.பொ.த. (உ/த) வகுப்பிற்கு கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும், பாடசாலை அதிபர்களும் இதனை பூரணமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

### Z Score கணிப்பதற்கான சூத்திரம்:

Z முறை அளவுத்திட்டமானது ஒரு நியம அளவுத் திட்டமாக கல்விப்புல புள்ளி விபரவியலில் கருதப்படுகின்றது. இதற்கான சூத்திரம்

$$Z \text{ புள்ளி} = \frac{x - \bar{x}}{6} \text{ ஆகும்.}$$

இங்கு x : மாணவர் ஒருவர் குறித்த பாடத்தில் பெற்ற புள்ளி

$\bar{x}$ : குறித்த பாடத்திற்கான சராசரி அல்லது இடை.

6 : குறித்த பாடத்திற்கான நியமவிலகல்.

உதாரணமாக தமிழ்ப் பாடத்தில் ஒரு மாணவன் பெற்ற புள்ளி 72 என்போம். தமிழ்ப் பாடத்திற்கான இடை, நியமவிலகல் என்பன முறையே 48, 12 எனில், இம்மாணவனின்

$$\text{தமிழ் பாடத்திற்கான Z புள்ளி} = \frac{72 - 48}{12} = \frac{24}{2}$$

$$= 2.000 \text{ ஆகும்.}$$

### 1. இடை

ஒரு புள்ளிப்பரம்பலின் இடை என்பது சராசரி, கூட்டல் இடை எனவும் அழைக்கப்படுகின்றது. பொதுவாக மாணவர்களின் தேர்ச்சி அறிக்கையில்

ஆசிரியர்கள் சராசரி அல்லது இடை கணிக்கும் செயன்முறையை அடிக்கடி பயன்படுத்துவதுண்டு. இதற்கு புள்ளிவிபரவியலில்

$\overline{x} = \frac{\Sigma fx}{\Sigma f}$ எனும் சூத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

ஆனாலும் சாதாரணமாக

$$\text{இடை} = \frac{\text{மொத்தப் புள்ளி}}{\text{மாணவர் எண்ணிக்கை}}$$

என்ற அடிப்படை சூத்திரத்தையும் பயன்படுத்தலாம்.

பொதுவாக பரீட்சையின் போது ஒரு பாடம் இலகுவானதாக அமைந்துவிட்டால், இப்பாடத்தின் மொத்தப்புள்ளி அதிகரிப்பதால் அதன் இடையும் அதிகரிக்கும். இதிலிருந்து ஒரு பாடத்தின் இலகுத் தன்மை அல்லது கடின தன்மை ஆகியவற்றை இவ் இடைப் பெறுமானத் தைக் கொண்டு தீர்மானிக்கமுடியும்.

## 2. நியமவிலகல் (б)

நியம விலகல் என்பது குறித்த பாடத்தில் ஒவ்வொரு மாணவரும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 'இடை' இலிருந்து எவ்வாறு விலகி உள்ளன என்பதனை தெரிவிக்கும் ஓர் அளவீடு ஆகும். இடைக்கு அண்மித்து ஏனைய புள்ளிகள் இருக்குமாயின் நியமவிலகல் பெறுமானம் குறைந்த தாக இருக்கும். இதற்கான சூத்திரம்

$$б = \sqrt{\frac{\sum(x_i - \overline{x})^2}{n}}$$

என்பதால் தரப்படும்

இங்கு $x$ : மாணவர் பெற்ற புள்ளிகள்

$\overline{x}$ : அக்குறித்த பாடத்தின் இடை

$n$ : பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை.

இடை, நியம விலகல் என்பனவற்றை விளங்கிக் கொள்வதற்காக இரு சிறிய உதாரணங்களை கவனிப்போம்.

உதாரணம் 3:

A, B, C, D, E ஆகிய ஐந்து மாணவர்கள் கணிதப் பாடத்தில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முறையே 42, 44, 47, 48, 49 ஆகும். இப் புள்ளிகளின் இடை, நியமவிலகல் என்பனவற்றைக் பின்வருமாறு கணிக்கலாம்.

| $x_i$ | $x_i - \bar{x}$ | $(x_i - \bar{x})^2$ |
|---|---|---|
| 42 | 42 - 46 = -4 | 16 |
| 44 | 44 - 46 = -2 | 4 |
| 47 | 47 - 46 = 1 | 1 |
| 48 | 48 - 46 = 2 | 4 |
| 49 | 49 - 46 = 3 | 9 |
| 230 | | 34 |

$$\text{இடை} = \frac{\text{மொத்தப் புள்ளி}}{\text{மாணவர் எண்ணிக்கை}}$$

$$= \frac{230}{5} = 46$$

இதன் நியவிலகல்

$$6 = \sqrt{\frac{\sum(x_i - \bar{x})^2}{n}}$$

$$= \sqrt{\frac{34}{5}} = \sqrt{6.8}$$

$$= 2.6$$

இவ் உதாரணத்தில் ஐந்து மாணவர்களும், கிட்டத்தட்ட ஒரே அளவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இதன் காரணமாக இப்பாடத்தின் இடைப் பெறுமானமும் இப்புள்ளிக்கு கிட்டிய பெறுமானத்தையே கொண்டுள்ளது.

அதேவேளை நியமவிலகல் மிகவும் குறைந்த பெறுமானமாகிய 2.6 ஆக உள்ளது. மாணவர் பெற்றுக் கொண்ட புள்ளிகள் இடைக்கு அண் மித்து காணப்படும்போது நியமவிலகல் இவ்வாறு சிறிய பெறுமானமாக அமைந்திருக்கும்.

உதாணரம் 4:

A, B, C, D, E ஆகிய அதே ஐந்து மாணவர்கள் தமிழ்ப் பாடத்தில் பெற்ற புள்ளிகள் முறையே 22, 32, 54, 68, 84 ஆகும். இப்புள்ளிகள் மிகவும் கூடிய வித்தியாசத்தை உடையன என்பதனை கணிப்புகளுக்கு செல் வதற்கு முன்பாக நாம் அறிந்து கொள்ளமுடியும்.

| $x_i$ | $x_i - \bar{x}$ | $(x_i - \bar{x})^2$ |
|---|---|---|
| 22 | 22 - 52 = -30 | 900 |
| 32 | 32 - 52 = -20 | 400 |
| 54 | 54 - 52 = 2 | 4 |
| 68 | 58 - 52 = 16 | 256 |
| 84 | 84 - 52 = 32 | 1024 |
| 260 | | 2584 |

$$\text{இடை} = \frac{\text{மொத்தப் புள்ளி}}{\text{மாணவர் எண்ணிக்கை}}$$

$$= \frac{260}{5} = 52$$

இதன் நியவிலகல்

$$\sigma = \sqrt{\frac{\sum(x_i - \bar{x})^2}{n}}$$

$$= \sqrt{\frac{2584}{5}}$$

$$= \sqrt{516.8}$$

$$= 22.7$$

புள்ளிகளுக்கிடையேயான வித்தியாசம் இங்கு அதிகமாக இருப்பதால் இதன் நியமவிலகலும் கூடிய பெறுமானம் உடையதாகவுள்ளது.

இவ்வாறு ஒரு பாடத்தில் Z புள்ளி கணிப்பதற்கு அப்பாடத்தில் மாணவன் பெற்றுக் கொண்ட மூலப்புள்ளியும், அப்பாடத்திற்கான இடை, நியமவிலகல் என்பனவும் அவசியமானவையாகும். க.பொ.த.(உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களுக்கும் தனித்தனியாக Z புள்ளி கணிக்கப்பட்டு அதன் சராசரி அறியப்பட்டு அதுவே இறுதி Z புள்ளியாக பரீட்சை முடிவுடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

## Z Score இன் இயல்புகள்

1. பொதுவாக Z Score ஆனது -5 இற்கும் -5 இற்கும் இடையில் இருக்கலாம் என புள்ளிவிபர முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும் நடைமுறையில் -3 இற்கும் +3 இற்கும் இடையில் இருப்பதற்கே வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

2. Z Score பூச்சியம் ஆயின் குறித்த மாணவன் சராசரி புள்ளி பெற்றவனாக கருதப்படுவான்.

3. மாணவர்கள் சராசரியிலும் குறைந்த புள்ளிகளை பெற்றிருப்பின் Z Score ஆனது மறை (-) குறையை கொண்டிருக்கும்.

4. ஒரு நியமச் சோதனையில் பரீட்சைப் புள்ளிகள் செவ்வன் வளையி யில் அமையும்போது 64 சதவீதத்தினர் -1 இற்கும் +1 இற்கும் இடையில் Z புள்ளிகளை பெற்றிருப்பர்.

5. தேசிய மட்ட சாதனை பெறும் மாணவர்களின் Z புள்ளி +3 ஐ அண்மித்துக் காணப்படும் இலங்கை வரலாற்றில் க.பொ.த. (உ/த) தேசிய பரீட்சையில் அதிகூடிய Z புள்ளியான 3.112 யாழ்நகரைச் சேர்ந்த கணிதத்துறை மாணவர் ஒருவர் அண்மையில் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

6. Z புள்ளி அதிகரிப்பதற்கு குறித்த பாடத்தின் இடை ($\bar{X}$), நியம விலகல் *б* என்பன குறைவாக இருக்கும் அதேவேளை குறித்த மாணவன் அப்பாடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

7. குறித்த பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருக்கும் போது அப்பாடத்தின் Z Score அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக உயர்தரப் பரீட்சையில் சங்கீதம், நடனம், கிறிஸ்தவ நாகரிகம் போன்ற பாடங் களை தோற்றுவோரின் Z Score உயர்வாகவுள்ளதைக் காணமுடியும்.

## Z Score தொடர்பான நடைமுறை பிரச்சினைகளும் ஆலோசனைகளும்

### 1. போதிய விளக்கம் இன்மை

பாடசாலை சமூகத்திற்கும், அரசியல் வாதிகளுக்கும் Z Score தொடர்பாக போதியதெளிவு இல்லாதது பெரும் குறைபாடாகும்.

பல்கலைக்கழக அனுமதியை நோக்காகக் கொண்டே க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். பரீட்சைத் திணைக்களத் தினால் நடாத்தப்படும் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்காக ஆறு தவணைப்பரீட்சைகள் பாடசாலைகளில் நடாத்தப்படுகின்றன. அனைத்துப் பாடசாலைகளிலும் இப்பரீட்சைகளில் மொத்தப்புள்ளி அடிப்படையிலே இன்னமும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுவதோடு பரிசளிப்பு விழாக்களும்

நடாத்தப்படுகின்றன. பல்கலைக்கழகத் தெரிவுக்கு பொருத்தமற்ற முறை என ஒதுக்கிய 'மொத்தப்புள்ளி' முறையை, பல வருடங்களாக பாடசாலைகள் அதே உயர்தரப்பரீட்சையில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருவது கவலையளிக்கும் விடயமாகும்.

பாடசாலை மட்டத்திலும் Z Score அடிப்படையில் திறமை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள ஆரம்பித்தால் நீதியான முடிவுகள் கிடைக்கப்பெறுவதோடு இது தொடர்பாக போதிய விளக்கமும் தெளிவும் பாடசாலை சமூகத்திற்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்பட இடமுண்டு.

## 2. Z Score கணிப்பு தொடர்பான சந்தேகங்கள்

Z Score பற்றி தெளிவான அறிவை மாணவர் பெற்றிருந்தாலும், அது சரியாக கணிக்கப்பட்டுள்ளதா என்பதில் பல மாணவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். பரீட்சைத் திணைக்களத்தில் இது தொடர்பாக இரு தடவைகள் தவறுகளும் ஏற்பட்டுள்ளமை இதற்குக் காரணமாகும். மிகவும் சிரமப்பட்டு, பல தியாகங்களின் மத்தியில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது பரீட்சை முடிவில் திருப்தி கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இதனால் பரீட்சை முடிவில் அனைத்து விடயங்களையும் திறந்ததாக வெளிப்படுத்துவது சிறந்ததும் தேவையும் ஆகும். இது ஜனநாயக உரிமையும் கூட.

அதாவது வெளியிடப்படும் பரீட்சை முடிவு அறிக்கையில் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர் பெற்ற புள்ளிகள், தரங்கள் ஒவ்வொரு பாடத்தினதும் இடை, நியமவிலகல், Z புள்ளி, மாவட்ட நிலை, தேசிய மட்ட நிலை அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருப்பது அவசியமானதாகும். நவீன தொழிநுட்ப யுகத்தில் இது மிகவும் இலகுவானதும் கூட.

இதன் மூலம் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் போதுமான விளக்கம் இருப்பதால், மாணவர் அல்லது ஆசிரியர்கள் திருப்தி கொள்ள முடியும். அதுமட்டுமல்ல பாடம் தொடர்பாக எதிர்கால மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் இது ஏதுவாக இருக்கும்.

## 3. போதிய தெளிவின்மை

பொதுவாக சுமார் 40 வருடங்களாக பரீட்சைகள், புள்ளிகள் எனும் போது 1 இற்கும் 100 இற்கும் இடையில் முழு எண்களில் நாம் பழக்கப்பட்டு விட்டோம். ஆனால் Z புள்ளித்திட்டம் -3 இற்கும் +3 இற்கும் இடையில்

தசமங்களாக இருப்பதால் இதனை சாதாரண மக்கள் விளக்கிக்கொள்ள முடியாதுள்ளனர். இதனால் நியமமான அளவுத்திட்டமாகவும், முழுஎண் பெறுமானமாகவுள்ள T புள்ளி அளவுத்திட்டத்திற்கு மாற்றியமைப்பது பொருத்தமான தாகும். மெக்ஹால் என்பவரின் அளவுத்திட்டமே T புள்ளி என கருதப்படுகின்றது. இது இடை, நியம விலகல் என்பனவற்றை முறையே 50, 10 ஆக கருதி மாற்றம் செய்யப்பட்ட ஒரு அளவுத்திட்டமாகும். இதற்கான சூத்திரம்

$$Z \text{ புள்ளி} = \frac{X - 50}{10}$$

$$\therefore X = 10Z + 50 \text{ ஆகும்.}$$

ஒரு மாணவனின் Zபுள்ளி = 1.6 எனில் இதனை

T புள்ளிக்கு மாற்றம் செய்யும் போது

அவரது புள்ளி X = 10 x 1.6 + 50

= 66 என மாற்றம் பெறும்.

இதன் வீச்சு 0 இற்கும் 100 இற்கும் இடையில் அமைந்திருப்பது தெளிவானதாகும்.

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியில் Z Score இற்கு பதிலாக T புள்ளி அளவுத்திட்டம் பயன்படுத்தப்படும் என நாம் எதிர்பார்க்கமுடியும்.

# 7

# உயர்தர வகுப்பிற்கான செய்திட்டம் ஆய்வுக்கான அடித்தளம்

## அறிமுகம்

கடந்த காலங்களில் இலங்கைப் பாடசாலை கல்வி முறைமை தொடர்பாக பல கண்டனங்கள் எழுந்தன. கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்ற திறன்கள் பலவற்றை பாடசாலை மாணவர்கள் அடைய முடியாதவர்களாக இருப்பதே இதற்கான காரணமாகும். பாடசாலைகளில் நடைபெற்று வருகின்ற அனைத்து செயற்பாடுகளும் இதற்கு சாதகமாகவே அமைந்திருக்கின்றன. பாடசாலைக் கல்வி முறைமை பரீட்சை சார்ந்ததாக அமைந்திருத்தல், செயன்முறை சார்ந்ததாக அமையாமை, சுய கற்றலுக்கு ஊக்கமளிப்பின்மை, விழுமிய சீர்குலைவு, திறன் வெளிப்பாட்டிற்கு வாய்ப்பின்மை போன்ற குறைபாடுகள் பாடசாலை கல்வியில் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதன் விளைவாக 1998 இல் தோற்றம் பெற்ற புதிய கல்வி சீர்திருத்தத்தின் முன்மொழிவாக க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு 'வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்திட்டம்' அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் 'செயல் மூலம் கற்றல்' எனும் நோக்கம் நிறைவு செய்யப்படும் என நம்பப்படுகின்றது.

பிள்ளை எவரதும் அடிவருடியாகவோ அல்லது அடிமையா கவோ இருத்தலாகாது. ஒவ்வொரு பிள்ளையும் தனது உரிமையாக உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து, பூரண ஆளுமையும், சுயாதீன சிந்தனையும் கொண்ட ஓர் தலைவராக விருத்தி அடைதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் தற்காலத் தேவைக்கு ஏற்ப இத்தகைய பிரஜைகளை உருவாக்குவதற்காக இலங்கை கல்வித்துறையில்

ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்களுள் முக்கிய ஓர் அம்சமாக இச் செயற்திட்டம் கருதப்படுகின்றது.

பாடசாலைகளில் க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களுக்கு, தமது இருவருட பாடசாலைக் காலத்தினுள் தனியாகவும், குழுவாகவும் இரு செயற்திட்டங்கள் செய்யவேண்டிய கட்டாயத்தை இது ஏற்படுத்தியுள்ளது. இது அறிமுகம் செய்யப்பட்டு சுமார் 12 வருடம் நிறைவுறுகின்றன. இந்நிலையில், செயற்பாடு ரீதியாக இது எவ்வாறு நடைபெறுகின்றது என அவதானிக்கும் போது, திருப்திகரமான நிலை இல்லை என்றே பொதுவாகக் கூறப்படுகின்றது. எத்தகைய எதிர்பார்ப்பிற்காக இச்செய் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதோ அத்தகைய எதிர்பார்ப்பு போதுமான முறையில் நிறைவேற்றப்படவில்லை.

பாடசாலையில் நடைபெறுகின்ற இச்செய்திட்டமானது எதிர்கால ஆய்வுப் பயணத்தின் ஓர் ஆரம்பம் என்பதனை அனைவரும் மறந்து விடலாகாது. பல்கலைக்கழகத்திலும், அதன் பின்னரான பட்டப்பின்படிப்பு நிலைகளிலும் 'ஆய்வு' நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுவதை நாம் அறிவோம்.

பாடசாலைகளில் இத்தகைய செய்திட்டம் செவ்வனே நிறைவேற்றப் படாமைக்கு பல காரணங்கள் இருக்கலாம். இவற்றுள் மிக முக்கியமானது செய்திட்டம் தொடர்பாக வழிநடாத்தும் ஆசிரியர், அதிபர் ஆகியோரின் எதிரான மனப்பாங்கு ஆகும். செய்திட்டத்தில் ஈடுபடுவதால் நேரம் வீணடிக்கப்படுகின்றது, இது எத்தகைய கடதாசித் தன்மைகளையும் தந்துவிடாது போன்ற மனநிலை உள்ள ஆசிரியர்கள் பலர் பாடசாலையில் இன்னமும் உள்ளனர். இதன் முக்கியத்துவம், எதிர்பார்ப்பு, எதிர்காலத்தில் இதன் தேவை என்பனவற்றை இத்தகைய ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ள முடியாமலுமுள்ளனர். தங்களால் வழங்கப்படுகின்ற பாடக்குறிப்பை மனனஞ் செய்வதும் அதனை ஒப்புவிப்பதுமே மாணவரது தேவை என்பதுதான் இவர்களின் வாதமாகும். பாடசாலை அதிபர், ஆசிரியர் களுக்கு 'செய்திட்டம்' தொடர்பாக போதிய விளக்கமின்மையும் இத்தகைய வாதங்களுக்கு அடிப்படையாகும். இதன் காரணமாகவே இக்கட்டுரை செயல் வடிவம் பெறுகின்றது.

**'செய்திட்டம்' வரைவிலக்கணம்**

செய்திட்டம் என்பது

- ஒரு குறித்த பெறுபேற்றை அடைவதற்காக
- ஏதேச்சையாகத்தெரிவு செய்து
- திட்டமிட்டு
- குறித்த காலப்பகுதியுள் அமுல்படுத்துவதன் மூலம்
- கற்றலையும், தகைமையும் விருத்தி செய்யும் ஓர் செயன்முறை யாகும்.

**குறிக்கோள்கள்**

பாடசாலையில் இச்செய்திட்டம் பின்வரும் குறிக்கோள்களை அடிப்படை யாக வைத்து எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வாழ்க்கையில் அறைகூவல்களை எதிர்கொள்ளப் பழகுதல்.
2. செயன்முறைத் தகைமைகளைப் பெறல்.
3. உழைப்பின் மகத்துவத்தை உணர்தல்.
4. சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
5. கூட்டுச் செயற்பாட்டை ஊக்குவித்தல்.
6. தமது இயலுமையை உணரச்செய்தல்.
7. சுற்றாடல் வளங்களை இனங்காணல்.
8. தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல்.
9. வேலை உலகின்பால் ஈர்க்கப்படல்.
10. ஓய்வு நேரத்தை பயன்படுத்தல்.
11. பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்.

இத்தகைய குறிக்கோள்கள் ஒவ்வொன்றும், தேசிய கல்வி ஆணைக்குழு வினால் (1992) இனங்காணப்பட்ட 'ஐந்து தேர்ச்சிகளை' அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

**செய்திட்ட வகைகள்**

இது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஆய்வு வகைச் செய்திட்டம்.
2. ஆக்க வகைச் செய்திட்டம்.
3. பிரச்சினை வகைச் செய்திட்டம்.
4. பொருளாதார பயனுறுதி வகைச் செய்திட்டம்.

இங்கு ஆய்வுவகைச் செய்திட்டம் என்பது தலைப்பை இனங்கண்டு அது தொடர்பான தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்யும் செயன் முறையை உள்ளடக்கியதாகும். இது யாதேனும் பிரச்சினை பற்றி ஆய்வு செய்வதாகவும் தமது பாடசாலையில் கல்வி, விழுமியம், பௌதிக அபிவிருத்தி போன்றவற்றை முன்னேற்றம் செய்வதற்காக நடாத்தப்படும் செய்திட்டங்கள் இதனுள் அடங்கும். மேலும் இதனூடாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த) பரீட்சை, க.பொ.த. (உ/த) பரீட்சை போன்றவற்றின் முடிவுகளை பகுப்பாய்வு செய்து ஆலோசனைகளை முன்வைக்க முடியும்.

ஆக்கவகைச் செய்திட்டமென்பது, ஈடுபடும் மாணவர் ஈற்றில் யாதேனுமோர் ஆக்கத்தை உருவாக்குவர். இவ் ஆக்கம் ஒரு கவிதை யாகவோ, கட்டுரையாகவோ, நாடகமாகவோ, உபகரண மாதிரியுரு வாகவோ, அலங்காரப் பொருளாகவோ அமையலாம். இது புத்தாக்க செயற்பாட்டிற்கு வழிவகுக்கும். குறிப்பாக விஞ்ஞானத் துறை மாண வர்கள் ஆக்க செய்திட்டத்தில் ஈடுபடமுடியும். தாம் வகுப்பறைகளில் கற்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு பொருத்தமான கருவிகள், சாதனங்களை உருவாக்குவதன் மூலம் குழந்தை விஞ்ஞானியாக மாறு வதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

பிரச்சினை வகைச் செய்திட்டம் என்பது ஏதாவது பிரச்சினை தொடர்பாக பயில்வதற்குரியதாகும். இங்கு பிரச்சினையை சரியாக இனங்காண்பதும், விளக்கமளிப்பதும் முக்கியமானதாகும். தமது பாட சாலைகளில் நிலவும் பிரச்சினைகள் அறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைப்பது இதனுள் அடக்கப்படுகின்றது. பாடசாலைக்கு தொடர்ச் சியாக தாமதமாக வரும் மாணவர் தொடர்பாகவோ அல்லது கல்வியில் பின் தங்கியுள்ள மாணவர் தொடர்பாகவோ இதனூடாக ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

பொருளாதார பயனுறுதி வகைச் செய்திட்டம் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும், பொருளாதார ரீதியில் நன்மை பெறவும் உதவும். அயற் சூழலில் இருந்து பெறக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி மிகவும் குறைவான செலவில் இவ்வாறான செய்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். நாற்று மேடை, கோழிவளர்ப்பு, பூச்செடிகள், மரக்கறி தோட்டம் என்பனவற்றை பாடசாலை மூலமோ அல்லது வீட்டிலோ உருவாக்கி அதன் மூலம் பணம் சேகரிப்பதனை இது உள்ளடக்குகின்றது.

## செய்திட்ட அமுலாக்கல் படிகள்

இது பின்வரும் ஏழு விடயங்களை உள்ளடக்கி உள்ளது.

1. தலைப்பை தெரிவு செய்தல்.
2. செய்திட்ட பிரேரணை தயாரித்தல்.
3. ஆலோசகரின் துணையைப் பெறல்.
4. அனுமதி பெறல்.
5. தரவுகளைச் சேகரித்தல் / பகுப்பாய்வு செய்தல்.
6. அறிக்கையிடல்
7. ஒப்படைத்தல்.

இங்கு 'தலைப்பை தெரிவு செய்தல்' எனும் அம்சம் மிக முக்கியமானதாகும். செய்திட்டத்தின் வெற்றி இதில்தான் தங்கியுள்ளது. தலைப்பை மாணவர்தாமாகவே தெரிவு செய்தல் வேண்டும். அதேவேளை இத் தலைப்பு மாணவருடன் அல்லது மாணவரின் சூழலுடன் தொடர்பு பட்டதாக இருத்தல் வேண்டும். பாடவிடயம் சம்பந்தமாகவோ அல்லது இணைப்பாடவிதானம் சம்பந்தமாகவோ இது இருக்கலாம். அப்பொழுது தான் இச்செய்திட்டம் ஆர்வத்துடன் வழிநடத்திச் செல்லப்படும்.

அதேவேளை தலைப்பை தெரிவு செய்யும்போது மாணவர்கள் SWOT பகுப்பாய்வு நுட்ப முறையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது

| | | | |
|---|---|---|---|
| S | - | Strength | வலிமை |
| W | - | Weak | நலிவுகள் |
| O | - | Opportunity | வாய்ப்புக்கள் |
| T | - | Threaten | அச்சுறுத்தல் |

தெரிவு செய்யப்படும் தலைப்பிலுள்ள பலம், பலவீனம் அதற்கான சந்தர்ப்பம், சவால்கள் என்பனவே அவை. மாணவர் தனது ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் அப்பாற்பட்ட தலைப்பை தெரிவு செய்யக் கூடாது. பொருத்தமற்ற தலைப்புகளை தெரிவு செய்யும் போது இச்செய்திட்ட மானது இடைநடுவில் கைவிடப்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். இதில் ஆலோசகர் மிக்க கவனம் செலுத்துவது அவசியம். மேலும் தலைப்பானது தெளிவாக, மயக்கமின்றி, கருத்தாழமிக்க முழுமை பெற்ற வசனமாகவும் அமைவது சிறப்பானது.

**செய்திட்ட பிரேரணை:**

தமது செய்திட்டத்திற்கு அனுமதிபெறுவதை நோக்கமாகக் கொண்டு 'செய்திட்ட பிரேரணை' சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதனை ஒரு படிவமாக பூர்த்தி செய்து, பாடசாலை நிர்வாகத்திடம் அனுமதி பெற்ற பின்னரே செய்திட்ட செயற்பாட்டில் மாணவர் ஈடுபடல் வேண்டும். பிரேரணைக்கான மாதிரிப் படிவம் பின்வருமாறு அமையும்.

## செய்திட்ட பிரேரணை [மாதிரி]

1. தலைப்பு :
2. அறிமுகம் :
3. குறிக்கோள் :
4. செயற்படுத்தும் விதம் :
5. காலவரையறை :

இது கீழ்வரும் அட்டவணைக்கேற்ப

| செயற்பாடு | மாதம் | | | பொறுப்பு |
|---|---|---|---|---|
| | தை | மாசி | பங்குனி | குழு செய்திட்டம் |
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | | |

6. பொறுப்பாசிரியரின் விதப்பு

திகதி : .................... கையொப்பம் : ..............................

7. செய்திட்ட குழுவின்அனுமதி

திகதி : ........................ கையொப்பம் : ..............................

இப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாக சிந்தித்து தெளிவாக பூர்த்தி செய்தல் வேண்டும். பின்னர் இது தொடர்பாக பல தரப்பட்ட வினாக்களை ஆலோசகர் மாணவரிடம் கேட்க வேண்டும். அப்பொழுது மாணவருக்கு தமது செய்திட்டம் தொடர்பாக மேலும் பல விளக்கங்கள் தெளிவு பெற வாய்ப்பு உண்டு.

இங்கு செய்திட்ட 'குறிக்கோள்' எழுதுவது மிக முக்கியமானதாகும். இதன்போது 'SMART' என்ற அம்சம் இங்கு கருதப்படுவது அவசியமாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| S | - | Specific | - | குறிப்பானதாக இருத்தல். |
| M | - | Measurable | - | அளக்கக் கூடியதாக இருத்தல். |
| A | - | Achievable | - | அடையக் கூடியதாக இருத்தல். |
| R | - | Relevant | - | தொடர்புடையதாக இருத்தல். |
| T | - | Time Bound | - | காலவரையறை |

மாணவரது செய்திட்டம் பல குறிக்கோள் கொண்டதாக இருக்கும், ஒவ்வொரு குறிக்கோளும் மேலுள்ள விடயத்திற்கு இசைவுறும் வண்ணம் இருப்பது அவசியம். குறிப்பாக மிகவும் குறுகிய காலத்தினுள் இதனைப் பூர்த்தி செய்வது நல்லது. பல மாணவர்கள் தமது இரண்டு வருட காலப் பகுதி முழுவதும் இதில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. தனிசெய்திட்டம் 1ம் தவணையிலும் குழு செய்திட்டம் 2ம் தவணையிலும் பூர்த்தி செய்யப்படவேண்டுமென சுற்று நிருபம் எதிர்பார்க்கின்றது. குழு செய்திட்டம் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தை தனி செய்திட்டத்தில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

**செயற்படுத்தல்**

செய்திட்ட பிரேரணைக்கான அனுமதியைப் பெற்ற பின்னர், மாணவர் தமது குறிக்கோள்களுக்கு அமைவாக, செய்திட்ட பிரதேசத்தை இனங் கண்டு தகவல்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட வேண்டும். யாரிடம், எப்படி, என்ன விடயங்களை பெறவேண்டும் என்பதில் போதுமான தெளிவு மாணவருக்கு இருத்தல் வேண்டும். தரவுகளை சேகரித்த பின்னர் அவற்றை பகுப்பாய்வு செய்து அறிக்கையிடல் வேண்டும். கூடிய வகை யில் தரவுகளை வரைபுகளால் வெளிக்காட்டலாம். இது செய்திட்டத்திற்கு கவர்ச்சியை கொடுக்கக்கூடியது. பகுப்பாய்வு நுட்பமுறைகளாக நூற்று வீதம், இடை, இணைபு போன்ற புள்ளிவிபர முறைகளை பயன்படுத்துவது பொருத்தமானது. பொறுப்பு ஆசிரியர் இதற்கு வழிகாட்டுவது சிறந்தது.

## செய்திட்ட அறிக்கை

மாணவர் தமது வசதிக்கு ஏற்ப தட்டச்சு மூலமோ அல்லது தெளிவான கையெழுத்து மூலமோ இவ் அறிக்கையை தயாரிக்க முடியும். இதற்காக கூடிய பணம் செலவு செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். தமது தலைப்புக்கு அமைவாக ஓர் அட்டைப்படம் இருப்பது அறிக்கையை மெருகூட்ட உதவும். தமது அறிக்கையில் முகத்தகுதி (அட்டைப்படம், எழுத்தமைப்பு, எழுத்து பிழையின்மை போன்றவை) உள்ளடக்க தகுதி (விடயத்தின் ஆழம், உண்மைத் தன்மை போன்றவை) என்பன சிறப்பாக இருப்பது வரவேற்கத்தக்கது. செய்திட்ட அறிக்கையானது பின்வரும் ஒழுங்கில் அமைதல் வேண்டும்.

1. 1.1. தலைப்பு
   1.2. உள்ளடக்கம்
   தலைப்பு, உபதலைப்பு, பக்க எண் உட்பட
   1.3. நன்றி
2. சுருக்கம்
   செய்திட்டம் சார்ந்த சுருக்க குறிப்பு - சுமார் ஒரு பக்கம்
3. அறிமுகம் - சுமார் ஒரு பக்கம்
4. குறிக்கோள் - சுமார் ஒரு பக்கம்
5. நன்மை அடைவோர் - சுமார் ஒரு பக்கம்
6. பயன்படுத்திய வளங்கள் - சுமார் ஒரு பக்கம்
7. கையாளப்பட்ட முறை - சுமார் ஒரு பக்கம்
8. செய்திட்டம் அமுலான விதம் - குறைந்தது ஒரு பக்கம்
9. காலச்சட்டகம் - சுமார் ஒரு பக்கம்
10. தரவுகளும் பகுப்பாய்வும் - சில பக்கங்கள்
11. முடிவுகளும் ஆலோசனைகளும் - சில பக்கங்கள்
12. சுய மதிப்பீடு - ஒரு பக்கம்
13. உசாத்துணைகள்
14. பின்னிணைப்புக்கள்

உசாத்துணைகள் என்பது தமது செய்திட்டத்திற்காக வாசிக்கப்பட்ட நூல்கள் தொடர்பான விபரமாகும்.

பின்னிணைப்பு என்பது செய்திட்டத்திற்காக கருத்தில் கொள்ளப்பட்ட போட்டோபிரதிகள், துண்டுப் பிரசுரங்கள், சுற்று நிருபங்கள், புகைப் படங்கள் என்பனவற்றை இணைப்பு செய்தல் ஆகும்.

## முடிவுரை

மாணவர்கள் எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுச் செயற்பாட்டிற்கு அடித்தளம் இடுகின்ற 'பாடசாலை மட்ட செய்திட்ட' வேலையை மாணவர் சமூகம் சிறப்பாகவும், நிறைவாகவும் செய்யவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இது எதிர்காலத்தில் அவர்களுக்கு தன்நிறைவையும் மதிப்பையும் ஈட்டிக் கொடுக்கும் என்பது தெளிவு.

பாடசாலைக் காலத்தில் செய்யப்பட்ட செய்திட்டம் மூலம் பிற் காலத்தில் உயர்தொழில் வாய்ப்பை பல மாணவர்கள் பெற்றுவருகின்றனர். அதேவேளை சில பாடசாலைகளில் 'செய்திட்டம்' எனும் பெயரில் மைபூசுதல், ஓவியம் வரைதல், தும்புத்தடி வழங்குதல் போன்ற மலினமான செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இவை மேலே குறிப்பிடப் பட்ட குறிக்கோள்களை எந்தளவு நிறைவு செய்கின்றன என்பது ஆராயப் படவேண்டிய முக்கிய விடயமாகும். இவ்வாறான தலைப்புக்கள் மாண வரிடையே தோற்றம் பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்களின் பொருத்தமற்ற வழிகாட்டுதல்களும் காரணமாகும்.

மேலும் பாடசாலை மட்ட 'செய்திட்டம்' உயிரோட்டம் பெறுவதும் வலுப்பெறுவதும் தொழில் வழங்குனர்களின் கைகளிலும் தங்கியுள்ளது. எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சைகளின் போது பாடசாலையில் செய்யப் பட்ட இச்செய்திட்டம் அறிக்கை அதி முக்கிய ஆவணமாக எதிர்பார்க் கப்படுமாயின், பாடசாலை மட்டத்தில் இச்செய்திட்டம் அழுத்தம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். இதனூடாக ஆற்றல் மிகு மாணவர் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

# 8

# தேசிய பரீட்சை அடைவுகளும் சுயகற்றல் உத்திகளும்

### தேசிய பரீட்சை அடைவுகள்

எமது நாட்டில் முறைசார் கல்வி அமைப்பில் அடைவுப் பரீட்சைகளும், கணிப்பீடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. பரீட்சையை மையமாகக் கொண்டே கற்றல் கற்பித்தல் முறைகளும் ஏனைய பாடவிதான நடை முறைகளும் செயற்படுத்தப்படுகின்றன. பாடசாலைகளை மதிப்பீடு செய்வதற்கான மிக முக்கிய குறிகாட்டியாக 'பரீட்சை முடிவுகள்' இருப் பதே இதற்கான காரணமாகும். பரீட்சை முடிவுகளுக்கு மேலதிகமாக பல பண்புசார் விருத்திகள் இருந்த போதிலும் சமூகத்தினால் பரீட்சை முடிவு களே அனேகமாக முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

சமகாலத்தில் தேசிய ரீதியில்மூன்று பரீட்சைகள் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சை என்பனவையே அவை. சின்னஞ் சிறிய வயதில், தன்னைப்பற்றியோ தன் எதிர்காலத்தைப் பற்றியோ தெளிவில்லாத பத்து வயதில் தேசிய ரீதியான முதல் பரீட் சைக்கு மாணவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். மாணவர்களை காட்டிலும் குறிப்பாக மாணவர்களின் பெற்றோர்களின் கௌரவ பிரச் சனையாகவும் இப்பரீட்சை விளங்கி வருகின்றது. எதிர்கால சாதனைக்கும், இப்பரீட்சைக்கும் இடையே எவ்விதமான இணைவுகளும் இல்லை என்பதனை பல ஆய்வுகள் மெய்பித்துள்ள நிலையிலும் கூட பெற்றோர் களும், சமூகத்தினரும் மிகவும் கூடிய அழுத்தத்தை இப்பரீட்சைக்கு கொடுத்து வருகின்றனர். வசதி குறைந்த மாணவர்களுக்கு சகாயப்பணம்

வழங்குவதற்காகவும் நகர்ப்புறப் பாடசாலைகளில் தரம் 6 இல் அனுமதி பெறுவதற்காகவும் இப்பரீட்சை நடாத்தப்பட்டு வருகின்றது. ஒரு மாவட்டத்தில் பரீட்சைக்கு தோற்றும் வசதி குறைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 12 சதவீதமானோர் தெரிவு செய்வதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ரீதியாக வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மாணவர் தமது 16 வயதில் கட்டிளமைப் பருவ ஆரம்பத்தில் தோற்றும் இரண்டாவது தேசிய பரீட்சை க.பொ.த. (சா/த) பரீட்சையாகும். மிக முக்கியமாக க.பொ.த. (உ/த) வகுப்பிற்கு அனுமதி பெறுவதனையும் மேலதிகமாக தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுமதி பெறுவதனையும் சிறிய தொழில் வாய்ப்புக்களை பெறுவதனையும் நோக்காகக் கொண்டு இப்பரீட்சை நடாத்தப்படுகின்றது. எமது நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பேர் இப்பரீட்சைக்கு வருடாந்தம் தோற்றி வருகின்றனர். இவர்களில் 10 சதவீதமானோர் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்று வருவதும் 50 சதவீதத்திலும் கூடிய மாணவர்கள் கணித பாடத்தில் சித்திபெறத் தவறுவதும் கவலை தரும் விடயமாகும்.

மற்றைய மிக முக்கிய பரீட்சை க.பொ.த.(உ/த) பரீட்சையாகும். மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் மிக முக்கியமான போட்டிப் பரீட்சை இதுவாகும். அதுமட்டுமல்ல 13 வருட பாடசாலைக் காலத்தின் 'இறுதி அறுவடை' என்று கூட இப்பரீட்சையைக் கூறலாம். எமது நாட்டில் சுமார் இரண்டரை இலட்சம் பேர் வருடாந்தம் இப் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர். இவர்களில் சுமார் எட்டு சதவீதமானோர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். பல்கலைக்கழக அனுமதி பெற முடியாதவர்களுக்கு அவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தகைமை பெறும் பட்சத்தில் கல்வியியல் கல்லூரி, உயர் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறும் வாய்ப்புக்களும் அதிகமாகவுள்ளன.

பாடசாலை என்ற விசாலமான அமைப்பில் பங்குதாரர்களாக கல்வி அமைச்சு, கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் என்ற பெரிய வலையமைப்பு இருந்த போதிலும் மிகவும் அதிகமான மாணவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று தேசிய பரீட்சைகளிலும் தோல்வி கண்டு வருவது கவலையளிக்கும் விடயம் மட்டுமல்ல தேசிய விரயமாகவும் கருதப்பட வேண்டிய தொன்றாகும்.

பொதுவாக மாணவர்களின் பரீட்சை அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகளை ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். குடும்பம், சமூகச் சூழல், பாடசாலை, ஆசிரியர்கள், சகபாடிகள், மாண

வரின் மனப்பாங்கு, மாணவர்களின் சுய கற்றல், பாணி என்பன இவற்றுள் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் பல விசாலமான விடயங்களைக் கொண்ட பெரும் பரப்புகளாகும். இங்கு இக்கட்டுரையாளரின் நோக்கம் 'சுய கற்றல் பாணி' என்ற விடயத்தை ஆராய்வதும் இதனூடாக க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) பரீட்சை அடைவுகளை மேம்படுத்து வதற்காக மாணவர்களுக்கு பொருத்தமாக சுயகற்றல் உத்திகளை முன்வைப்பது மாகும்.

## சுயகற்றல்

பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, பிரத்தியேக வகுப்பு என்பனவற்றிற்கு மேலதிகமாக 'மாணவர்களின் சுயகற்றல்' அவர்களின் பரீட்சை அடைவில் பெரும் செல்வாக்கு செலுத்துவதாக அறியப்படு கின்றது. எந்த அளவிற்கு மாணவர்களின் சுயகற்றல் அதிகரிக்கின்றதோ அந்தளவிற்கு அவர்களின் பெறுபேறுகளும் அதிகரிக்கும். ஆயினும் சுயகற்றல் பாணி, சுயகற்றல் காலம் என்பன ஒவ்வொரு மாணவர் களுக்கிடையேயும் வேறுபட்டே காணப்படுகின்றது. இது தொடர்பாக நியமப்படுத்தப்பட்ட திட்டங்கள் எதுவும் மாணவர்களிடையே இல்லை என்றே கூறலாம். இதுமட்டுமல்ல, இது தொடர்பாக வழிகாட்டுவதற்கு பாடசாலையில் முறையான திட்டங்களும் இல்லை. எப்படி நீங்கள் படிக்கின்றீர்கள்? என ஓர் உயர்தர மாணவர்களிடம் வினவும் போது இதற்கு ஒருமைப்பட்ட, நிறைவான விடைகிடைப்பதில்லை. அதிகமான மாணவர்களுக்கு எப்படி சுயகற்றல் செய்வதென்றே தெரிவதில்லை. இதற்கான திட்டங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை என்றே கூறலாம்.

எந்தவொரு வெற்றிகரமான செயற்பாட்டிற்கும் 'திட்டமிடல்' என்பது மிக முக்கியமானதாகும். 'திட்டமிடத்தவறும் ஒருவர் பிழைவிடத் திட்டமிடுகின்றார்' என்ற கருத்திற்கு அமைவாக தமது 'சுயகற்றல்' பற்றி சரியாக திட்டமிடத்தவறும் மாணவர்கள் தமது எதிர்பார்ப்பை அடைய முடியாமல் போய்விடுகின்றது.

## சுயகற்றலுக்கான திட்டம்

சிறந்த சுய கற்றல் முறைகள் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றுள் பிரான்சிஸ் றொபின்சன் (1970) முன்வைத்த

'SQ3R' எனும் முறை பிரபல்யமானதும் நடைமுறைச் சாத்தியமானது மாகும். இதனூடாக இவர் 5 படிகளை முன்வைத்துள்ளார். அவை

1. S : Survey - எல்லைப்படுத்தல்
2. Q : Question - வினாக்கேட்டல்
3. R : Read - வாசித்தல்
4. R : Recite - சொல்லிப்பார்த்தல்
5. R : Review - மீட்டுப்பார்த்தல்

**1. Survey: எல்லைப்படுத்தல்**

இது கற்றலை எல்லைப்படுத்தலைக் குறிக்கின்றது. எதனை? எப்படி? எங்கு? எவ்வளவு காலம்? கற்பது என்ற விடயங்களை இது உள்ளடக்கு கின்றது. இதனை மிகவும் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் சுய கற்றல் நேரசூசி ஒன்று அவசியமாகின்றது. காலையில் துயில் எழுவது முதல் நித்திரைக்குச் செல்லும் வரை தனது தினசரி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இது தயாரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கற்றலுக்குமாக அதிகூடிய நேரமாக 90 நிமிடம் ஒதுக்கீடு செய்யலாம். ஒவ்வொரு கற்றலின் பின்னரும் 15 நிமிடம் ஓய்வெடுப்பது சிறப்பானதாகும். தொடர்ச்சியாக சுய கற்றலைவிட ஓய்வுடன் கூடிய கற்றல் வெற்றியளிக்கும். க.பொ.த. (உ/த) மாணவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் கற்றலில் ஈடுபடுவது அவசியமானதாகும். அவ்வாறாயின் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது இரு மணித்தியாலங்களை ஒதுக்கிக் கொள்ளமுடியும்.

பாடவிடயத்தை படிக்க ஆரம்பிக்க முன்னர் அது பற்றி மேலோட் டமாக மதிப்பீடு செய்வதும் முக்கியமானதாகும். தாம் சுயகற்றலில் ஈடுபடவிருக்கும் பாட அலகின் தலைப்புக்கள், உபதலைப்புக்கள், பாடச் சுருக்கம் என்பவற்றையும் கருத்தில் கொள்வதும் 'எல்லைப்படுத்தலில்' உள்ளடக்கப்படுகின்றது.

கற்றல் நடைபெறும் இடம், கற்றல் சூழல் என்பனவும் முக்கியமான வையாகும். தூய்மை, அமைதி, காற்றோட்டம், வெளிச்சம் உள்ள இடங்களை கற்றலுக்காக தெரிவு செய்து கொள்ளவேண்டும். உளத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக இந்த இடம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப்படுவதும் நல்லது. அத்துடன்

படிக்கின்ற மேசையில் அதிகமான புத்தகங்களையோ அல்லது அதிக பொருட்களையோ வைத்திருப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இது மனச்சலிப்பையும் களைப்பையும் தவிர்த்துக் கொள்ளும். சுய கற்றலுக்கு பயன்படுத்தப்படும் புத்தகம் மாத்திரமே அவ்வேளையில் அம் மேசையில் இருத்தல் வேண்டும். மேசை விரிப்பு தூய வெண்மையான துணியாக இருப்பது சிறந்தது. கற்கும் நேரத்தில் கூடியவரை மாணவர் நிமிர்ந்து இருந்து கற்பது கற்றலை வளமுள்ளதாக்கும். அத்துடன் மன அலைச்சல், நித்திரை, சோம்பல் என்பன தவிர்க்கப்படும்.

## 2. Question: வினாக்கேட்டல்

நேரசூசியின் பிரகாரம் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் அமரும் ஒரு மாணவன் ஓர் பாட விடயத்தை வாசிப்பதற்கு முன்னர் அப்பாட அலகு தொடர்பான பல்வேறு வினாக்களை வாசிப்பதையே இது குறிக்கின்றது. பாடப்புத்தகம், பாடக்குறிப்பு என்பனவற்றிற்கு மேலதி கமாக மாணவர்களிடம் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் வினாப்பத்திரங்களும் அலகு ரீதியான ஒப்படைகளுமாகும். ஆரம்ப நாட்களிலேயே மாணவர்கள் இதனை சேகரித்து கோவைப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

வினாக்களை முன்னரே வாசிப்பதால் புத்தகத்திலுள்ள முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தி வாசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

## 3. Read: வாசித்தல்

குறித்த பாட அலகிற்குரிய வினாக்களை வாசித்து முடித்த பின்னர் அம்மாணவர் பாடவிடயத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தேடலை இது குறிக்கின்றது. வினாக்களுக்குரிய விடை அறியப்படும் வரை மீண்டும் மீண்டும் விடயத்தை வாசிக்க வேண்டும். வாசிக்கும்போது மெதுவான சத்தத்துடன் பொருள் விளங்கி தொடர்புபடுத்தி வாசிக்க வேண்டும். குறித்த வினாவுக்கான விடை அறியப்பட்டவுடன் அப்பாட அலகில் எழுப்பக்கூடிய மேலும் பல வினாக்களை உருவாக்கி மீண்டும் மீண்டும் வாசிப்பதினூடாக அப்பாட அலகை மேலும் தெளிவாக்கிக் கொள்ள முடிவதோடு நிறைவான மனப்பதிவையும் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

வாசிக்கின்ற வேளைகளில், கற்கும் பாடத்தின் பிரதான கருத்துக்களை சுருக்க குறிப்புக்களாக எழுதி வருதல் வேண்டும். சுருக்கக் குறிப்பு

எழுதுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக சிறிய கொப்பி களைப் பயன்படுத்த முடியும்.

இக்குறிப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டதாக, திருத்தமாக எழுதப்படல் வேண்டும்.

**4. Recite: சொல்லிப்பார்த்தல்**

வாசித்த விடயங்களை சொந்த மொழியில் சொல்லிப் பார்த்தலை இது குறிக்கின்றது. சுய கற்றல் நடைமுறையின் இதயப்பகுதியாக இதனை கருதலாம். ஆரம்பத்தில் இது மிகவும் கடினமானதாகவே தோன்றும். பாடவிடயங்களை சிறிது சிறிதாக வாசித்து பின்னர் சொல்லிப் பார்ப் பதன் மூலம் இச்செயற்பாட்டில் பயிற்சி பெறமுடியும். தொடர்ச்சியான பயிற்சியும் முயற்சியும் திருவினையாக்கும்.

**5. Review: மீட்டுப்பார்த்தல்**

நேரசூசியின் பிரகாரம் வாசித்து முடித்த விடயத்தை நிறுத்திய பின்னர் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு கற்றவற்றை சுருக்கமாக மீட்டிப் பார்ப் பதனை இது குறிக்கின்றது. இப்பாட அலகில் முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு முழுமையாக விடை எழுதுதலும் இதனுள் அடக்கப் படுகின்றது.

தற்போது இந்த 3R இற்கு மேலதிகமாக 2R பற்றியும் பேசப்படு கின்றது. அவை

**R : Reflect:** சிந்தனைத் தெறிப்பு

கற்றவிடயம் தொடர்பாக மேலதிக விடயங்களையும் உதாரணங் களையும் சிந்திப்பதை இது குறிக்கின்றது. இதன் மூலம் விடயங்கள் மனதில் ஆழப்பதிவாகிவிடும்.

**R : Relate:** தொடர்புபடுத்திப்பார்த்தல்

கற்ற விடயங்களை தமது சொந்த வாழ்க்கை அனுபவங்கள் அல்லது சம்பவங்களுடன் இணைத்துப் பார்ப்பதனை இது குறிக்கின்றது. கற்ற விடயங்கள் நீண்டகாலம் நினைவில் இருப்பதற்கு இது உதவி செய்யும்.

இவ்வாறாக பிரான்சிஸ் றொபின்சன் குறிப்பிட்ட SQ 3R உடன் மேலும் 2R ஐ சேர்த்து SQ 5R என அழைக்கலாம்.

இவ்வாறு நேரசூசியின் பிரகாரம் ஒவ்வொரு கற்றல் வேளைகளிலும் மேலே கூறப்பட்ட SQ 3R அல்லது SQ 5R படிமுறைகளை மாணவர்

தொடர்ச்சியாக பின்பற்றும் போது கல்வியில் அவர்களின் வெற்றிக்கான வாய்ப்பு மிக அதிகமாகும். ஆசிரியர்கள் தமது கற்பித்தல் வேளைகளின் போதும் சுயகற்றல் திறன்களை மாணவரிடத்தே விருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்குவது அவசியமும் காலத்தின் தேவையுமாகும்.

சுயகற்றல் ஆரம்பிப்பதற்கு முன்பாக குறைந்தது 10 நிமிடமாவது பிரார்த்தனை செய்வது மன அமைதிக்கு அத்திவாரமிடக் கூடியது. இங்கு பிரார்த்தனை என்பது இறை வழிபாடு, தோத்திரங்களைப் பாடுதல், இறை நாமம் உச்சரித்தல், நன்நூல்களை வாசித்தல், தன்னைப்பற்றி சிந்தித்தல் போன்வற்றைக் குறிக்கின்றது. விசேடமாக ஒவ்வொரு மாணவர்களும் 'பெருமைக்குரிய சாதனையாளர்' ஒருவரின் வரலாற்றை தினசரி வாசித்து வரவேண்டும். அது சுவாமி விவேகானந்தர், கலாநிதி அப்துல்கலாம், அன்னை திரேசா போன்றோர் பற்றியதாக இருக்கலாம். இவற்றிற்காகவும் 'சுயகற்றல் நேரசூசி'யில் நேர ஒதுக்கீடு செய்வது அதியுயர் பண்பாகும்.

9

# கணித வழுக்களும் அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளும்

## அறிமுகம்

பாடசாலைகளில் முறைசார் கல்வியினூடாக தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் மாணவர்கள் 'கணிதம்' எனும் பாடத்தைக் கற்று வருகின்றனர். சர்வதேச ரீதியில் இது ஓர் முக்கியமான பாடமாகவும் கருதப்படுகின்றது. அதேவேளை பல மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் கூட இது ஒரு சுமையாகவும், கசப்பாகவும் இருந்து வருகின்றது. அதிகமான மாணவர்கள் ஆரம்ப வகுப்புகளில் இருந்தே கணித பாடத்தை விருப்புடன் கற்பதில்லை எனவும் அறியமுடிகின்றது. இதன் காரணமாக அநேக மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யிலும், க.பொ.த. (சா/த) பரீட்சையிலும் கணித பாடத்தில் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர். எமது நாட்டில் வருடாந்தம் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 50 சதவீதத்திலும் கூடிய மாணவர்கள் கணித பாடத்தில் சித்திபெற தவறுகின்றனர் என்பதனை புள்ளிவிபரம் எடுத்துக் காட்டு கின்றது. பதினொரு வருடம் பாடசாலைகளில் இப்பாடத்தை கற்று வந்த மாணவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்படுவது கவலையளிப்பதும் சிந்திக்கப்பட வேண்டியதுமாகும். அதுமட்டுமல்ல க.பொ.த. (உ/த) வகுப்பிற்கான அனுமதி, தொழிநுட்பக்கல்லூரிக்கான அனுமதி என்பன வற்றிற்கும் கணித பாட சித்தி கட்டாயமானதாக கருதப்படுகின்ற நிலையில், இப்பாடத்தில் சித்திபெறத் தவறும் மாணவர்களில் எதிர் காலமே கேள்விக் குறியாகி விடுகின்றது. இதனையே ஆய்வாளர் Clark என்பார்

''ஒரு பிள்ளை விஞ்ஞானம், தொழிநுட்பத்துறைகளில் முன்னேறு வதற்கு கணிதத்திறமை மிக முக்கியமானதாகும்.'' எனக் குறிப்பிடுகின்றார். அதேவேளை

Eccles என்பார்

''கணித குறைபாடானது மாணவர்களின் தொழில் தெரிவினை வரை யறுக்கின்றது'' என்கின்றார்.

**கணிதம் என்றால் என்ன?**

வகுப்பறைகளில் ஒரு கட்டாய பாடமாக 'கணிதம்' கற்பிக்கப்படுகின்றது. முதல் மொழி (தமிழ்), இரண்டாம் மொழி (ஆங்கிலம்), விஞ்ஞானம், வரலாறு, சமயம் போன்ற பாடங்களில் இருந்து 'கணிதம்' என்பதனை வேறுபட்டதாகவே கல்வியாளர்கள் நோக்குகின்றனர்.

W. சோயர் என்பவர்

''கோலங்களின் கல்விதான் கணிதம்'' என்கின்றார். மேலும் இவர்

''கணிதம் அழகியலோடு தொடர்புடையது'' என்றும் கருதுகின்றார்.

Jenson என்பார்,

''கணிதம் சர்வ சாதாரணமான ஒரு மொழி'' எனக் குறிப்பிடுகின்றார்.

பெரும்பாலான ஆய்வாளர்கள்,

''கணிதம் என்பது ஓர் கலை'' என்றே கருதுகின்றனர்.

இதனால் இயல், இசை, நாடகம் போன்ற கலைகளினூடாகப் பெறுகின்ற 'இன்பம்' கணித பாடத்தினூடாக மாணவர்களுக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். கற்றல் - செயற்பாட்டின் போது மாணவர்கள் கணித பாடத்தை அனுபவித்துக் கற்கும் வண்ணம், மகிழ்ச்சிகரமான கற்பித்தலை கணித ஆசிரியர் நடாத்துதல் வேண்டும்.

பொதுவாக வாய்ப்பாடுகளை மனனஞ் செய்வதில் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். ஆசிரியர்களும் பெரும் கஷ்ரத்தின் மத்தியிலே இதனை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இந்த வாய்ப்பாடுகளுக்கிடையேயான 'கணித கோலத்தை' மாணவர் விளக்கம் பெறும்போது அவர்கள் மிகவும் இலகுவாகவும், நிரந்தரமாகவும் மனப் பதிவை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இதற்கு உதாரணமாக 9 ஆம் வாய்ப்பாட்டை கருதும் போது

1 x 9 = 09

2 x 9 = 18

3 x 9 = 27

4 x 9 = 36

என்றவாறு தொடர்கின்றது. இங்குள்ள கோலத்தை அவதானித்தால் அடுத்தடுத்த வரிகளில் ஒன்றாம் இடம் 1 ஆல் குறைந்து வருவதையும் (9, 8, 7, 6...) பத்தாம் இடம் 1 ஆல் அதிகரித்து வருவதையும் (0, 1, 2, 3, ...) காணலாம். இதனை மாணவர் விளங்கிக் கொண்டால், அடுத்த வரியில் வருவது 5 x 9 = 45 என மனப்பாடமின்றிக் கூறிவிடுவர். இதேபோல்

111 x 111 = 12321 என விடை கிடைக்கப்பெறும். இங்குள்ள கோலத்தை அவதானித்தால் இதுபோன்ற பல வினாக்களுக்கு கணிப் பின்றி உடனடியாக விடையளிக்க முடியும். இதன் அடிப்படையில் 1111 x 1111 = 1234321 என உடனே கூறலாம். இவ்வாறான பல கோலங்களைக் கொண்டதுதான் கணிதமாகும்.

**கணித வழுக்கள்**

மாணவர்கள் கணித பிரசினமொன்றில் சரியான விடையில் இருந்து வேறுபட்ட விடைகளையளிப்பது கணித வழுக்கள் எனலாம். பேச்சு வழக்கில் இதனை நாம் 'கணிதப்பிழைகள்' எனக் கூறுகின்றோம். கணித வழுக்கள் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில், முதல் முதலில் கணித வழுக்கள் தொடர்பான ஓர் ஆய்வு 1987ம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவக கணித - விஞ்ஞானப் பிரிவால் மேற்கொள்ளப் பட்டது. இதன் பின்னர் 1994ம் ஆண்டு திரு. G.L. நாணயக்கார அவர்கள் தனது கலாநிதி பட்டத்திற்காக கணித வழுக்கள் பற்றிய ஓர் ஆய்வை மேற்கொண்டார்கள்.

கணித வழுக்கள் மாணவர்களின் கற்றலுக்கு தடையாக இருப்பதோடு, அவர்களின் கல்வி அடைவையும் பாதித்து உள ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய வழுக்களை மாணவர்கள் தற்செயலாகவே விடுகின்றனர். இதனால் வினாவுக்கான அவர்களின் தீர்வுகள் பல்வேறாக அமைந்து விடுகின்றன.

முல்கேன், கிறிர் (1989) ஆகியோர் 'பிள்ளைகளிடம் வழுக்கள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அடிக்கடி நிகழ்கின்றன. ஏனெனின் ஆசிரியர்கள் வழுக்கள் பற்றி ஆராய்வதில்லை' என குறிப்பிடுகின்றனர்.

**வழுக்கவின் வகைகள்**

என்கில் ஹார்ட் (1982) என்பவர் வழுக்களை நான்காக வகைப்படுத்து கின்றார்.

1. பொறிமுறையான வழுக்கள் (Mechanical Eror)
2. கவனயீன வழுக்கள் (Careless Error)
3. எண்ணக்கரு ரீதியான வழுக்கள் (Conceptual Error)
4. செயன்முறை ரீதியான வழுக்கள் (Procedural Error)

1. **பொறிமுறையான வழுக்கள்:** கணித செய்கைகள் அல்லது குறியீடு களை கையாள்வதில் ஏற்படக்கூடிய வழுக்கள் பொறிமுறை ரீதியான வழுக்களாகும்.

உ + ம்: $9 \div 3 = 12$

இங்கு வகுத்தல் அடையாளம் கூட்டல் அடையாளமாக கருதப்பட்டுள்ளது.

2. **கவனயீன வழுக்கள்:** உளரீதியான தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு அதிகமாக ஏற்படுவது கவனயீன வழுக்களாகும். பயம், எதிரான மனப்பாங்கு, அவசரம், பேராசை போன்ற மனச் செயற்பாடுகளினால் கவனயீன வழுக்கள் அதிகமாக ஏற்படலாம். இது தற்செயலாகவே ஏற்படுகின்றது. ஆனால் மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடியதல்ல. இத்தகைய வழுக்கள் தங்களுக்கு ஏன் ஏற்பட்டது என்பதனை மாணவர்களாலும் விளங்கிக் கொள்ளமுடியாமல் இருக்கும்.

உ + ம்: $(4x)^2 = 16x$

3. **எண்ணக்கரு ரீதியான வழுக்கள்:** கணித எண்ணக்கருக்களைத் தவறாகப் பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற வழுக்கள் எண்ணக்கரு ரீதியான வழுக்கள் ஆகும். இத்தகைய வழுக்களே மிக அதிகமாக மாணவர்

களுக்கு ஏற்படுகின்றது. கற்பித்தலின்போது பாடவிடயம் தொடர்பாக சரியான எண்ணக்கருவாக்கம் உருவாகாமையினாலே இத்தகைய வழு மாணவர்களுக்கு ஏற்படுகின்றது.

உ + ம்: $\frac{1}{5} + \frac{1}{3} = \frac{1+1}{5+3} = \frac{2}{8}$

பின்வரும் கல்வியாளர்களின் கருத்துக்களை இதற்கு ஆதாரமாக கொள்ள முடியும்.

Oaks என்பவர்

'மாணவரது கணித செய்முறையின் இடர்பாடு அவர்களது கணித எண்ணக்கருவாக்கத்தோடு தொடர்புபடுகின்றது' என குறிப்பிடுகின்றார். மேலும்

Hiebert என்பவர்

'எண்ணக்கரு விளக்கமும் செய்முறைத்திறனும் கணிதத்தின் வெற்றிக்கு தேவையாக இருக்கின்றன' என்கின்றார்.

4. **செய்முறை ரீதியான வழுக்கள்:** கற்றல், மதிப்பீடு, பரீட்சை செயற் பாட்டின் போது தவறான படிமுறைகளை பின்பற்றுவதனை இத்தகைய வழுக்கள் குறிக்கின்றன.

உ + ம்: $(a+b)^2 = a^2 + b^2$

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து வழுக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவையாகும். சில வழுக்கள் எதனைச் சார்ந்தவை என்பதனை நிட்சய மாக கூறமுடியாதிருக்கும். அது எண்ணக்கரு வழுக்களாகவும் கவனயின வழுக்களாகவும் செய்முறை ரீதியான வழுக்களாகவும் கருத வாய்ப் புள்ளது.

**வழுக்கள் ஏற்படுவதற்கான காரணிகள்**

நியுமன் (1983) என்பவர் வழுக்கள் ஏற்படுவதில் பின்வருவன செல்வாக்கு செலுத்தும் என கூறுகின்றார்.

1. வாசிப்பு ஆற்றல்
2. கிரகிக்கும் ஆற்றல்

3. நிலைமாற்றுதல்

4. செய்முறைத்திறன்

5. சரியாக குறிக்கும் திறன்

மேலுள்ளவற்றில் பயிற்சிகள் வழங்கும்போது தானாகவே மாணவர்களின் வழுக்கள் குறைவடைந்துவிடும்.

**வழுக்களை குறைப்பதற்கான ஆலோசனைகள்**

வகுப்பறையில் முதல் நிலை முகாமையாளராக இருப்பவர் ஆசிரியர் ஆவார். ஆசிரியரின் வெற்றிகரமான செயற்பாடுகளினால், மாணவர்களுக்கு ஏற்படும் கணித வழுக்களைக் குறைக்கமுடியும். மதிப்பீடு, கணிப்பீடு வேளைகளில் மாணவர் பிழைவிடும்போது, அத்தகைய பிழையானது மேலே அறியப்பட்ட எந்த வழுக்களை சார்ந்தது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த வழுக்களுக்கான காரணத்தை அறிந்து, பரிகாரம் காண்பதன் மூலம் மேலும் வழுக்கள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளமுடியும். பொதுவாக கணித வழுக்களை குறைப்பதற்கான அல்லது தவிர்ப்பதற்கான ஆலோசனைகளாக பின்வருவன பொருத்தமாக இருக்கும்.

1. கற்பித்தலானது மாணவர் மையக்கற்பித்தலாக இருக்கவேண்டும்.
2. பாடவேளையின் போது குழுச் செயற்பாடுகளும் முன் வைப்புக்களும் அவசியமானதாகும்.
3. கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர் - மாணவர், மாணவர் - ஆசிரியர் இடைத்தொடர்புகள் இடம்பெற வேண்டும்.
4. கற்பித்தலானது எண்ணக்கரு வளர்ச்சிக்கேற்ப அமைதல் வேண்டும்.
5 மாணவர்கள் கொண்டுள்ள வார்ப்பு எண்ணக்கருக்கள், போலி எண்ணக்கருக்கள் என்பன இனங்காணப்பட்டு சரியான எண்ணக் கருவாக்கம் உருவாக்கப்படல் வேண்டும்.
6. ஓர் அலகை கற்பிப்பதற்கு முன்னர் முற்சோதனை (Pre Test) ஒன்றை நடாத்துவது சிறந்தது.
7. ஒவ்வொரு பாடவேளையிலும் மதிப்பீடு நடைபெறல் வேண்டும்.

8. தினசரி வீட்டுவேலை - ஒப்படைகள் மாணவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

9. போதுமான வகையில் ஊக்குவிப்பு, கணிப்பு என்பன மாணவர் களுக்கு கொடுக்கப்படல் வேண்டும்.

10. ஆசிரியர் பாடப்புலமை, தொழில்புலமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

11. பாடவிடயம் தொடர்பாக ஆசிரியர் சரியான எண்ணக் கருவாக்கம் பெற்றிருக்க வேண்டும்.

12. வகுப்பறை கவின்நிலை மகிழ்ச்சிகரமானதாக இருக்க வேண்டும்.

**முடிவுரை**

மாணவர்கள் ஒரு நாட்டின் வளங்களாகும். அவர்களே எதிர்கால தலை வர்களுமாவர். கல்வித்தாகம் கொண்டவர்களாக மாணவர்கள் பாட சாலைக்கு வருகின்றனர். அவர்கள் தேவைகள், விருப்பு வெறுப்புக்கள் வேறுபட்டதாக இருக்கும். அதற்கேற்ப ஆசிரியர் தம் கற்பித்தல் பாணியை மாற்றிக்கொள்ள வேண்டும். பாடசாலைக் கவின்நிலை, வகுப்பறை கவின்நிலை என்பனவற்றை சிறப்பாக அமைத்துக் கொள்வதில் பெரும் பங்கு ஆசிரியருக்கே உண்டு. மாணவர் வகுப்பறையை வெறுப்பதும் நேசிப்பதும் ஆசிரியர் கையிலே உள்ளது. கல்விச் சமூகம் எதிர்பார்ப்பது போன்று, ஆசிரியர் தம்பொறுப்பை உணர்ந்து அர்ப்பணிப்புடன் தம் பணியை செவ்வனே செய்யும்போது, அதனூடாக இறைவனுக்கே சேவை செய்யமுடியும். இத்தகைய உயர் சிந்தனையுடன் வெற்றிகரமான கற்பித்தலை ஆசிரியர் நடாத்தும் போது கணித வழுக்கள் மட்டுமல்ல வாழ்க்கை வழுக்களும் இல்லாதொழிந்து நல்ல சமூகமும், சுபீட்சமான தேசமும் உருவாக வழி ஏற்படும்.

10

# க.பொ.த. (உ/த) பரீட்சையின் சமகாலப் போக்கு . . . – ஓர் ஆய்வு

## அறிமுகம்

எமது நாட்டில் இலவசக்கல்வியின் விரிவு காரணமாக பாடசாலையில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது. எழுத்தறிவு வீதம் 93% ஆக காணப்படுகின்றது. இதனால் நிர்வாக பரவலாக்கல், பாடசாலைகளின் எண்ணிக்கை, கல்விக்கான செலவீனம் போன்ற அளவறி பண்புகள் உச்ச நிலையை அடைந்துள்ளன. இதனை கீழ்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

**அட்டவணை 1: பொதுவான தகவல்**

| | | |
|---|---|---|
| பாடசாலைகளின் எண்ணிக்கை | - | 10414 |
| மாணவர்களின் எண்ணிக்கை | - | 41,00000 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | - | 224,000 |
| மாணவர் - ஆசிரியர் விகிதம் | - | 19:1 |
| கல்விக்கான செலவீனம் | - | 92.5 பில்லியன் |
| பாடசாலை அடர்த்தி | - | 67 $Km^2$ |

மூலம்: மத்திய வங்கி அறிக்கை - 2010

இத்தகைய அளவறி அதிகரிப்பிற்கேற்ப, பண்பு ரீதியான அதிகரிப்பு ஏற்படவில்லை என்றும், கல்வித்துறையில் எல்லா மட்டங்களிலும் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாகவும் பரவலாகக் குறை கூறப்படுகின்றது.

மாணவர்கள் பாடசாலையில் 13 வருடங்களைக் கழிக்கின்றனர். இக்காலங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: பாடசாலையில் வகுப்பு பிரிவுகள்**

| பிரிவு | வருடங்கள் | தரம் |
|---|---|---|
| ஆரம்பப்பிரிவு | 5 | 1 - 5 |
| கனிஷ்ட இடைநிலைப் பிரிவு | 4 | 6 - 9 |
| க.பொ.த.(சா/த) | 2 | 10, 11 |
| க.பொ.த.(உ/த) | 2 | 12, 13 |

மூலம்: Achieving Excellence with Equity Ministry of Education.

இவ் 13 வருட காலப்பகுதியில் மாணவர்கள் மிக முக்கியமான மூன்று தேசிய பரீட்சைகளை எதிர்நோக்குகின்றனர். ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சை என்பனவே அவையாகும்.

இப்பரீட்சைகளில் தேசிய ரீதியான சாதனை எதிர்பார்த்த மட்டத்தினை அடையவில்லை என்பதனை கீழ்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றது.

**அட்டவணை 3: தேசிய பரீட்சைகளில் சித்தி வீதங்கள்**

| | |
|---|---|
| புலமைப்பரிசில் பரீட்சை சித்தி | 11.8% |
| க.பொ.த.(சா/த) பரீட்சை உயர்தர - தகைமை | 56.8% |
| க.பொ.த.(உ/த) பரீட்சை பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி | 61.8% |

மூலம்: இலங்கையின் பொதுக்கல்விக்கான புதிய கல்விச்சட்டம் - 2009

க.பொ.த.(உ/த) பரீட்சை 1964ம்ஆண்டு முதல் நடாத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் இது ஒரு சான்றிதழ் வழங்கும் பரீட்சையாக இருந்தபோதிலும், பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு தகுதியானோரை தெரிவு செய்யும் பரீட்சையாகவும், கல்வி கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் அடிப்படை பரீட்சையாகவும் இது மாறியுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக அண்மைக்காலங்களில் க.பொ.த. (உ/த)

பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெறல் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு பரீட்சைகளில் தோற்றுவதற்கு அடிப்படை தகைமையாகவும், வேலைவாய்ப்புகளை பெறுவதற்கான தகைமையாகவும் இது வேண்டப் படுகின்றது. இதன் காரணமாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்திய டையும் பெரும்பாலானோர் க.பொ.த. (உ/த) பரீட்சையில் யாதாயினும் ஒரு பாடநெறியை பின்பற்ற கடுமையாக முயற்சிக்கின்றனர். இப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்படுகின்றது. ஒவ்வொரு ஐந்து வருடத்திலும் இப்பரீட்சையில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்கூடுதலாக அதிகரித்து வருவதை இது புலப்படுத்துகின்றது.

**அட்டவணை 4: க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றியோர் விபரம்**

| பரீட்சை வருடம் | க.பொ.த. (உ/த) தோற்றியோர் |
|---|---|
| 1985 | 82, 575 |
| 1990 | 109, 537 |
| 1995 | 136, 728 |
| 2000 | 214, 189 |
| 2004 | 199, 937 |
| 2009 | 205, 249 |

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

சமகாலத்தில் சுமார் இரண்டு இலட்சம் மாணவர்கள் வருடாந்தம் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றி வருகின்றனர். உ/த வகுப்பில் இரண்டு வருட பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் பாடசாலை கல்விக்கு மேலதிகமாக பிரேத்தியேக கல்விக்கு அதிக பணம் செலவு செய்கின்றனர். பாடசாலையிலும் கணிப்பீடு, செய்திட்டம், செய்முறை என அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. வீட்டில் பெற்றோரும் பெரும் எதிர்பார்ப் புகளுடன், மாணவர்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்கின்றனர். ஆயினும் க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகள் பெரும் பாலானோரை ஏமாற்றி விடுகின்றது. 1992 மே இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை முதல் 1997 இல் வெளியான பொதுக்கல்வி சீர்திருத்தங்கள் வரை இதனையே கோடிட்டு காட்டுகின்றன. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் சுமார் 9.0 சதவீதத்தினர்

தாம் தோற்றும் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையத் தவறுகின்றனர் என்ற விடயமும் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றிற்கு மேலதிகமாக, பாடசாலைக் கல்வியில் எல்லா மட்டங் களிலும் இடைவிலகல் மிகவும் அதிகமாக உள்ளதனை கீழ்வரும் அட்டவணை மெய்ப்பிக்கின்றது.

அட்டவணை 5: இடை விலகல் தொடர்பான விபரம்

| | |
|---|---|
| தகைமை பெற்றவர்களில் தரம் 1 இற்கு அனுமதி | 97% |
| இவர்களுள் ஆரம்ப கல்வியை பூர்த்தி செய்பவர் | 95% |
| இவர்களுள் க.பொ.த. (சா/த) வகுப்பிற்கு அனுமதி | 70% |
| இவர்களுள் க.பொ.த. (உ/த) வகுப்பிற்கு அனுமதி | 36% |
| இவர்களுள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி | 02% |

இதிலிருந்து தரம் 1 இற்கு அனுமதி பெற தகைமையுடைய மாணவர்களில் 100 பேரை கருத்தில் கொள்ளும் போது இவர்களில் 2 பேர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றார் என்ற விடயம் புலனாகின்றது.

## க.பொ.த. [உ/த] வகுப்பிற்கான புதிய கல்விச் சீர்திருத்தம்

பொதுமக்களின் தேவைகள், வேலையில்லாத் திண்டாட்ட நிலை, பரீட்சை களில் குறைந்த பெறுபேறு, பாடசாலைக்கல்வியை புறக்கணித்தல், கல்வியில் பங்கேற்கா வீதங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு புதிய கல்வி சீர்திருத்தம் 1998 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. முக்கியமாக மனித அபிவிருத்தியையே நோக்கமாகக் கொண்டு, முறைசார் கல்வியில் ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்கமுடியாத ஐம்பெரும் பகுதிகளை இச்சீர் திருத்தம் கொண்டிருந்தது. அவை

- கல்விக்கான வாய்ப்புகளை விரிவாக்கல்.
- கல்வியின் தரத்தை மேம்படுத்தல்.
- செயல்முறை மற்றும் தொழில்நுட்ப திறன்களை விருத்தி செய்தல்.
- ஆசிரியருக்கு கல்வியும் பயிற்சியும் வழங்குதல்.
- முகாமைத்துவமும், வளங்களும் வழங்குதல்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு க.பொ.த. (உ/த) வகுப்பிற்கு 1998 முதல் புதிய நடைமுறைகள் வகுக்கப்பட்டன. அவற்றுள் பொருத்த மானவை சில இங்கு கருதப்படுகின்றன.

1. **மாணவர்கள் தோற்ற வேண்டிய பாடங்கள் நான்கிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டன:** 1964ம் ஆண்டு முதல் 1999ம் ஆண்டு வரை உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களுக்கே மாணவர் தோற்றிவந்தனர். இது மாணவர்களுக்கு பெரும் சுமையாக இருந்தமையும் இதன் காரணமாகவே பரீட்சையில் சித்தியின்மை மிக அதிகமாக ஏற்படுவ தாகவும் கருதப்பட்டமையினாலே மாணவரின் சுமையை குறைக்கும் நோக்கில் இந்த மாற்றம் செய்யப்பட்டது.

2. **பல்கலைக்கழக அனுமதிக்கான பொது சாதாரண பரீட்சை (Common General Paper):** இப்பரீட்சையானது மாணவர்களின் வகுப்பறை கற்றலுக்கு மேலதிகமாக, சூழல் தொடர்பான தகமையை விருத்தி செய்வதாகவும், வாசிகசாலை பயன்பாட்டை அதிகரிக்கும் நோக் குடனும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

   பொதுவாக பொதுவிழிப்புணர்வு, பிரச்சினை விடுவிக்கும் திறமை, காரணங்காணல் திறன், உள்வாங்கி தொடர்பு செய்யும் ஆற்றல் ஆகிய அறிவு திறமைகளை கணிப்பதாக இப்பரீட்சை அமைகின்றது. இப்பரீட்சையில் 30% இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு விண்ணப் பிக்க தகைமை பெறமுடியும்.

3. **பொது ஆங்கிலப் பாடப் பரீட்சை:** அனைத்து க.பொ.த. (உ/த) மாணவர் களும் ஆங்கிலப் பாட பரீட்சைக்கு தோற்றவேண்டும். ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் காரணமாக இது கட்டாய தேவையாகும். பல்கலைக்கழக கல்வியை ஆங்கில மொழியில் பயில்வதற்கும் பட்டப்பின் பட்டங்களை தொடர்வதற்கு சாதகமாகவும் தொடர்பாடல் தேர்ச்சியை விருத்தி செய்து தொழில்வாய்ப்பை அதிகரிப்பதற்கும் நவீன தொழில்நுட்ப கல்விக்கான வாய்ப்பை அதிகரிப்பதற்காகவும் இந்த புதிய நடைமுறை உள்ளது.

   ஆயினும் பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கிலப் பாடசித்தி கட்டாயமானதல்ல. இதன் காரணமாக மாணவர்கள் பலர் இதற்கு முக்கியத் துவம் கொடுப்பதேயில்லை.

4. **செய்திட்ட வேலை:** மாணவர்கள் தனியாகவும்,குழுவாகவும் இரண்டு செய்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் இயல் பான ஆற்றல்களை வெளிப்படுத்துவதனையும், சமூகப்பண்புகள் விருத்தியடைவதையும் நோக்கமாகக் கொண்டு வாழ்க்கைத் தகைமை விருத்தி செய்திட்டமாக இது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

இந்நடைமுறையானது எதிர்கால ஆய்விற்கான ஓர் அடிப் படையுமாகும்.

5. **பாடசாலை மட்டக்கணிப்பீடு:** கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை மிகவும் கருத்துடையதாக்குவதற்கு செய்முறையும், கணிப்பீடும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

பாடசாலைக்கு மாணவர்களின் வரவை அதிகரிப்பதனையும், முழுநேரமும் மாணவர் துலங்கல் நடைபெறுவதை நோக்கமாகவும் கொண்டது இந்நடைமுறை. மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவதற்கு தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 80% கணிப்பீட்டிற்கு தோற்றியிருக்க வேண்டும்.

6. **மாணவர் தேர்ச்சி மட்ட அறிக்கை புத்தகம்:** 12ம், 13ம் வகுப்புகளில் ஒவ்வொரு கணிப்பீட்டு சந்தர்ப்பங்களிலும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள், வாழ்க்கைத் தகைமை விருத்தி செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளும் தரங்கள், தவணைப்பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் என்பவற்றை இவ் அறிக்கை புத்தகத்தில் பதியவேண்டும். மேலதிகமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளான தலைமைத்துவம், விளையாட்டு, இணைப்பாடவிதான செயற்பாடுகள், சமூக சேவைகளின் பங்களிப்பு, கழகங்களில் ஈடுபாடு என்பனவும் இப்புத்தகத்தில் பதியப்பட்ட வேண்டும்.

மொத்தத்தில் மாணவர்களை வகுப்பறைக்குள்ளும் வெளியிலும் முழுமையான ஆளுமை நிறைந்த மனிதனாக மாற்றிக் கொள்வதற்கு வேண்டி அனைத்து அம்சங்கள் பற்றியும் சீர்திருத்தம் முன்மொழிந் துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நவீன யுகத்திற்கு தேவையான மனித குலத்தை உருவாக்குவதற்கு இச்சீர்திருத்தம் போதுமானது என்றால் அது மிகையாகாது.

## சீர்திருத்தத்தின் பின்னர் க.பொ.த. [உ/த] பரீட்சை முடிவுகள்

40 வருடகால வரலாற்றைக் கொண்ட க.பொ.த. உ/த பரீட்சை, 1998 இல் புதுவடிவம் பெற்றது. இப்புதுவடிவத்தின் முதலாவது பரீட்சை 2000ம் ஆண்டு நடைபெற்று முடிந்துள்ளது. அதன் பின்னர் 2010 வரை மொத்தமாக பத்து பரீட்சைகள் இதுவரை நடைபெற்று விட்டன. கடும் எதிர்பார்ப்புகளுடனும் புதிய சீர்திருத்தங்களுடனும் நடைபெற்ற இப் பரீட்சை முடிவுகள் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன? என்ப தனை அறிய வேண்டியது அவசியமானதாகும். இது கல்வியாளர்களின் கடமையும் கூட. இதனால் இக்கட்டுரையின் இதயப்பகுதி இதுவே எனக்கூட கூறலாம். இதற்காக சீர்திருத்தத்தின் முன்பும், பின்னரும் நடைபெற்ற க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகள் இங்கு முன்வைக்கப் படுகின்றன.

**அட்டவணை 6: பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோர் விபரம்**

| | (உ/த) பரீட்சை வருடம் | பரீட்சைக்கு தோற்றியோர் ① | தகைமை பெற்றோர் ② | சதவீதம் ②/① x100 | பல்கலைக் கழகத்திற்கு ③ அனுமதி பெற்றோர் | சதவீதம் ③/① x100 |
|---|---|---|---|---|---|---|
| சீர்திருத்தத்தின் முன்னர் | 1995 | 136, 728 | 70, 379 | 51.47 | 11, 200 | 8.2 |
| | 1996 | 141, 161 | 71, 846 | 50.90 | 11, 658 | 8.3 |
| | 1997 | 142, 336 | 73, 570 | 51.69 | 11, 901 | 8.4 |
| | 1998 | 147, 853 | 73, 422 | 49.66 | 11, 821 | 8.0 |
| | 1999 | 169, 679 | 73, 561 | 43.35 | 12, 040 | 7.0 |
| சீர்திருத்தத்தின் பின்னர் | 2000 | 214, 189 | 916, 76 | 42.80 | 12, 132 | 5.7 |
| | 2001 | 218, 441 | 984, 32 | 45.06 | 12, 654 | 5.8 |
| | 2002 | 210, 141 | 922, 52 | 43.90 | 13, 036 | 6.2 |
| | 2003 | 247, 755 | 933, 58 | 37.68 | 14, 260 | 5.8 |
| | 2004 | 199, 937 | 108, 357 | 54.20 | 14, 850 | 7.4 |
| | 2005 | 204. 030 | 118, 770 | 58.21 | 17, 287 | 8.5 |
| | 2006 | 201, 686 | 119, 955 | 59.47 | 17, 248 | 8.6 |
| | 2007 | 198, 183 | 121, 421 | 61.26 | 20, 069 | 10.1 |
| | 2008 | 207, 436 | 130, 236 | 62.78 | 20, 270 | 9.7 |
| | 2009 | 205, 249 | 125, 284 | 61.04 | 21, 547 | 10.5 |

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. இலங்கை 2011/2012

இவ் அட்டவணை 5 இல் கல்வி சீர்திருத்தத்தின் முன்னரான ஐந்து வருடங்களும், பின்னரான பத்து வருடங்களும் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளன. இதன் மூலம் நாம் பல உண்மைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

1. பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. ஆயினும் 2004, 2007ம் ஆண்டுகளில் சுமார் 50,000 ஆல் இது குறைந்துள்ளது. வருடந்தோறும் சனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்ற ஒரு நாட்டில் இத்தகைய குறைவுக் குரிய காரணம் அறியப்பட வேண்டியதொன்றுகும். இக்குறைவு குறிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளதா? என்பதும் மற்றொரு விடயமாகும்.

2. கல்விச் சீர்திருத்தத்தின் முன்னர், பரீட்சைக்கு தோற்றியோரில் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதம் சுமார் 50% ஆக இருந்துள்ளது. ஆயினும் சீர்திருத்தத்தின் பின்னர் தொடர்ச்சியான நான்கு வருடங்களிலும் இது மிகவும் குறைவான நிலையையே காட்டுகின்றது. ஆயினும் 2005 இன் பின்னர் திருப்திகரமான நிலை ஏற்பட்டுவருகின்றது. இங்கு, பல்கலைக்கழகத்திற்கு தகைமை என்பது மூன்று பாடங்களின் சித்தியும் அத்துடன் பொது சாதாரண பரீட்சையில் 30% புள்ளிகளும் பெறப்படுதல் ஆகும். புதிய சீர்திருத்தத்தின் பின்னர் தகைமை பெற்ற மாணவர்களின் சதவீதம் உண்மையில் அதிகரித்த நிலையை காட்டுதல் வேண்டும். வகுப்பறை செயற் பாட்டிற்கு மேலதிகமாக புதிய பல விடயங்கள் மாணவர்களை ஊக்குவிப்புச் செய்திருக்கும்.

3. அடுத்தது பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விடயமாகும். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிக்கப்பட்டு வருவதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கூறுகின்றது. அட்டவணை 6 உம் இதனை மெய்ப்பிக்கின்றது. பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டியது யதார்த்தமாகும். ஆனால் அனுமதி பெற்ற மாணவர்களின் சதவீதம் 2000 தொடங்கி 2003 வரை குறைந்து கொண்டு வந்திருப்பதை அட்டவணை 6 மேலும் எமக்கு புலப்படுத்துகின்றது. சீர்திருத்தத்தின்

முன்னர் சுமார் 8 சதவீதமாக இருந்த அனுமதி வீதம், சீர்திருத்தத்தின் பின்னர் 2003 வரை சுமார் 5 சதவீதமாக மிகவும் குறைந்து இறுதி வருடங்களில் 10 சதவீதமாக அதிகரித்துள்ளது. பரீட்சைக்கு தோற்றும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் அதிகரிப்பும் அமைய வேண்டும். இதுவே கல்வி அபிவிருத்தி என கூறமுடியும்.

## முடிவுரை

புதிய கல்வி சீர்திருத்தம், உலக மாற்றத்திற்கும் நாட்டின் எதிர்பார்ப்பு களுக்கும் ஏற்ப மிகவும் சிறப்பானது என கல்வியாளர்கள் பலராலும் பரவலாகப் பேசப்படுகின்றது. இதுவரை காலமும் இல்லாத பல புதிய செல்நெறிகள் இந்த சீர்திருத்தத்தில் இருப்ப தாகவும் கருதப்படுகின்றது.

எமது நாட்டில் கல்வி அடைவுகளை மதிப்பிடும் ஒரு பிரதான கருவியாக 'பரீட்சை' மாத்திரமே பலராலும் பயன்படுத்தப் படுகின்றது. இதனால் சீர்திருத்தத்தின் பின்னர் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை கள் பத்தின் முடிவுகள் இங்கு ஆராயப்பட்டன. இவை முன்னைய ஐந்து வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டன. இதிலிருந்து புதிய கல்வி சீர்திருத்தம் 2005 ஆண்டின் பின்னரே பாரிய அதிகரிப்பை ஏற்படுத்தி யுள்ளது என்பது தெளிவாகின்றது. 2009ம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 10.5% மானோர் அனுமதி பெற்றிருப்பது சிறந்த அதிகரிப் பாகும். ஆராயப்பட்ட 15 வருடங்களிலும் இது உச்ச நிலையைக்காட்டு கின்றது. க.பொ.த.(உ/த) பரீட்சையின் சித்தி வீதத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளை பாடசாலைகள் நடைமுறைப்படுத்தவேண்டும். பாடத் தெரிவு விடயத்தில் பொருத்தமான ஆலோசனைகளை மாணவர்களுக்கு பாடசாலைச் சமூகம் வழங்கவேண்டும். அதேவேளை க.பொ.த. (உ/த) பரீட்சை அடைவு தொடர்பான பாரிய ஆய்வொன்றை தேசிய ரீதியாக ஆய்வாளர்கள் மேற்கொள்ளவேண்டும். இதன் மூலம் கிடைக்கப் பெறும் பேறுகளும் ஆலோசனைகளும் மாணவர் சமூகத்திற்கு உதவியாக அமையமுடியும்.

11

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்

**அறிமுகம்**

19ம் நூற்றாண்டின் இந்து சமய மேதை. இந்த உலகத்தையே இந்தியாவின் பக்கமும் குறிப்பாக ஆத்மீகத்தின் பக்கமும் திருப்பிய ஒரு வீரத்துறவி. 1863ம் ஆண்டு இவ்வுலகில் அவதரித்து 39 ஆண்டுகள் மட்டுமே புனிதமான வாழ்வு வாழ்ந்து சாதனை படைத்தவர். குறிப்பாக இளைஞர் களுக்கு ஆத்மீக நாட்டத்தை ஏற்படுத்தி வீரம், சுயநலமின்மை, தேசபக்தி, உண்மை, ஒழுக்கம், தொண்டு போன்ற உயர் விழுமியங்களை மக்களுக்கு உபதேசித்தவர். 1893ம் ஆண்டு தனது முப்பது வயதில் அமெரிக்க சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாசபையில் இந்து மத சார்பில் கலந்து கொண்டு வீர முழக்கம் செய்த ஒரே ஒரு இந்து அறிஞர். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை உணர்ந்து தனது குரு இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரில் 'இராமகிருஷ்ண மிஷனை' ஸ்தாபித்து உலகெங்கும் அதன் சேவை தொடர வழிசமைத்தவர். அவரே வங்கத்து சிங்கம் சுவாமி விவேகானந்தர். அவரின் உயரிய வாழ்வு, உன்னதமான போதனைகள், அளப்பரிய சேவைகள் அனைத்தும் இன்று உலகெங்கும் புகழப்படுகின்றன.

'நரேன்' எனும் இளமைப் பெயர் கொண்ட இவருக்கு 6 வயதில் ஆங்கில இலக்கியத்தை கற்பித்தவர் பேராசிரியர் வில்லியம் ஹேஸ்டி. அச்சிறு வயதிலே நரேனின் அபார ஆற்றலைக் கண்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'நரேந்திரன் ஒரு மேதை, நான் பல நாடுகளுக்குச் சென்றிருக்கின்றேன். நரேந்திரன் போல் ஆற்றலும், திறனும் நிறைந்த வர்களை நான் கண்டதே இல்லை. வாழ்வில் தனித்துவமான ஓர் இடத்தை

நிச்சயம் இவன் பொறிக்கப் போகின்றான்.' இதற்கு மேலாக இந்திய பெரியார்களின் கருத்து இவ்வாறு அமைகின்றது.

''நீங்கள் இந்தியாவை அறிய விரும்பினால் சுவாமி
விவேகானந்தரைப் படியுங்கள்.''

- ரவீந்திரநாத்தாகூர்

''நான் விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்டுள்ளேன்.
அதன் பிறகு இந்தியா மீது ஆயிரம் விருப்பு வந்தது.''

- மகாத்மா காந்தி

சுவாமி விவேகானந்தர் சிந்திக்காத விடயங்களே கிடையாது.
அவருக்குத் தெரியாத சித்தாந்தங்களேகிடையாது.
அவரின் அறிவு வேகத்திற்கு தடை கிடையாது.
அவரின் தைரியத்திற்கு எல்லையே கிடையாது.
கிருஷ்ணருக்குப் பின்னர் சுவாமி விவேகானந்தர்.

- மகாகவி பாரதியார்

## குருதேவர் தொடர்பு

1881ம் ஆண்டு நரேனுக்கு 18 வயதாக இருக்கும் போது குருதேவரின் தொடர்பு ஏற்படுகின்றது. ஐந்து ஆண்டுகள் மட்டுமே இத்தெய்வீக தொடர்பு நீடித்தது. இக்காலப்பகுதியில் தன் சந்தேகங்களான

கடவுள் இருக்கிறாரா?
விக்கிரக வழிபாடு அவசியமா?
இந்து மதத்தில் பல தெய்வங்கள் ஏன்?
இறைவனைக் காண்பதற்கு குரு அவசியமா?
இறைவனைக் காண முடியுமா?

போன்ற இக்கால இளைஞர்களுக்கும் இருக்கக் கூடிய வினாக்கள் எல்லாவற்றிற்கும் நரேன் விடை கண்டு கொண்டார். இவ் அனைத்திற்கும் விடையாக குருதேவரே அமைந்து இருந்தார். குருதேவர் கூட பாரதியார் குறிப்பிட்டது போன்று நரேனை 'நாராயணனின் அவதாரமாகவே' கண்டு மகிழ்ந்தார். 1886ம் ஆண்டு குருதேவர் தனது உடலைக் களைந்து கொண்டதும் நரேன் முழுமை சக்தி கொண்டவராக மாற்றம் பெற்றார். குருதேவர் தனது அபார தெய்வீக சக்தி அனைத்தையும் நரேனுக்கு வழங்கியதன் மூலம் அவர் 'சுவாமி விவேகானந்தர்' என்ற நாமம் பெற்றார்.

## உன்னதமான சிந்தனைகள்

சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள் தெய்வீகமானவை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியவை. பலதரப்பட்டவர்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை. மனிதனின் ஆற்றல், எண்ணங்கள், வெற்றிக்கான வழிகள், கடவுள், மதம், கல்வி என்று எல்லாக் கோணத்திலும் இவர் சிந்திக்கத் தவறவில்லை. தற்காலத்தில் மேலைத்தேயத்தில் இருந்து இறக்குமதி யாகின்ற விஞ்ஞான, உளவியல் சார்ந்த கருத்துக்கள் அனைத்தையும் சுவாமி விவேகானந்தர் முன்னமே கூறிவிட்டார்கள்.

## மனிதனின் பெருமை

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்றார் ஔவை மூதாட்டி. 'எல்லாப் பிறவியிலும் மனிதப் பிறவி மகத்தானது' என்பது இதன் கருத்தாகும். இதனை சுவாமிஜீ அவர்கள்

> ''மனிதனே மேலானவன். எல்லா மிருகங்களை
> விடவும், எல்லாத் தேவர்களை விடவும்
> மனிதன் உயர்ந்தவன் மனிதனை விட
> உயர்ந்தவர் யாருமே இல்லை''

என மனிதனின் பெருமையை சுவாமிஜீ அவர்கள் உயர்வாகக் கூறுகின்றார்.

> ''நீங்கள் கடவுளின் குழந்தைகள்
> அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள்
> புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்''

என்று இன்னமும் சிறப்பாக குறிப்பிடுகின்றார். கடவுளின் குழந்தை களாகிய எமக்கு கடவுளின் பண்புகள் யாவும் இருக்க வேண்டும் என்ப தனை இதன் மூலம் சுவாமிஜீ அவர்கள் எடுத்துக் காட்டுகின்றார்.

> ''உனக்கு தேவையான எல்லா வலிமையும்
> உதவியும் உனக்குள்ளேயே உள்ளன''

என்கின்றார். இன்று உலகில் பலர் குறைகள், ஏழ்மை, வறுமை, தோல்வி என்பவற்றைக் கூறிக் காலத்தைக் கழிப்பதை நாம் காண்கின்றோம். இதற்கு சுவாமிஜீ அவர்கள் உனக்கு வேண்டிய அனைத்தும் உனக்குள்ளேயே உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றார். நமது மகிழ்ச்சி, செல்வம், வெற்றி போன்ற அனைத்தையும் நாம் நம்முன்னே வைத்துக் கொண்டு அவற்றை வெளியுலகில் தேடி அலைந்து கொண்டிருக்கின்றோம்.

**எண்ணங்கள்**

ஒருவரின் வெற்றியில், சிறப்பில், மகிழ்ச்சியில், சாதனையில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அவரது எண்ணங்கள் இருப்பதை மெய்ஞானிகளும், தற்கால விஞ்ஞானிகளும் கூறியுள்ளார்கள். பல உளசார் ஆராய்ச்சி மூலமும் இது மெய்ம்மை பெற்றுள்ளது. எமது சுவாமிஜீ அவர்கள் 'எண்ணங்கள்' பற்றி நிறையவே கூறிவைத்துள்ளார்கள். அவற்றுள்,

''வலிமைதான் வாழ்வு, பலவீனமே மரணம்
உன்னைப் பலவீனன் என்று நீ நினைத்தால்
பலவீனனாகிறாய்
வலிமையுள்ளவன் என்று நினைத்தால்
வலிமையுள்ளவனாகிறாய்
நீ எதை நினைக்கின்றாயோ - நீ
அதுவாகவே ஆகிவிடுகிறாய்''

என்பது மிகவும் வேண்டத்தக்கதாகும். இன்று நம்மிடையே பலர் தோல் வியிலும், துன்பத்திலும், வேதனையிலும் துவள்வதற்கு அவர்களது நேற்றைய எண்ணங்களே காரணமாகும். ஒவ்வொருவரும் தமது எண்ணங்களை நேர் எண்ணங்களாக மாற்றிக் கொள்வதன் மூலம் வாழ்க்கையிலும் சாதிக்கலாம் என்பதே சுவாமிஜீயின் கருத்தாகும். இதனை வேறு ஒரு கோணத்தில் சுவாமிஜீ அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.

''சொல் செயல் சிந்தனை ஒன்றாக விளங்கும்
ஒரு சிலரால் இந்த உலகையே ஆட்டிவைக்க முடியும்
மாறாக மக்களின் எண்ணிக்கையோ செல்வமோ
வறுமையோ முக்கியமல்ல''

இதிலிருந்து இல்லாததைப் பற்றி நினைத்து வேதனை அடைந்து காலத்தை வீணாக்குவதை விடுத்து இருப்பதைக் கொண்டு உயர் எண்ணங்களை ஏற்படுத்தி பிறப்பின் பயனை நாம் அடைவதற்கு முயல வேண்டும். இதுவே சுவாமிஜீயின் வழிகாட்டலாகும்.
மேலும்,

''எல்லாப் பேய்களும் நம் மனதிலேதான் இருக்கின்றன
மனம் கட்டுப்பட்டு அடங்கி விட்டால்
எந்த இடத்தில் இருந்தாலும்
அது சொர்க்கமாகிவிடும்''

என்பதன் மூலம் 'மனம் கொண்டது மாளிகை' என்பதனை சுவாமிஜீ குறிப்பிடுகின்றார்.

## சாதனை – வெற்றி

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் சாதிப்பதற்காகவே பிறந்திருக் கின்றான். இருந்தாலும் மிகவும் குறைந்தளவானவர்களே சாதனையை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கின்றனர். சுமார் 700 கோடி உலக சனத் தொகையில் ஒரு சிலரின் நாமங்களே சாதனையாளர் பட்டியல்களிலும் இடம்பிடித்துள்ளது. கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், விளையாட்டு என்று பல சாதனைக் களங்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி சாதனை செய்வதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதற்குச் சுவாமிஜீயின் கருத்துக்கள் நல்ல பக்கபலமாக அமையமுடியும்.

> ''நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்.
> நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விசம்
> கூடச் சக்தியற்றதாகிவிடும்''

என்பது சுவாமிஜீயின் வாக்கு.

> ''எண்ணமும், உறுதியும் சாதனைக்கான படிகள்''

என்று சுவாமிஜீ இயம்புகின்றார். மேலும்,

> ''தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.''

இக்கருத்து தற்கால மாணவர்களுக்கு மிகவும் வேண்டியதாகும். அக - புற தூய்மையும் பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் சாதித்துவிட முடியும் என சுவாமிஜீ கூறுகின்றார். எல்லாவற்றையும் விட எமது காரியத்தை நாம் நேசிக்க வேண்டும். அதில் அன்பு செய்யவேண்டும். கல்வி பயிலும் ஓர் மாணவன் விருப்பமின்றி அக்காரியத்தில் ஈடுபட்டால் இலட்சியத்தை அடைய முடியாது என்பதும் அவர் கருத்தாகும்.

> ''மூன்று விடயங்கள் நமக்கு வேண்டும்
> உணர்வதற்கான இதயம்
> சிந்தனைத் திறனுள்ள மூளை
> வேலை செய்யத்தக்க கைகள்''

என்பதும் சுவாமிஜீயின் மற்றைய உளவியல்சார் கருத்தாகும். தற்காலக் கல்வி முறையில் அறிவு, திறன், மனப்பாங்கு பற்றிப் பேசப்படுகின்றது. இதனைச் சுவாமிஜீ அவர்கள் மூளை (அறிவு), கைகள் (திறன்), இதயம் (மனப்பாங்கு) எனக் குறிப்பிடுகின்றார். அகிம்சாவாதி காந்தியடிகள் கூறிய 3H என்பதும் இந்த விடயத்துடன் ஒத்துப் போகின்றது. H - Head, H - Heart , H - Hand என்பதே இதன் விளக்கமாகும். மேலும்

''அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு
செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்''

என்பதும் சுவாமிஜீயின் அனுபவ சிந்தனையாகும். ஓர் ஆசிரியர், அதிபர், நிர்வாகி. குடும்பத்தலைவன், இல்லத்தரசி என்று பல பாத்திரங்கள் கொண்டவர்களை சமூகத்தில் நாம் காண்கின்றோம். தமது தொழிலில் பற்றற்று வேலை செய்து தமக்கும், பிறருக்கும் துன்பத்தையே சிலர் தினசரி ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். எவ்விதமான கடினமான பணியாக இருந்தாலும் கூட அன்பு வைத்து முழு மனதோடு நாம் காரியத்தில் ஈடுபட்டால் அதில் களைப்பையோ, சலிப்பையோ, வெறுப்பையோ எவரும் காணமுடியாது. மாறாக ஆனந்தத்தை அனுபவிக்க முடியும் என சுவாமிஜீ அவர்கள் கருதுகிறார். அத்துடன்

''அமைதியான மனமே உங்களின் மிக
முக்கிய மூலதனம். அதுவே எல்லா
வெற்றிகளையும் கொண்டு வரும்''

என அமைதியான மனத்தின் முக்கியத்துவத்தையும் சுவாமிஜீ குறிப்பிடத் தவறவில்லை. இத்தகைய அமைதியான மனநிலை அடைவதற்கு மதங்கள் வழிகாட்டுகின்றன.

## மதமும் கடவுளும்

மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கு மதங்கள் அவசியமாகின்றன. மதம், கோட்பாடுகள், விழுமியங்கள் என்பன மனிதனை அறநெறிப் பண்பாளனாக மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றன. இது தொடர்பாகவும் சுவாமிஜீ அவர்கள் கூறத்தவறவில்லை.

''மனிதனுக்கு மன அமைதியைத் தருவதுதான்
மதத்தின் அடிப்படை இலட்சியமாகும்''

என்பது சுவாமிஜீயின் கருத்தாகும். இன்று பணம் இருந்தும் புகழ் இருந்தும் வாய்ப்பு வசதிகள் இருந்தும் அநேகர் மன நிம்மதியின்றி நோயாலும், பிரச்சினைகளாலும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் மனநிறைவைத் தருவது மதத்தின் அடிப்படை என்பதே இவரது இக்கருத்தாகும்.

''கடவுளிடம் பயப்படுவது என்பதே
மதத்தின் தொடக்கம் அன்பு கொள்வதே
மதத்தின் முடிவு ஆகும்''

என்பதும் சுவாமிஜீயின் மற்றுமொரு ஆத்மீக வாக்காகும். ஒருவருக்கு கடவுள் பயம் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் பாவச்செயல களைச் செய்வதற்கு அவரது மனம் நாட்டங் கொள்ளாது. கோயில் வழிபாடு என்று அலைந்து திரிபவர் பலர் இன்று இறைபயமின்றி அதர்மத் திலும், பொய்மையிலும் வாழ்ந்து வருவதை நாம் காண்கின்றோம். இது உண்மையான கடவுள் நம்பிக்கையாகவும் வழிபாடாகவும் இருக்க முடியாது. மேலும் திருமூலர் கூறியது போன்று 'அன்பே சிவம்' என்பதை சுவாமிஜீ அவர்கள் இங்கு வலியுறுத்தி உள்ளார்கள். எல்லா உயிர்களிலும் 'அன்பு' செய்யும் பக்குவம் மனிதனுக்கு ஏற்பட்டு விட்டால் அவன் மதத்தில் முடிவு நிலையை அடைந்துள்ளான் என்பதையும் சுவாமிஜீ அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

''கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கின்றார்.
இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுளும் இல்லை.
இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு
நான் புரிந்து கொண்டேன். மக்களுக்கு சேவை செய்பவன்
உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்கிறான்.''

என்கின்ற செய்தி மூலம் பல வருட தவங்களுக்குப் பிறகு பெற்ற அனுப வத்தை சுவாமிஜீ அவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

உண்மையிலே கடவுளுக்கான சேவை என்பது மக்களுக்கான உன்னத சேவையாகும். சுவாமிஜீயின் இந்தக் கருத்துக்கு சாதகமான கருத்தையே புத்தர், இயேசு, நபிகள் போன்ற அவதார புருஷர்களும் அருளிச் செய்துள்ளார்கள்.

## கல்வி – அறிவு

'கல்வி' தொடர்பான எண்ணக்கருக்கள் மாறிக்கொண்டே வருகின்றன. மேலைத்தேயத் தத்துவவியலாளர்கள் கல்விக்கான பல வரைவிலக் கணங்களைத் தந்துள்ளார்கள். சம காலத்திலும் புதிய கல்விச் செல் நெறிகள் தோற்றம் பெற்ற வண்ணமுள்ளன. ஆயினும் சுவாமி விவேகா னந்தரின் கல்வி தொடர்பான சிந்தனைகள் எந்த நவீன யுகத்திற்கும் பொருந்தும் வண்ணம் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

> ''மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும்
> பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான்
> கல்வியாகும்''

என்கிறார் சுவாமிஜீ அவர்கள். இதன் மூலம் ஆசிரியர்கள் எதனையும் புதிதாக மாணவர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை. மாணவரிடையே அனைத்தும் மறைந்து போயுள்ளன. இவற்றை வெளிப்படுத்துவதே கல்வி எனக் கூறும் சுவாமிஜீ அவர்கள் தற்காலத்தில் பரவலாகப் பேசப்படுகின்ற 'மாணவர் மையம்' என்ற விடயத்திற்கு இதன் மூலம் உயிரோட்டம் கொடுத்துள்ளார்கள்.

> ''கல்வி என்பது ஒருவரின் மூளையில்
> பல விடயங்களைத் திணிப்பதன்று
> அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள்
> நன்றாக ஜீரணமாகி பயன்படவேண்டும்''

என்று சுவாமிஜீ அவர்கள் கருதுகிறார். பொய்யாமொழிப் புலவரின்

> ''கற்க கசடற கற்றவை கற்ற பின்
> நிற்க அதற்குத் தக''

என்ற குறளுக்குச் சாதகமாக நடத்தை மாற்றத்தின் முக்கியத்துவம் இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

> ''நூல்களைக் கற்கலாம், சொற்பொழிவுகளைக்
> கேட்கலாம், பலமணி நேரம் தொடர்ந்து பேசலாம்.
> ஆனாலும் அனுபவமே சரியான ஆசான்
> அதுவே உண்மையான கல்வி''

என்று கல்விக்கான மற்றுமொரு பரிணாமத்தை சுவாமிஜீ அவர்கள் முன் வைக்கின்றார்கள். இதன் மூலம் அனுபவக் கல்விக்கு மிகவும் கூடிய முக்கியத்துவத்தை சுவாமிஜீ அவர்கள் கொடுக்கின்றார்கள். தற்காலத்தில்

பேசப்படுகின்ற 'திறன்' சார்ந்த விடயங்களை சுவாமிஜீ அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டார்கள்.

**முடிவுரை**

சுவாமி விவேகானந்தர் ஓர் அவதாரப் புருசர். உலகம் போற்றும் மேதை. அவரைப் பற்றி எழுதுவதும், பேசுவதும் எல்லைப்படுத்த முடியாத விடயங்களாகும். கட்டுரையின் விரிவு அஞ்சி சில விடயங்கள் மாத்திரம் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. தெய்வீகத் தன்மைகொண்ட சுவாமிஜீ அவர்களை நினைப்பதும், பேசுவதும், எழுதுவதும், துதிப்பதும் கிடைத்தற்கரிய பேறுகளாகும். அவரின் பெயரை உச்சரிக்கும் பொழுதே எம்முள் ஓர் சக்தி வெளிப்படுவதை நாம் உணரமுடியும். அவரின் ஆழமான தெய்வீகச் சிந்தனைகள் எம் அனைவரையும் என்றும் வழி நடத்தட்டும்.

''ஒரே ஒரு மனிதனுக்கு
நல்வழியில் பயிற்சி அளிப்பதற்காக
நூறாயிரம் பிறவி எடுப்பதற்கும்
நான் தயாராக இருக்கின்றேன்''

என சுவாமிஜீ அவர்களே கூறியுள்ளார்கள். ஆகவே அவர் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து எம்மை நல்வழிப் படுத்திக்கொண்டே இருப்பார் என நாம் எதிர்பார்க்கமுடியும்.

# 12

# சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கல்விப் பணி

## அறிமுகம்

அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

- புரட்சிக்கவி பாரதியார் -

தமிழணங்கு பெற்ற தவப்புதல்வருள் ஒருவராக முற்றிய துறவியாக, முத்தமிழ் வித்தகனாக, துறவுக்குப் புதியதொரு பரிமாணங்கண்டு மனித நேயத்துடன் வாழ்ந்து வந்த பெருந்தகை சுவாமி விபுலாநந்த அடிகள். தன்னலம் சிறிதுமின்றி தமிழினத்தின் மேம்பாட்டுக்காகப் பணிகள் பல ஆற்றிய பெருமைக்குரியவர் எமது தமிழ் துறவி விபுலாநந்தர்.

தற்பற்றின்றி தமிழ்ப்பற்றுடன் துலங்கிய தமிழத்துறவு ஒன்று இளங் கோவடிகள் தொடக்கம் நாவலர், விபுலாநந்தர், தனிநாயக அடிகள், பண்டிதமணி வரை வளர்ந்து வந்தமையை நாம் அறியமுடிகின்றது. தமிழ்ப் பணியும், கல்விப்பணியும் இத்துறவுப் பணிகளில் ஒன்றை யொன்று பிரிக்கமுடியாதவாறு இணைந்து வளர்ந்துள்ளன.

1916 இல் விஞ்ஞான டிப்ளோமாவுடன், மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சையிலும் சித்திபெற்ற விபுலாநந்தர் வேதாந்தம், சைவசித் தாந்தம், மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவர். முத்தமிழாம் இயல், இசை, நாடகம் மூன்றின் திறன் உணர்ந்தவர். மேற்கத்திய உலகின் கல்வி நெறியையும், தமிழ் மரபுச் சான்றாண்மைக் கல்வி நெறியையும் ஆழ்ந்த நோக்கில் உணர்ந்து புதிய கல்வி நெறி கண்டவர். பிளட்டோ, ரூசோ, கார்ல்மாக்ஸ், காந்தியடிகள், சுவாமி விவேகாநந்தர் போன்றோரின் கல்விச்

சிந்தனைகளுக்கு ஒப்ப சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகளும் இன்றைய நிலைமைகளுக்கு பொருந்துவனவாக உள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் ஆசிரியராகவும், இராமகிருஷ்ண சங்கக் கல்வி நிலையங்களின் முகாமையாளராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினதும் இலங்கைப் பல்கலைக்கழகத்தினதும் முதற்தமிழ் பேராசிரியராகவும், கல்வி ஆய்வுக்குழு, பாடவிதானசபை, பரீட்சைச் சபை போன்றவற்றின் உறுப்பினராகவும் விளங்கிய சுவாமி விபுலாநந்தர் கல்வித்துறையில் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். 'ஆளுமையையும், நல்லொழுக்கத்தையும், மனவலுவையும், தன்னம்பிக்கையும் வளர்ப்பது கல்வி' என்று சுவாமி விவேகாநந்தர் கூறினார். அவரது வழியைக் கடைப்பிடித்த சுவாமி விபுலாநந்தர் வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்துகொள்வதற்கும், உள்ளத்தையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், சமூகத்தோடு பொருந்தி வாழ்வதற்கும், ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கும், சமரச சமத்துவ உணர்வினை வளர்ப்பதற்கும் உதவுவதாக கல்வியைக் கண்டார். சமயக்கல்வி, விஞ்ஞானக்கல்வி, பெண்கல்வி, அழகியற்கல்வி, உடற்கல்வி, மொழிக்கல்வி, பல்கலைக்கழக கல்வி எனப் பல விடயங்களைப் பற்றி அவர் தெளிவோடு விளக்கினார்.

வாழ்நாள் முழுவதும் கல்வியை ஒருவன் தொடரவேண்டும் என்றும், சிந்தனைத் தெளிவையும், வாக்குத் தெளிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், கற்றவற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உண்மையான ஒரு கல்விமான், மனிதர் மத்தியில் ஓர் இளவரசனைப்போல விளங்குவான் என்றும், செல்லுமிடமெல்லாம் வலிமையையும் தூய்மையையும் அவன் பரவச்செய்வான் என்றும், நன்மையின் சக்தியாக அவன் விளங்குவான் என்றும் சுவாமி விபுலாநந்தர் கூறினார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய புலவர் கணியன் பூங்குன்றன் அவர்களை உண்மையான ஒரு கல்விமான் எனப் போற்றியுள்ளதிலிருந்து 'கல்விமான்' பற்றிய அவரது கணிப்பினை நாம் அறிந்து கொள்ளலாம்.

'மன்னுயிரனைத்தினையும் தன்னுயிர்போல கருதுகின்ற நற்குணத்தை இளம்பிராயத்திலேயே நிலைபெறச் செய்ய வேண்டும்' என்று சுவாமி விபுலாநந்தர் சிறுவர் கல்வி பற்றி மிகுந்த அக்கறை செலுத்தினார். 1914ல் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆண்டு மலரில், பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியராக இருந்தபோது அவர் ஆங்கிலத்தில் எழுதிய முதல் கட்டுரையில் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், குழந்தை

களின் இயல்புகளைப் பரிவோடு புரிந்து கொண்டு, ஆசிரியர்கள் அவர்களை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் ஆரோக்கியமும் உற்சாகமும் அளிக்கும் இதமான சூழலின் தேவை பற்றியும் மொழிக்கல்வி, ஒழுக்கக்கல்வி, சமயக்கல்வி ஆகியவற்றின் இன்றியமையாமை பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைகளுக்கு இசைவான சூழலில் மிகுந்த பரிவோடு கல்வி ஊட்டப்பட வேண்டுமென்று சுவாமி விபுலாநந்தர் கருதினார். கல்வியின் வாயிலாக மனிதர்களை உருவாக்கும் பணியில் ஓர் ஆசிரியர் பெறும் முக்கியத்துவம் குறித்தும், அவருக்கு இருக்க வேண்டிய ஆற்றல்கள், பண்புகள் குறித்தும் சுவாமிகள் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். 'எதைக் கற்பிக்கின்றார் என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்பிக்கிறார் என்பதுமாகும்' என்று அவர் வலியுறுத்தினார்.

சுவாமி விபுலாநந்தர் தாய்மொழி மூலமான கல்வியை வற்புறுத்திய தற்கான முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, கற்பவனின் சுயசிந்தனை வளர்ச்சிக்கு அதி கூடிய அனுகூலமாக அமையும், மற்றயது அவனுடைய சமூகம் அதனால் கூடிய பயனைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பதாகும். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தாய்மொழியே, போதனா மொழியாக இருக்க வேண்டும் என்பதனை சுவாமி அவர்கள் வலியுறுத்தினார். ஓரினத்தின் மொழி தவிர்ந்த வேற்று மொழியில் கல்வி பயிலுதல் அவ்வினத்தின் கலாசாரத்தையும், கல்வி முறையையும் மழுங்கடிக்கும் செயலாகும் என்ற சிந்தனையை முன்வைத்து விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைத் தமிழ்மொழியில் போதிப்பதற்கு வேண்டிய தமிழ் சொற்களை ஆக்கும் பணிகளிலும், ஆங்கில நூல்களை மொழி பெயர்ப்பு செய்வதிலும் முன்னின்று உழைத்தார். சென்னை பச்சியப்பன் கல்லூரியில் இடம்பெற்ற 'கலைச் சொல்லாக்க அமுலாக்கல் குழுவின்' தலைவராக இவர் விளங்கியமை இதற்குச் சான்றாகும்.

1922 இல் சென்னை மயிலாப்பபூரில் இருந்த இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்ற சுவாமி விபுலாநந்தர் துறவு பூணுவதற்கு முன்னர் யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றினார். இக்காலத்தில் யாழ்ப் பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த தேசிய மறுமலர்ச்சிக்கழகமாக 'யாழ்ப் பாணம் இளைஞர் காங்கிரஸ்' விளங்கியது. இச்சங்க செயற்பாட்டிற்கு சுவாமி விபுலாநந்தர் அயராது உழைத்தார். இதனூடாக நாட்டிற்கு

பொருத்தமான கல்விச் சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கி அக்கால ஆங்கில அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

1925 இல் இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்ற அடிகளார், 1926 இல் யாழ்ப்பாணத்தில் அனாதை இல்லத்தை ஆரம்பித்து அனாதைச் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். 1929 இல் மட்டக்களப்பில் சிவாநந்த வித்தியாலயத்தை ஸ்தாபித்து ஏழைகளுக்கான கல்வி வாய்ப்பினை மேலும் விரிவுபடுத்தினார்.

1943 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக ஆனதும் அதுவரை தமிழ்மொழிப்பாடத்தை ஆங்கில மொழி மூலம் பயின்று பரீட்சைக்கு தோற்றிய நிலையை மாற்றி, தமிழ்மொழியிலே பயின்று, தமிழ் மொழியிலே பரீட்சை எழுத வழி செய்தார். இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற அழகியல் கல்வியை பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, அதில் வெற்றியும் பெற்றார். 'உள்ளத்தைப் பண்படுத்தி உயர்வுக்கு வழி சமைப்பது அழகியற்கல்வி' என்பது அடிகளார் கருத்தாகும். பல ஆண்டுகளாக இசை ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாக யாழ் நூல், மதங்க சூளாமணி எனும் நாடகத் தமிழ் நூல்களை உருவாக்கினார். இது அடிகளாரின் அழகியல் கல்வி புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்விரு நூல்களும் அகில உலகும் போற்றும் நூல்களாக சிறப்புப் பெற்றுள்ளன.

'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்பது சுவாமி விபுலாநந்தரின் முத்தான மொழியாகும். உடல், செயற்பாடு, சடங்கு அனைத்தையும் மேவி உளச்செயற்பாட்டின் முக்கியத்துவத்தை சுவாமி அவர்கள் எடுத்துக்காட்டுகின்றார். இக்கருத்து சுவாமி அவர்களின் உளவியற் சிந்தனைக்கு சான்று.

''கல்வி மக்களை சேவைக்கு கொண்டு செல்லவேண்டும் என்றும், இதனால் கற்றோர் சமுதாயமே சான்றோர் சமுதாயம்'' என்பதும் சுவாமியின் சீரிய கருத்தாகும். சுவாமி விபுலாநந்தரின் ஒவ்வொரு கருத்துக்களும் ஆழமானவையும், தீர்க்க தரிசனமிக்கதும் ஆகும். தற்போது பரவலாக பேசப்படுகின்ற கல்வி உரிமைகள், சமய வாய்ப்புகள், சுய மொழிக்கல்வி, தொழிநுட்பக்கல்வி என்பவை பற்றி எல்லாம் சுவாமி அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டார்கள். தற்போது நடைமுறையிலுள்ள புதிய கல்வி சீர்திருத்தத்திலுள்ள அடிப்படையான

'ஐந்து திறன்கள்' பற்றியும் சுவாமி அவர்கள் முன்னரே சிந்தித்து விட்டார்கள்.

சுவாமி அவர்களுக்கு எல்லாத்துறைகளிலும் வல்லமை இருந்தது. தமிழ்மொழி, ஆங்கிலமொழி இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். கணிதம், விஞ்ஞானம், கலை ஆகிய எல்லாத் துறைகளிலும் வேறு ஒருவரால் இவ்வாறு புலமை பெற முடியாது என்றால் அது மிகையாகாது. 'வித்தகர்' என்பது சுவாமியின் புலமைக்கு ஒரு பரிசாகும்.

கல்விப் பணிக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் சுவாமி அவர்கள். 'கல்விப் பணி செய்தார் கடவுள் பணி செய்தார்' என்பதற் கிணங்க தமிழ் உலகம் உள்ளவரை சுவாமி அவர்கள் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

## உசாத்துணை (Reference)


பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழு (2011 / 2012), 'இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதி', இலங்கை.

ஷவ்கெரா (2010), 'உங்களால் வெல்லமுடியும்' Macmillan India Press, Chennai.

பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு (2009), 'இலங்கையின் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டகம்'.

கினிகே, I.L. (2008), 'புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக்கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும்', வரையறுக்கப்பட்ட தீபானி அச்சு / வெளியீட்டு கம்பனி, நுகேகொடை.

கினிகே, I.L. (2008), 'தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத் திட்டமும் செயற்பாட்டு திட்டங்களும்', வரையறுக்கப்பட்ட தீபானி அச்சு / வெளியீட்டு கம்பனி, நுகேகொடை.

தேசிய கல்வி நிறுவகம் (2004), 'செயற்றிட்டங்கள் க.பொ.த. (உ/த)', மகரகம.

சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (1999), 'தேசிய மட்டத்திலான கணித ஆய்வு', இலங்கை.

ஜயசேன புத்பிட்டிய (1999), 'ஆசிரியர் சேவையும் ஆசிரியர் வாண்மையும்', Janaka Printers, Maharagama.

பொதுக்கல்விக்குரிய ஜனாதிபதியின் துரித செயற்குழு (1997), 'பொது கல்வி சீர்திருத்தங்கள்', இலங்கை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம் (1992), 'தேசியகல்வி ஆணைக் குழுவின் முதலாவது அறிக்கை', கொழும்பு.


சிவசுப்பிரமணியம், வ. (1993) 'விபுலாநந்த தரிசனம்', புனித செபத்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

கணபதி, ரா. (1979), 'சுவாமி விவேகானந்தர்', ராமகிருஷ்ண மடம், அச்சகம், சென்னை.

Cambridge Education Consultants (2004), 'Action Research in Primary Mathematics', NIE.

Grey Altwood (1994), 'Statistics' Great Britain, Bath Press, Bath.

Ministry of Education (2001), 'Achieving Excellence with Equity', Sri Lanka.



# ஆசிரியம் வெற்றிபெற.....

க. ஞானரெத்தினம்



இந்நூலாசிரியரை 1986 ஆம் ஆண்டு நான் கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் அதிபராக இருந்த வேளை முதன் முதலில் சந்தித்தேன். விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராக முதல் நியமனம் பெற்று எமது ஆசிரியர் குழாமில் இணைந்து 17 வருடங்கள் சிறப்பான சேவை செய்தவர். அதன் பின்னர் மட்/ சிவாநந்த வித்தியாலயத்தில் தனது பணியை மேற்கொண்டவர்.

குருக்கள்மடத்தில் கணபதிப்பிள்ளை சந்திரசோதி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக இவர் பிறந்தார். இவரது தந்தையார் பொன். கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகவும் கல்வி நிர்வாகசேவை அதிகாரியாகவும் கடமை வகித்தவர். மேலும் இளஞ்சைவப்புலவரான இவர் சிறந்த சமூகசேவை யாளரும் கூட. நூலாசிரியர், தனது ஆரம்பக்கல்வியை குருக்கள்மடம் மெ.மி.த.க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மட்/ சிவாநந்த வித்தியாலயத்திலும், கல்லூரி நிலையை மட்/ புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றவர். 1984 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்து ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட இவர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவனாக தெரிவு செய்யப்பட்டு இதில் திறமைச் சித்தியும் பெற்றுக் கொண்டார். பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப் பட்டத்தைப் பூர்த்திசெய்து தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் தத்துவமாணிப் பட்டத்தைப் பயின்று வருகின்றார். 25 வருடங்களாக க.பொ.த. உ / த வகுப்பிற்கு தொடர்ச்சியாக கணித பாடத்தைக் கற்பித்து கல்முனைப் பிரதேசத்தில் பல மாணவர் பொறியியல் பீடம் செல்வதற்கு வழிகாட்டிய இவர், ஆசிரியர் கல்வியில் ஈடுபாடு கொண்டு 1994 ஆம் ஆண்டு முதல் திறந்த பல்கலைக்கழகத்தில் முதன்மை ஆசிரியராகவும், வருகைதரு விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும் கடமையாற்றி தற்போது கல்விப் பீடத்தில் நிரந்தர விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார்.

எனக்குத் தெரிந்தவரை சிறந்த ஆற்றலும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவர் பல சமூக அமைப்புகளுக்கு தலைவராகவும் கடமையாற்றுகின்றார். கமு/ கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் 'அதிபர் திலகம் S.A.I. மத்தியூ புலமைப்பரிசில் நிதியத்தையும்', மட்/ குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தில் 'அமரர் பொன். கணபதிப்பிள்ளை புலமைப்பரிசில் நிதியத்தையும்' இவர் தோற்றுவித்தார். மேலும், என்னுடன் இணைந்து கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் முதன்மைச் சித்திபெற்ற மாணவருக்காக 'சுவாமி ஜீவனானந்தாஜீ புலமைப் பரிசில்' என்பதனையும் நடைமுறைப்படுத்தியவர். இவரின் சமூக சேவையைப் பாராட்டி அகில இன நல்லுறவு ஒன்றியம் இவருக்கு 2012 ஆம் ஆண்டில் ''சாம ஸ்ரீ தேசமான்ய'' எனும் கௌரவப் பட்டத்தை வழங்கி பெருமைப்படுத்தியது.

அவரின் செம்மனத்தை என்றும் வியக்கும்

கலாநிதி. அருட்சகோதரர் S.A.I. மத்தியூ A.C

யம்: கல்வியியல்

ISBN 978-955-659-404-1

9 789556 594041

விலை ரூபா 250.00

# 590